# தேசிய லொத்தர் சபை

வருடாந்த அறிக்கை 2021

# உள்ளடக்கம்


## 01 மேலோட்டம்

கூட்டாண்மைத் தகவல்கள் மற்றும் வழிகாட்டல் கோட்பாடுகள் 4
உற்பத்தி வரிசை 19

## 02 முகாமைத்துவத்தின் அறிக்கைகள்

தலைவரின் ஆய்வு 27
பிரதான நிதி உத்தியோகத்தரின் செயலாற்றல் அறிக்கை 33
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை 35

## 03 நிதிக் கூற்றுகள் மற்றும் தகவல்கள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 37
வருமானக் கூற்று 47
விரிவான வருமானக் கூற்று 47
நிதி நிலைமைக் கூற்று 48
காசுப்பாய்ச்சல் கூற்று 49
உரிமைத்து வமாற்றங்களின் கூற்று 51
நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் 52

## 04 செயற்பாட்டு மற்றும் நிதி மீளாய்வு

நிதிசார் முக்கிய குறிகாட்டிகள் 90
மொத்த செயற்பாடு 91
உற்பத்தி ரீதியான செயற்பாடு 92
பத்தாண்டுகால செயற்பாடுகளின் மீள்பார்வை 97

# 1

# மேலோட்டம்

# கூட்டாண்மைத் தகவல்கள் மற்றும் வழிகாட்டல் கோட்பாடுகள்
## கூட்டாண்மைத் தகவல்கள்

### நிறுவனத்தின் பெயர்
தேசிய லொத்தர் சபை

### சட்டவடிவம்
1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வைத்தியசாலைகள் லொத்தர் நீக்கப்பட்டதன் பின்னர் தேசிய லொத்தர் சபை (தே.லொ.ச) உருவாக்கப்பட்டது. 1997 ஆம் ஆண்டின் 35ஆம் இலக்கத் (திருத்தச்) சட்டத்தின் மூலமும் 1998 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கத் (திருத்தச்) சட்டத்தின் மூலமும் மேற்படிசட்டத்தின் சில விதிகள் நீக்கப்பட்டுத் திருத்தங்கள் செய்யப்பட்டன

### தாபிக்கப்பட்ட ஆண்டு
1963

### நிதியாண்டின் முடிவு
டிசம்பர் 31

### பதிவு செய்யப்பட்ட அலுவலகம்
| | | |
|---|---|---|
| முகவரி | : | இல. 32, தேசமான்ய என்.டபிள்யூ.ஜே. முதலிகே மாவத்தை கொழும்பு 01. |
| தொலைபேசி | : | 0114607000, 0114607001 |
| தொலை நகல் | : | 0114669443, 0114669475, 0114669463 |
| மின்னஞ்சல் | : | info@nlb.lk |
| இணையதளம் | : | www.nlb.lk |

### கணக்காய்வாளர்கள்
கணக்காய்வாளர் தலைமை அதிபதி,
தேசிய கணக்காய்வு அலுவலகம்,
இல. 306/2 பொல்துவ வீதி,
பத்தரமுல்ல.

### வங்கியாளர்கள்
மக்கள் வங்கி
இலங்கை வங்கி
சம்பத் வங்கி

# தூர நோக்கு

நாட்டின் சமூக - பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு அனைத்து சமூகத்தினரதும் பங்களிப்புடன் தேசிய முதலீட்டை உருவாக்குவதில் முதன்மை வகித்தல்.

# செயற்பணி

தேர்ச்சியும் அர்ப்பணிப்பும் மிக்க ஊழியர்களோடு, நவீன தொழில்நுட்பத்தின் துணைகொண்டு புதிய லொத்தர்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்திசெய்து,அவர்களது நம்பிக்கையை வென்று, அற்புதமான நாடொன்றை நோக்கிப் பயணிக்கின்ற சமூகப் பொறுப்புமிக்க நிறுவனமாதல்.

## நிறுவன நோக்கங்கள்

- அரசாங்கத்தின் அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நிதியை உருவாக்குதல்.
- அரசாங்கத்திற்கு வருமானத்தை ஈட்டிக்கொடுக்கும் நிறுவனங்களிடையே முதன்மை நிறுவனமாதல்.
- மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.
- நாட்டின் வேலை வழங்கலுக்குப் பங்களிப்புச் செய்தல்.

## சபையின் குறிக்கோள்கள்

- தற்போதைய வருமானம் மற்றும் இலாபமீட்டல் மட்டத்தை அதிகரிக்கச் செய்து அரசாங்கத்துக்கு வழங்கும் பங்களிப்பை அதிகரித்தல்.
- சந்தையின் தலைமைத்துவ நிலையைப் பேணுதல்.
- செயற்பாட்டுவினைத்திறமையை விருத்தி செய்தல்.
- நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல்.
- பணியாளர்கள் மத்தியில் வினைத்திறமையையும் செயற்திறனையும் விருத்தி செய்தல்.
- வாடிக்கையாளரின் திருப்தியை உச்சப்படுத்துதல்.

## மை விழுமியங்கள்

- நாம் பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடு உடையவர்கள்.
- நாம் நேர்மையானவர்களென்பதுடன் வெளிப்படையானவர்கள்.
- நாம் கூட்டு முயற்சிகளிலும் தேர்ச்சியிலும் நம்பிக்கைக் கொண்டவர்கள்.
- நாம் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மாற்றத்தை விரும்புவோர்.
- நாம் உயர் வாடிக்கையாளர் சேவையில் நம்பிக்கை கொண்டவர்கள்.

# தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை



தலைவர்
**திரு. லலித் பியும் பெரேரா**
Attorney – at-law
LLM (Business Law) Kingston, UK

## பணிப்பாளர் சபை



**திரு. கலும் பிரியங்கர லியனகே**
பணிப்பாளர் - தேசிய இளைஞர் சேவை மன்றம்



**திரு. டி.டி. ஜயசிறி**
உதவிக் கண்காணிப்பாளர் (ஓய்வுபெற்ற)
ஊழியர் சேமநிதியத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி



**திரு. எச்.சி.டி.எல். சில்வா**
(MPM.BSc.Pub.Admin. Hon., FPFA, CBA, MAAT, CIPFA)
பணிப்பாளர் நாயகம்
திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம்
நிதி அமைச்சு



**திரு. அசங்க டயனாத் ரந்தெனிய**
Attorney – at-law
LLB(Hons.) Sri Lanka, BA (SP.) (Hons.)
Colombo.

# உயர் முகாமைத்துவம்



**திருமதி. வை.கே. ஷிரோமி ஜீவமாலா**
MBA (e governance)
University of Moratuwa
MA (Peradeniya)
SLAS (Class I)
பொது முகாமையாளர்



**திரு. சஞ்ஜீவ எதிரிசிங்க**
Attorney –at-Law
MBS (Colombo)
மேலதிக பொது முகாமையாளர்



**கலாநிதி திரு. ஹர்ஷ பண்டார**
DBA, MBA, FCMA(UK), FCCA (UK), AMSLIM, FCMA(SL), FCPM, FCAA, CGMA.
பிரதம நிதியியல் அலுவலர்

# சிரேஷ்ட முகாமைத்துவம்



**திருமதி. கீதா பெரேரா**
பிரதிப் பொது முகாமையாளர்
(செயற்பாட்டு நிதி)



**திருமதி. ஷியாமினி பாலசூரிய**
Attorney –at- law,
Notary public & Commissioner for oaths,
பிரதிப் பொது முகாமையாளர்
(நீதி மற்றும் சபைச் செயலாளர்)



**திருமதி. குமுதினி மடலுஸ்ஸ**
B.Com. சிறப்பு (1st Class Hons - Peradeniya)
பிரதிப் பொதுமுகாமையாளர் (பதில்)
(வருவாய் நிதி)

# மத்திய நிர்வாகம்



**திரு. மெனுற சதுரங்க**
MBA(Reading),BBA
உதவிப் பொதுமுகாமையாளர் (விற்பனை)



**திரு. கே.எ. அச்சல ஜயதிலக**
B.Sc(MIS),DCSD (NIBM),MBCS,MCSSL,MICS
உதவிப் பொது முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்)



**திரு. டி.எஸ். வீரரத்ன**
MBM(Reading), B.Sc(Special-BM)
உதவிப் பொது முகாமையாளர் (நிர்வாகம்)



**திருமதி. எச்.எம். சந்ரா ஹேரத்**
BA, Adv.Dip. HR
உதவிப் பொது முகாமையாளர் (முகவர் நிர்வாகம்)



**திருமதி. ஆர்.எ. தனுஜா சம்மானி**
MFE, BBA (Special-Accountancy)
உள்ளகக் கணக்காய்வாளர்



**திருமதி. பி.ஜீ.டி. நந்திகா றொஷானி டி சில்வா**
B.com (சிறப்பு)
உதவிப் பொதுமுகாமையாளர் (நிதி)

# மத்திய நிர்வாகம்



**திரு. கசுன் குருதுகும்புற**
PHD (Reading), MBS
உதவிப் பொதுமுகாமையாளர் (வழங்கல் மற்றும் விநியோகம்)



**திரு. கபில சேனநாயக**
MBA(Reading)
உதவிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்)



**திரு. கிறிஷான் டி. ஜயசிங்க**
MSc (IT & Mgt), B.Sc. (Physics)
உதவிப் பொது முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்)



**திரு. டி. சுனெத் ஜயவர்தன**
BBM(Special-Marketing)
உதவிப் பொது முகாமையாளர் (பெறுகை)



**திரு. சதுர பிரசன்ன பெரேரா**
பட்டயக் கணக்காளர்
MBA(Reading), B.Sc. Accounting (Special)
உதவிப் பொது முகாமையாளர் (நிதி)

# கனிஷ்ட நிர்வாகம் (உள்ளக)

1 **திருமதி. டபிள்யூ. தமாரா பெரேரா**
பொது மக்கள் தொடர்பு அதிகாரி

2 **திரு. எஸ்.டி.எ. விதான**
MIAE, NDT Auto Eng,IAE II,CGTTII(Auto)
போக்குவரத்து அதிகாரி

3 **திரு. லசந்த ரவிந்ர குமார**
விற்பனை அதிகாரி

4 **திருமதி. கே.எம்.சீ. சுபாஷினி காங்கர**
விற்பனை அதிகாரி

5 **திருமதி. தனீஷா குணசேகர**
MBA, B.com (Accounting & Finance)
நிதி அதிகாரி

6 **திருமதி. எம்.ஜீ. விமுக்தி கௌசல்யா**
MBS, PG Dip (HRM),PQHRM
நிர்வாக அதிகாரி

7 **செல்வி. எல். சஞ்ஜீவனி**
MBA, PQHRM
பிரத்தியேக உதவியாளர்

8 **திருமதி. டி.எம்.டி. லொஷாந்திகா**
MA (Mass com) (Reading), PGDip.
(Human Rights), BA
தொடர்பாடல் அதிகாரி

9 **திருமதி. கே.எல்.பி.ஐ. குணவர்தன**
BA
மேம்படுத்தல் அதிகாரி

10 **திரு. என். அருண டி சில்வா**
லொத்தர் கட்டளைகள் தொடர்பான அதிகாரி

11 **செல்வி. பிரியானி ஹிங்குறுதுவ**
பரிசு தொடர்பான கொடுப்பனவு அதிகாரி

12 **திருமதி. எச்.எ. தீபாபிரியங்கனி**
காசாளர்

13 **திரு. நிரோஷன் விஜயவர்தன**
பெறுகை அதிகாரி

14 **செல்வி. என்.என்.எம்.எ. உபேகா நில்லே கொட**
MA,PGDip.(Economics),BA
மனிதவள அதிகாரி

15 **திரு. எ.எம். தனுஷ்க அத்தநாயக**
B.com (Special)
சீட்டிழுக்கப்படும் லொத்தர் அதிகாரி

16 **திருமதி. ஷிரானி களுபஹன**
முடிவுறுத்தல் மற்றும் சோதித்தல் அதிகாரி

17 **திரு. ஜீ.வி.ஜீ. ரோகன ஹெட்டிஆராச்சி**
விநியோக அதிகாரி

18 **திருமதி. எஸ்.எம். அசங்கா சமரதுங்க**
BA
சந்தைப்படுத்தல் அதிகாரி

19 **திரு. ஜே.எம். அமில மதுசங்க**
NDES(Civil Engineering)
பராமரிப்பு அதிகாரி

20 **திரு. ஜே.கே.டி. புத்திக ஜயநெத்தி**
B.Sc(Special-Agriculture)
உடனடி லொத்தர் அதிகாரி

21 **திரு. கே.எஸ்.எம். பெர்ணான்டோ**
PGDip (MIT), B.Sc(MIS),
HDCBIS(NIBM), DCSD (NIBM), MBCS, MCSS
கணினி நிர்வாகி / நிரல் ஆய்வாளர்

22 **திருமதி. நதுனி ஜயதிலக**
PGDip (SLIM), MBA(Special-Marketing),
MBA(Public Administration)Reading
ஊடக ஒருங்கிணைப்பு அதிகாரி

23 **திருமதி. சந்யா பிரியானி கொடிதுவக்கு**
M.Bus(Accounting)
B.Sc(Special-Finance management),
நிதி அதிகாரி

# கனிஷ்ட நிர்வாகம் (கள)

1 **திரு. பி.என். பிரகீத் உஜங்கொட**
B.Sc(Mgt-Pub)
பிராந்திய முகாமையாளர்

2 **திரு. கே.என். தாரக லியனகே**
PGDip(MM)
பிராந்திய முகாமையாளர்

3 **திரு. பி. சிந்தக குணரத்ன**
MA(Economics) Reading, BBA (Special)
பிராந்திய முகாமையாளர்

4 **திரு. பிரதீப் ரத்னசோம**
BBM(Special-HR)
பிராந்திய முகாமையாளர்

5 **திரு. எ. மஞ்சுள வன்னிஆரச்சி**
B.Sc(Special-Marketing)
பிராந்திய முகாமையாளர்

6 **திரு. கே. நெவில் திமுது**
B.Sc(Special-Marketing)
பிராந்திய முகாமையாளர்

7 **திரு. எம்.ஜீ.எல். ரோகித சேனாரட்ன**
BBM(Marketing-Special)
பிராந்திய முகாமையாளர்

8 **திரு. ஆர்.பீ. சரத் ஜயனாம**
MA(Economics), B.Sc(Special-BA)
பிராந்திய முகாமையாளர்

9 **திரு. கே.எ. ஹிரோன் லசந்த**
Mphil, MA(Mass Com), BA(Hons)
பிராந்திய முகாமையாளர்

10 **திரு. கே.எல். பிரியந்த**
MHRM,B.com (Special)
பிராந்திய முகாமையாளர்

11 **திரு. எம்.எம். சுமித் விஜேதிலக**
B.Sc(Special-HR)
பிராந்திய முகாமையாளர்

12 **திரு. எம்.எம்.பி. மஞ்சுள குமார**
BBA(Special-Finance)
பிராந்திய முகாமையாளர்

13 **திரு. டபிள்யு.எ.கே. பிரியதர்ஷன விஜேரத்ன**
BBM(Special-Marketing)
பிராந்திய முகாமையாளர்

14 **திரு. பி. நுவன் சந்ரகுமார**
BBA
பிராந்திய முகாமையாளர்

15 **திரு. ஆர்.எ. கஜான் நிஷார**
B.Sc(Special-BA)
பிராந்திய முகாமையாளர்

16 **திரு. டபிள்யு. பேஷான் தினேஸ் குமார ராஜபக்ஸ**
PGDip.(Marketing)
பிராந்திய முகாமையாளர்

17 **திரு. எஸ். கலும் தர்ஷன கருணாதிலக**
BMS
பிராந்திய முகாமையாளர்

18 **திரு. எ.எ. கஜான் சஞ்ஜீவ வன்னிஆரச்சி**
BBA(Special-Accounting)
பிராந்திய முகாமையாளர்

19 **திரு. ரி.எம்.எஸ். தமித் குமார ஜயசுந்தர**
B.Sc(Appiled Mathematics and Computing)
பிராந்திய முகாமையாளர்

20 **திரு. சுந்தரலிங்கம் நரேஸ்**
BBA
பிராந்திய முகாமையாளர்

21 **திரு. ஐ. தனேஸ் எமிர்சன்**
BBA
பிராந்திய முகாமையாளர்

22 **திரு. சிவராஜா பாரதன்**
B.Eng(Electronic &Telecommunication)
பிராந்திய முகாமையாளர்

23 **திரு. வயித்திலிங்கம் துவாரகன்**
BBA
பிராந்திய முகாமையாளர்

24 **திரு. ஜீ.ஆர். சாமர திலகரத்ன**
BA
பிராந்திய முகாமையாளர்

25 **திரு. டபிள்யு.கே.டி. வெதகெதர**
BA(Special-Economics), PGDip. (BM)
பிராந்திய முகாமையாளர்

# வரலாறு

நாட்டின் சுகாதாரச் சேவைக்கு நிதி வழங்குவதற்காக இலங்கை அரசாங்கத்தினால் முதன் முதலில் லொத்தர் ஸ்தாபிக்கப்பட்டது. 1949ஆம் ஆண்டு நாட்டின் சுகாதாரச் சேவைகளை முன்னேற்றும் நோக்கத்துடன் லொத்தர் ஒன்றை ஆரம்பிக்கவேண்டுமென அரசாங்கத்திற்கு உள்ளூராட்சி அமைச்சர் முன்மொழிவொன்றைச் சமர்ப்பித்தார். இதன் பெறுபேறாக, 1955ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வைத்தியசாலை லொத்தர் சபை ஸ்தாபிக்கப்பட்டது.

சுகாதாரத் துறை தவிர்ந்த ஏனைய அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதியீட்ட வேண்டிய தேவையினால் 1960களில் ஒழுங்கமைக்கப்பட்ட லொத்தரின் நோக்கத்தை விரிவுபடுத்த வேண்டியதன் தேவையை அரசாங்கம் புரிந்துகொண்டது.

இதன் பெறு பேறாக, வைத்தியசாலை லொத்தர் நடைமுறை நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக நாட்டின் அபிவிருத்திக்கான நிதியை உருவாக்குவதற்கென 1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் கீழ் தேசிய லொத்தர் சபை ஸ்தாபிக்கப்பட்டது.

# மைல் கற்கள்

## 1வது தசாப்தம் 1963- 1972

1963 ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் தேசிய லொத்தர் சபை ஸ்தாபிக்கப்பட்டது.

1964 டொரிங்டன் சதுக்கத்தில் முதலாவது ஜாதிக லொத்தர் சீட்டிழுப்பு மேற்கொள்ளப்பட்டது. (20.02.1964).

1965 பென்ஸ் கார் பரிசளிக்கும் நடைமுறை ஆரம்பமானது.

1967 இரத்தினபுரியில் முதலாவது கிளை அலுவலகம் திறக்கப்பட்டது.

1968 ஜாதிக சம்பத லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

1970 ஜாதிக சம்பத லொத்தர் மஹஜன சம்பத லொத்தர் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. (28.07.1970).

## 2வது தசாப்தம் 1973- 1982

1975 இல. 111/1, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தையில் அமைந்த புதிய கட்டிடத்துக்கு இடம் பெயர்ந்தமை.

1977 ஜாதிக சம்பத லொத்தரின் விலை 50 சதத்திலிருந்துரூ. 1 ஆக அதிரிக்கப்பட்டது.

## 3வது தசாப்தம் 1983- 1992

1987 சுபிரி ஜாதிக லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது (11.04.1987).

1988 மஹஜன சம்பத லொத்தர் சீட்டின் விலை ரூ.1 இலிருந்து ரூ. 8 ஆக அதிகரிக்கப்பட்டது.
லொட்டோ லொத்தரின் அறிமுகம் (செப்டம்பர் 1988).
ரூபவாஹினியில் மஹஜன சம்பதவின் முதலாவது சீட்டிழுப்பு ஒளிபரப்பானது (10.05.1988).

1989 மஹஜன சம்பத லொத்தர் சீட்டின் விலை ரூ. 8இலிருந்து ரூ. 10ஆக அதிகரிக்கப்பட்டது.

1992 கொழும்பு எயர் போர்ட் சுப்பர் ட்றோ லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது

## 4வது தசாப்தம் 1993- 2002

1994 வாசனா சம்பத லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

1995 கொவிசெத லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

1996 சமுர்தி லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

1997 சிரம வாசனா லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.
செவன லொத்தர் தேசிய லொத்தர் சபையுடன் கூட்டிணைக்கப்பட்டது.

1999 சுபிரி வாசனா சம்பத லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

2000 ஜயவிரு லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

## 5வது தசாப்தம் 2003- 2012

2004 சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி உதவியளிப்பதற்காக சரண லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.
ஊழியர் நன்மைக்காக நலன்புரி மற்றும் சிக்கன நிதியங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

2005 ஆம் ஆண்டு SLIM விருது வழங்கும் விழாவில் வங்கி மற்றும் நிதிச் சேவைகள் பிரிவில் சிறந்த வியாபார நாமத்துக்கான விருதை மஹஜன சம்பத வென்றது.

2006 லொட்டோ லொத்தர் நிறுத்தப்பட்டு சுவசெத லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.
மஹஜன சம்பத லொத்தரின் மூலம் அதிகூடிய சுப்பர் பரிசுத் தொகை வழங்கப்பட்டது (ரூ. 61.3மில்.)

2007 நியூ எயர்போர்ட் லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.
கொழும்பு எயர் போர்ட் சுப்பர் ட்றோ லொத்தரின் விலை அ.டொ. 25 இலிருந்து அ.டொ. 50 ஆக அதிகரிக்கப்பட்டது.

2008 குலுக்கல் லொத்தர் சீட்டுக்களின் விலை ரூ.10 இலிருந்து ரூ.20 ஆக அதிகரிக்கப்பட்டது (02.09.2008).

2010 சிரம வாசனா லொத்தர் மற்றும் சுவசெத லொத்தர் ஆகியவற்றுக்குப் பதிலாக ஜாதிக சம்பத லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.
மஹஜன சம்பத லொத்தர் ஞாயிற்றுக் கிழமைகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டது.

2011 வரலாற்றில் முதன் முறையாக ரூ.10 பில்லியன் விற்பனையை அடைந்தமை.
ஜயவிரு லொத்தர் நிறுத்தப்பட்டு அதற்குப் பதில் சுபிரி வாசனா சம்பத லொத்தர் புதன் கிழமைகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டது.
நியூ எயர்போர்ட் லொத்தர் சீட்டிழுப்பு நடாத்தப்பட்டது.
ரூ.10 மில்லியனுக்கும் அதிகமான 5 சுப்பர் பரிசுகள் மூன்று வாரங்களினுள் வெல்லப்பட்டன.
அவற்றில் 4 பரிசுகள் தொடர்ச்சியாக அடுத்தடுத்த தினங்களில் வெல்லப்பட்டன.

2012 சம்பத் ரேகா என்ற பெயரில் புதிய லொத்தர் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது.
கொவி செத லொத்தர் வியாழக்கிழமைகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டது.
வாசனா சம்பத லொத்தர் திங்கட்கிழமைகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டது.

## நடப்புத் தசாப்தம் 2013- 2022

2013 கொவிசெத லொத்தரின் சுப்பர் பரிசானது ரூ.10 மில்லியனிலிருந்துரூ.40 மில்லியனாக அதிகரிக்கப்பட்டது.
சம்பத் ரேகா லொத்தரின் சுப்பர் பரிசானது ரூ.5 மில்லியனிலிருந்துரூ.10 மில்லியனாக அதிகரிக்கப்பட்டது.
தேசிய லொத்தர் சபையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மெகா 50 லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

2014 பவர் லொட்டோ என்ற பெயரில் புதிய லொத்தரொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

2015 திவிசரண என்ற பெயரில் விற்பனையாளர்களுக்கான காப்புறுதித் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது (ஜூன் 2015).
நீரோகா என்ற பெயரில் புதிய லொத்தரொன்று அறிமுகப்படுத்தப்பட்டது (25.07.2015)
31ஆவது கொழும்பு எயர் போர்ட் சுப்பர் ட்றோ சீட்டிழுக்கப்பட்டது (31.08.2015).
ஒரே நாளில் மூன்று லொத்தர் சீட்டிழுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன (01.09.2015).
மஹாத்மா என்ற பெயரில் முகவர் மாநாடு மற்றும் விருது விழா ஒன்று முதன் முறையாக நடத்தப்பட்டது (டிசம்பர் 2015).

2016 ரூ.20 பில்லியன் விற்பனை இலக்கு அடையப்பட்டது.
டொலர் போர்ட்யூன் லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது (30.03.2016).
பவர் லொட்டோ லொத்தர் நிறுத்தப்பட்டு அதற்குப் பதில் மெகா பவர் லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது (11.05.2016).
சுபிரி தெலக்ஷபதி லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது (27.05.2016).
எஸ் எம் எஸ் ஊடாக லொத்தர் விற்பனை நடைமுறை ஆரம்பிக்கப்பட்டது.
வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவு முகமாக மனுசத் மெஹெவர லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது (04.08.2016).
தலைமை அலுவலகக் கட்டிட நிர்மாணத்துக்காக வொக்ஷால் ஒழுங்கைக் காணியில் அடிக்கல் நாட்டப்பட்டது (01.12.2016).
தேசிய வணிக சிறப்பு விருது அரச துறை சேவை-இரண்டாவது இடம் (தேசிய சம்மேளன வர்த்தகத்தால் ஏற்பாடுசெய்யப்பட்டது).

2017 மஹஜன சம்பத லொத்தர் சீட்டிழுப்பானது ஒரு கிழமையில் புதன் மற்றும் சனி தவிர்ந்த ஏனைய 05 நாட்களுக்கும் அட்டவணைப்படுத்தப்பட்டது. (மே2017 இல் இருந்து)
கொவிசெத லொத்தர் சீட்டிழுப்பானது ஒரு கிழமையில் வெள்ளி மற்றும் ஞாயிறு தவிர்ந்த ஏனைய 05 நாட்களுக்கும் அட்டவணைப்படுத்தப்பட்டது.(யூன் 2017 இல் இருந்து)
செவன லொத்தரானது சுப்பர் பரிசாக ஆடம்பர வீட்டுடன் ஒரு சீட்டிழுப்பு லொத்தராக ஆரம்பிக்கப்பட்டது.
கொவிசெத லொத்தரின் சுப்பர் பரிசுரூ.40 மில்லியனில் இருந்து ரூ.60 மில்லியனாக 26 ஒக்டோபரில் இருந்து அதிகரிக்கப்பட்டது.
ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் ஒரு நாளைக்கு 04 சீட்டிழுப்புக்களாக 2017 யூலையில் இருந்து அறிமுகப்படுத்தப்பட்டது.
2017 ஆம் ஆண்டுக்கான தேசிய வணிக சிறப்பு விருது வழங்கும் விழாவில் அரசதுறைக்காக தேசிய லொத்தர் சபை ஒரு தகுதி விருதினைப் பெற்றுக்கொண்டது. (தேசிய சம்மேளன வர்த்தகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது)
தேசிய லொத்தர் சபையானது 2017 செப்டெம்பரில் நடைபெற்ற சுமதி தொலைக்காட்சி விருதில் மஹஜன சம்பதவிற்காக இரண்டாமிட சிறந்த வணிக விருதைப் பெற்றுக்கொண்டது.

2018 உற்பத்திப் பொருட் கலவை 01-01-2018 இல் இருந்து மாற்றப்பட்டது.
கொவிசெத லொத்தரின் சீட்டிழுப்பு கிழமையில் 05 நாட்களில் இருந்து கிழமையில் 07 நாட்களாக திட்டமிடப்பட்டது.
மெகா பவர் லொத்தரின் சீட்டிழுப்பு கிழமையில் 02 நாட்களில் இருந்து 03 நாட்களாக அதிகரிக்கப்பட்டது.
ஜனவரியில் இருந்து ஜாதிக சம்பதவின் சுப்பர் பரிசானது ரூ.5 மில்லியனில் இருந்து ரூ.10 மில்லியனாக அதிகரிக்கப்பட்டது.
ஜனவரியில் இருந்து நீரோகாவின் சுப்பர் பரிசானது ரூ.5 மில்லியனில் இருந்து ரூ.10 மில்லியனாக அதிகரிக்கப்பட்டது.
தனநிதானய எனும் லொத்தரானது 02-04-2018 அன்று அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அதன் முதலாவது சீட்டிழுப்பானது 25 ஆம் திகதி மே மாதம் 2018 அன்று நடாத்தப்பட்டது.
சம்பத் ரேகா மற்றும் தெலக்ஷபதி லொத்தர்கள் நிறுத்தப்பட்டன.
தேசிய லொத்தர் சபையானது ஒக்டோபர் 2018 இல் இருந்து இல 32, தேசமான்ய என்.டபிள்யூ.ஜே முதலிகே மாவத்தை கொழும்பு-01 எனும் இடத்திலுள்ள ஒரு புதிய கட்டடத்துக்கு மாற்றப்பட்டது.
கொழும்பு எயார் போர்ட் சுப்பர் சீட்டிழுப்பானது ஜனவரி 2018 இல் நடாத்தப்பட்டது.

2019 தருதிரி சம்பத 14.11.2019 அன்று சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் முதலாவது சீட்டிழுப்பு 2020.01.30 அன்று சீட்டிழுக்கப்பட்டது.
4000 ஆவது மஹஜன சம்பத ரண் கிருள 06.09.2019 அன்று நடைபெற்றது.

2020 சுபிரி வாசனா லொத்தரின் பரிசுக் கட்டமைப்பு 2020.07.11 இல் மாற்றியமைக்கப்பட்டதுடன் சூப்பர் பரிசுத்தொகை ரூபா 10 மில்லியனில் இருந்து ரூபா 2.5 மில்லியனாகவும், முதல் பரிசு ரூபா 1 மில்லியனில் இருந்து ரூபா 500,000 ஆகவும் குறைக்கப்பட்டது.

2020.07.08 முதல் ஒரு நாளைக்கு ஐந்து சீட்டிழுப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டது.

மஹஜன சம்பத மற்றும் தனநிதானய லொத்தர்கள் வாரத்திற்கு 07 நாட்களிலும் சீட்டிழுக்கப்பட்டன.

தேசிய லொத்தர் சபையின் வரலாற்றிலும் லொத்தர் தொழில் வரலாற்றிலும் அதிகூடிய பரிசுப் பணம் (ரூபா 236 மில்லியன்) மெகா பவர் லொத்தரிலிருந்து வழங்கப்பட்டது.

மஹஜன சம்பத இன் 50 ஆவது ஆண்டு விழா 2020.09.26 அன்று நடைபெற்றது.
உலகளாவிய கொரோனா தொற்று நோய் லொத்தர் தொழிற்துறையில் பாதகமானதாக்கத்தை ஏற்படுத்தியதுடன் 2020 மார்ச் மாதம் முதல் ஏறத்தாழ 02 மாதங்கள் லொத்தர் விற்பனை இடைநிறுத்தப்பட்டது.

2021 உற்பத்திப் பொருள் கலவையில் பின்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டன.

வசனா சம்பத லொத்தர் - 2021 பெரவரி 15 முதல் புதிய பரிசுக் கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது.

பரிசுகளின் சதவீதம் 47%இலிருந்து 52%ஆக உயர்த்தப்பட்டதுடன் முதல் பரிசான ரூபா 1 மில்லியன் ரூபா 500,000 ஆக குறைக்கப்பட்டது.
சுபிரி வாசனா லொத்தர் - 2021 பெப்ரவரி 16 முதல் புதிய பரிசுக்கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது.

பரிசுகளின் சதவீதம் 49% இலிருந்து 52%ஆக உயர்த்தப்பட்டதுடன் முதல் பரிசான ரூபா 1 மில்லியன் ரூபா 500,000 ஆக குறைக்கப்பட்டது. 2021 யூலை 25 முதல் சீட்டிழுப்பு நாட்கள் திங்கள், சனியிலிருந்து செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிறு என மாற்றப்பட்டது.

ஜாதிக சம்பத லொத்தர் - 2021 ஆகஸ்ட் 02 முதல் திங்கள் மற்றும் வியாழன் என சீட்டிழுப்பு நாட்கள் மாற்றப்பட்டன. முன்னதாக இது புதன் மற்றும் சனிக்கிழமை ஆகக் காணப்பட்டது.

மெகா பவர் லொத்தர் 2021 பெப்ரவரி 15 முதல் புதிய பரிசுக் கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது.
அதன்படி, மெகா சூப்பர் பரிசு ரூபா 50.0 மில்லியனில் இருந்து ரூபா 100 மில்லியன் அல்லது அதற்கும் அதிகமாக உயர்த்தப்பட்டதுடன் பவர் சூப்பர் பரிசு மற்றும் கிராண்ட் சூப்பர் பரிசு என்பன ரூபா 10 மில்லியனாக நிர்ணயிக்கப்பட்டது.
தருதிரி சம்பத லொத்தர் - புதிய பரிசுக் கட்டமைப்பு 2021 பெப்ரவரி 21 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

அதன்படி, பரிசு சதவீதம் 47% இலிருந்து 52%ஆக உயர்த்தப்பட்டதுடன் முதல் பரிசு ரூபா 1 மில்லியன் இலிருந்து ரூபா 500,000 ஆக குறைக்கப்பட்டது.
2020 நவம்பர் 06 அன்று இரத்து செய்யப்பட்ட நீரோகா லொத்தருக்குப் பதிலாக 2021 பெப்ரவரி 25 முதல் சம்பத லக்ன வரம லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

# உற்பத்தி வரிசை

## சீட்டிழுப்பு வகை லொத்தர்கள்



### மஹஜன சம்பத

| | | |
|---|---|---|
| **விபரம்** | : | லொத்தர் சந்தையில் தொன்மையான லொத்தர். இந்த லொத்தர் சீட்டின் விலை ரூ.20/- |
| **சீட்டிழுப்பு நாட்கள்** | : | திங்கள், செவ்வாய், புதன் ,வியாழன், வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு |
| **பரிசுகள்** | : | ரூ. 10 மில்லியனில் ஆரம்பமாகும் சுப்பர் பரிசு, ரூ. 20 மில்லியன் முதலாம் பரிசு மற்றும் பல கவர்ச்சிகரமான பரிசுகள். |
| **பங்களிப்பு** | : | மொத்தப் புரள்விலிருந்து 16.5% திரட்டிய நிதியத்துக்கு வழங்கப்படுகிறது |



### வாசனா சம்பத

| | | |
|---|---|---|
| **விபரம்** | : | 1994ஆம் ஆண்டு சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த லொத்தர் சீட்டின் விலை ரூ.20/- |
| **சீட்டிழுப்பு நாட்கள்** | : | திங்கள், வியாழன் |
| **பரிசுகள்** | : | ரூ.10 மில்லியன் சுப்பர் பரிசொன்று அல்லது அதற்கும் மேல் முதலாவது பரிசாக ரூ. 1 மில்லியன் மற்றும் ஏனைய கவர்ச்சிகரமான பரிசுகள். 15 பெப்ரவரி 2021 இல் இருந்து புதிய பரிசுக் கட்டமைப்பானது அறிமுகப்படுத்தப்பட்டது. அதனடிப்படையில், முதல் பரிசு ரூ.1 மில்லியன் ரூ.500,000 ஆகக் குறைக்கப்பட்டது. எப்படியாயினும், பரிசு வீதமானது 47% இல் இருந்து 52%ஆக அதிகரிக்கப்பட்டது. |
| **பங்களிப்பு** | : | மொத்தப் புரள்விலிருந்து 16.5% திரட்டிய நிதியத்துக்கு வழங்கப்படுகிறது. |

## கொவிசெத



**விபரம்** : கமத்தொழில் அமைச்சுக்காக “விவசாயிகள் நிதியத்துக்கு” நிதி திரட்டும் நோக்கத்துடன் 1995 ஆம் ஆண்டு சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த லொத்தர் சீட்டின் விலை ரூ.20/-.

**சீட்டிழுப்பு நாட்கள்** : திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு.

**பரிசுகள்** : ரூ.60 மில்லியன் சுப்பர் பரிசு ஒன்று அல்லது அதற்கு மேல் ரூ. 1 மில்லியன்
முதல் பரிசு மற்றும் ஏனைய கவர்ச்சிகரமான பரிசுகள்.

**பங்களிப்பு** : மொத்தப் புரள்விலிருந்து 10% கமத்தொழில் அமைச்சுக்கு திரட்டிய நிதியத்தினூடாக வழங்கப்படுகிறது.

## சுபிரி வாசனா



**விபரம்** : சுபிரி வாசனா சம்பத லொத்தர் 1999 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
இந்த லொத்தர் சீட்டின் விலை ரூ.20/-.

**சீட்டிழுப்பு நாட்கள்** : திங்கள், சனி 25.07.2021 இல் இருந்து சீட்டிழுப்பு நாட்கள் செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிறு,

**பரிசுகள்** : சுப்பர் பரிசானது ரூ.2.5 மில்லியனாக இருந்ததுடன் முதற்பரிசு 500,000/- மேலும்,
ஏனைய கவர்ச்சியான பரிசுகளும் வழங்கப்படுகின்றன.
16 பெப்ரவரி 2021 இல் இருந்து புதிய பரிசுக் கட்டமைப்பானது அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி, பரிசு சதவீதமானது 49% இல் இருந்து 52% ஆக அதிகரிக்கப்பட்டது.

**பங்களிப்பு** : திங்கட்கிழமை சீட்டிழுப்பின் மொத்தப் புரள்விலிருந்து 10% ரணவிருசேவா அதிகார சபைக்கும் சனிக்கிழமை சீட்டிழுப்பின் மொத்தப் புரள்விலிருந்து
10% விளையாட்டு அமைச்சு மற்றும் சமூக சேவைகள் அமைச்சுகளிடையே

திரட்டிய நிதியத்தினூடாக பகிர்ந்தளிக்கப்படுகிறது. 25-07-2021 இல் இருந்து செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்பின் மொத்தப் புரள்விலிருந்து 10% ரணவிருசேவா அதிகார சபைக்கும் மற்றும் வெள்ளி, ஞாயிறு சீட்டிழுப்பின் மொத்தப் புரள்விலிருந்து 10% விளையாட்டு அமைச்சு மற்றும் சமூக சேவைகள் அமைச்சுகளிடையே திரட்டிய நிதியத்தினூடாக பகிர்ந்தளிக்கப்படுகிறது.



## ஜாதிக சம்பத

| | | |
|---|---|---|
| **விபரம்** | : | சபையானது 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் சுவசெத மற்றும் சிரம வாசனா லொத்தர்களுக்குப் பதிலாக இந்த லொத்தரை அறிமுகம் செய்தது. இந்த லொத்தர் சீட்டின் விலை ரூ.20/-. |
| **சீட்டிழுப்பு நாட்கள்** | : | புதன்கிழமை மற்றும் சனிக்கிழமை. (02.08.2021 இல் இருந்து சீட்டிழுப்பு நாட்கள் திங்கள், புதன், வியாழன் மற்றும் சனி). |
| **பரிசுகள்** | : | ரூ.10 மில்லியன் சுப்பர் பரிசொன்று அல்லது அதற்கு மேல், முதற் பரிசாக ரூ. 2 மில்லியன் மற்றும் ஏனைய கவர்ச்சிகரமான பரிசுகள். |
| **பங்களிப்பு** | : | புதன்கிழமை சீட்டிழுப்பின் மொத்தப் புரள்விலிருந்து 10% சுகாதார அமைச்சுக்கும் சனிக்கிழமை சீட்டிழுப்பின் மொத்தப் புரள்விலிருந்து 10% தொழில் அமைச்சுக்கும் திரட்டிய நிதியத்தினூடாக 02-08-2021 இல் இருந்து வழங்கப்படுகிறது. திங்கள் மற்றும் புதன் சீட்டிழுப்புக்களின் மொத்தப் புரள்விலிருந்து 10% சுகாதார அமைச்சுக்கும் வியாழன் மற்றும் சனி சீட்டிழுப்புக்களின் மொத்தப் புரள்விலிருந்து 10% தொழில் அமைச்சுக்கும் திரட்டிய நிதியத்தினூடாக வழங்கப்பட்டது |




## மெகாபவர் லொத்தர்

**விபரம்** : இந்த லொத்தரானது 2016 ஆம் ஆண்டு மே மாதம் 11ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்டது.
லொத்தர் சீட்டின் விலை ரூ.20/-

**சீட்டிழுப்பு நாட்கள்** : திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு

**பரிசுகள்** : கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறான மூன்று சுப்பர் பரிசுகள் மற்றும் ரூ.1 மில்லியன் பரிசுகளுடன் மேலும் பரிசுகள்.
மெகா சுப்பர் பரிசு - ரூ. 50 மில்லியன் அல்லது அதற்கு மேல்
பவர் சுப்பர் பரிசு - ரூ. 10 மில்லியன் அல்லது அதற்கு மேல்
கிராண்ட் சுப்பர் பரிசு - ரூ. 10 மில்லியன் அல்லது அதற்கு மேல்
15.02.2021 இல் இருந்து புதிய பரிசுக் கட்டமைப்பானது அறிமுகப்படுத்தப்பட்டது.
அதற்கேற்ப, மெகா சுப்பர் பரிசானது 50 மில்லியனில் இருந்து 100 மில்லியன் அல்லது அதற்கு மேலாக அதிகரிக்கப்பட்டது. பவர் சுப்பர் பரிசு மற்றும் கிராண்ட சுப்பர் பரிசுகள் ரூ.10 மில்லியனாக நிலையானதாக வைக்கப்பட்டது.
பரிசு வீதம்: 48%.

**பங்களிப்பு** : மொத்தப் புரள்விலிருந்து 10% திரட்டிய நிதியத்துக்கு வழங்கப்படுகிறது.




## செவன சீட்டிழுக்கப்படும் லொத்தர்

**விபரம்** : இந்த லொத்தர் 2017 யூலை 27 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த லொத்தரின் விலை ரூ.20 ஆகும்.

**சீட்டிழுப்பு நாட்கள்** : ஞாயிறு மற்றும் புதன்

**பரிசுகள்** : வீடொன்றை நிர்மாணிப்பதற்காக ரூ14 மில்லியன் மற்றும் முதல் பரிசுரூ. 1 மில்லியன் மற்றும் ஏனைய கவர்ச்சிகரமான பரிசுகள்.

**பங்களிப்பு** : மொத்தப் புரள்விலிருந்து 10% செவன நிதியத்துக்கு திரட்டிய நிதியத்தினூடாக வழங்கப்படுகிறது.




## தன நிதானய

| | | |
|---|---|---|
| **விபரம்** | : | இந்த லொத்தரானது 2018 ஏப்ரல் 02 ஆந் திகதி அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த லொத்தரின் விலை ரூ.20 ஆகும். |
| **சீட்டிழுப்பு நாட்கள்** | : | திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு |
| **பரிசுகள்** | : | ரூ.80 மில்லியன் சுப்பர் பரிசு அல்லது அதற்கு மேல், முதலாவது பரிசாக ரூ. 1 மில்லியன் மற்றும் ஏனைய கவர்ச்சிகரமான பரிசுகள். |
| **பங்களிப்பு** | : | மொத்தப் புரள்வில் 10% திரட்டிய நிதியத்துக்கு பங்களிப்புச் செய்யப்படுகின்றது. |




## தருதிரி சம்பத

| | | |
|---|---|---|
| **விபரம்** | : | இந்த லொத்தரானது 2019 நவம்பர் 14 அன்று அறிமுகப்படுத்தப்பட்டதுடன் முதலாவது சீட்டிழுப்பானது 2020 ஜனவரி 30அன்று நடாத்தப்பட்டது. இந்த லொத்தரின் விலையானது ரூ.20 ஆகும். |
| **சீட்டிழுப்பு நாட்கள்** | : | வியாழன் |
| **பரிசுகள்** | : | ரூ.5 மில்லியன் சுப்பர் பரிசு அல்லது அதற்கு மேல், முதலாவது பரிசாக ரூ. 1 மில்லியன் மற்றும் ஏனைய கவர்ச்சிகரமான பரிசுகள். 21.02.2021 இல் இருந்து புதிய பரிசுக் கட்டமைப்பானது அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி, முதல் பரிசு ரூ.1 மில்லியனில் இருந்து ரூ.500,000 ஆகக் குறைக்கப்பட்டது. பரிசுவீதமானது 47% வீதத்திலிருந்து 52% ஆக அதிகரிக்கப்பட்டது. |
| **பங்களிப்பு** | : | மொத்தப்புரள்வில் 10% திரட்டிய நிதியத்தினூடாக பிள்ளைகளின் பாதுகாப்பிற்காக தேசிய நம்பிக்கை நிதியத்துக்கு பங்களிப்புச் செய்யப்பட்டது. |




## சம்பத லக்ன வரம

**விபரம்** : நீரோகா லொத்தர் 06-11-2020 இல் இரத்துச் செய்யப்பட்டதும் அதற்குப் பதிலாக 25-02-2021 இல் இருந்து அறிமுகப்படுத்தப்பட்டது. லொத்தரின் விலையானது ரூ.50 ஆகும். இரண்டு வெற்றி வாய்ப்புக்கள் ஒரு லொத்தரிலுள்ளது.

**சீட்டிழுப்பு நாட்கள்** : ஐந்து சீட்டிழுப்புக்கள் மட்டுமே வருடம் முழுவதும் நடத்தப்பட்டது.

**பரிசுகள்** : சுப்பர் பரிசு ரூ.10 மில்லியன் அல்லது அதற்கு மேல், முதலாவது பரிசாக ரூ. 2 மில்லியன் மற்றும் ஏனைய கவர்ச்சிகரமான பரிசுகள்.

**பங்களிப்பு** : மொத்தப்புரள்வில் 10% தேசிய சிறுநீரக நிதியத்துக்கு பங்களிப்புச் செய்யப்பட்டது




## டொலர் போர்ட்சியூன்

**விபரம்** : இந்த லொத்தரானது 2016 மார்ச் 30 ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு சீட்டும் 10 அமெரிக்க டொலர்கள் அல்லது அதற்கு இணையான வேறு மாற்றத்தக்க நாணயத்துக்கு விற்கப்படுகின்றது. இந்த லொத்தர் சீட்டுக்கான சீட்டிழுப்பானது 30,000 சீட்டுக்கள் விற்பனை செய்யப்பட்ட பின்னர் நடத்தப்படும்.

**பரிசு** : 100,000 அமெரிக்க டொலர்கள்

**பங்களிப்பு** : நிகர மிகை திரட்டிய நிதியத்துக்கு வழங்கப்படும்.

# உடனடி லொத்தர்கள்

## செவன




**விபரம்** : 1985 ஆம் ஆண்டு வீடமைப்புக்காக நிதித் திரட்டும் நோக்கத்துடன் இந்த லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது. சந்தையில் பிரபலமான சுரண்டல் லொத்தரான செவன சர்வதேச அங்கீகாரம் பெற்ற சுரண்டி ஒப்பிடும் தொழில் நுட்பத்தை உள்வாங்கியுள்ளது. தனியான நிறுவனமாகவிருந்து 1997 இல் தேசிய லொத்தர் சபையுடன் இணைந்த செவன இந்த லொத்தரை நடாத்தி வருகின்றது.

**பங்களிப்பு** : மொத்தப் புரள்விலிருந்து 10% திரட்டிய நிதியத்தின் ஊடாக வீடமைப்பு அமைச்சுக்கு வழங்கப்படுகிறது.

## சமுர்த்தி




**விபரம்** : சமுர்த்தி அதிகாரசபைக்கு நிதி திரட்டும் நோக்கத்துடன் 1996 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இந்த லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய லொத்தர் சபையால் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்ட முதலாவது சுரண்டல் வகையிலான லொத்தர் இதுவாகும். இது சர்வதேச அங்கீகாரம் பெற்ற சுரண்டி ஒப்பிடும் தொழில்நுட்பத்தை உள்வாங்கியுள்ளது.

**பங்களிப்பு** : மொத்தப் புரள்விலிருந்து 10% சமுர்த்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சுக்கு வழங்கப்படுகிறது.

# 2

# நிறைவேற்றுனர் அறிக்கைகள்

# தலைவரின் மீளாய்வு




தேசிய லொத்தர் சபையின் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டிற்கான வருடாந்த அறிக்கைக்கான தலைவரின் மீளாய்வின் மூலம் கடந்த ஆண்டைப் போன்று தொடர்ச்சியாக மூன்றாவது முறையாகவும் உங்களை அணுகுவதற்கு கிடைத்தமை குறித்து மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

### பின்னணி

2019 இன் பிற்பகுதியில் தொடங்கிய கொரோனா தொற்றுநோய் எமது நாட்டில் 2020 இல் உணரப்பட்டதைப் போன்றே 2021 ஆம் ஆண்டில் மிகவும் தீவிரமாக உணரப்பட்டது. அரசாங்கம் தொற்றுநோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டிருந்ததுடன் கிட்டத்தட்ட மூன்று மாதங்களுக்கு நாட்டை முழுமையாக மூட வேண்டியேற்பட்டிருந்தது.

இந்த உலகளாவிய தொற்றுநோய் சுகாதாரத் துறையினை மட்டுமன்றி சமூக-பொருளாதாரம் போன்ற அனைத்து துறைகளிலும் இந்நாட்டில் மாத்திரமன்றி, உலகளாவிய அளவில் கடுமையான நெருக்கடியை உருவாக்குவதற்கு காரணமாகியிருந்தது.

இதன் விளைவுகள், வழக்கம் போல், கீழ் மட்டத்தில் தொழிலில் ஈடுபட்டுள்ள எங்களின் ஒட்டுமொத்த விற்பனை வலையமைப்பையும், கடந்த ஆண்டைப் போல் பாதித்திருந்ததுடன், அவ்வாறே வியாபாரம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

ஆகையால், 2021 ஆம் ஆண்டானது இந்த சவால்களை எதிர்கொண்டு மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில், பல்வேறு தீர்மானங்களை மேற்கொண்டு, மூலோபாய திட்டங்களின் மீது அதிக கவனம் செலுத்தி, அவ்வப்போது அவற்றை மாற்றியமைத்து, நிலைமைக்கு ஏற்ற விதத்தில் செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய ஆண்டாக காணப்பட்டது.

எவ்வாறாயினும், இத்தகைய கடுமையான சவால்கள் இருந்தபோதிலும், 2021 ஆம் ஆண்டிற்காக திருத்தி மதிப்பிடப்பட்ட விற்பனை வருவாயை சபையால் அடைய முடிந்திருந்தது

நிலவிய சவால்மிக்க நிலையினை எதிர்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு 2021 ஆம் ஆண்டிற்கான எமது இலக்கு விற்பனையான ரூபா 23 பில்லியன் வருமானத்தை அடைவதற்கு எதிர்பார்த்திருந்தோம். அதற்காக விற்பனை கலவை மற்றும் ஏனைய துறைகளில் பல்வேறு மாற்றங்களைச் செய்திருந்த போதிலும், கொரோனா நெருக்கடியை தொடர்ந்து இரண்டு சந்தர்ப்பங்களில் கிட்டத்தட்ட மூன்று மாதங்களுக்கு நாடு மூடப்பட்டதால் ஏற்பட்ட பல்வேறு தடைகள் காரணமாக எமது இலக்கிடப்பட்ட வருவாயை திருத்தி மீள மதிப்பிட வேண்டியேற்பட்டிருந்தது. அதன்படி, 2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான எமது திருத்தி மதிப்பிடப்பட்ட விற்பனை வருவாயான ரூபா 17,000.0 மில்லியனுடன் ஒப்பிடுகையில், சபை ரூபா 17,292.0 மில்லியன் விற்பனை வருவாயை பெற்றுக் கொண்டது. எவ்வாறாயினும், 2020 இற்கான எமது விற்பனை வருவாயான ரூபா 18,041.1 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 4.1 சதவீதக் குறைவாகும். கொவிட் 19 நெருக்கடியான சூழ்நிலை இல்லாதிருந்திருப்பின் நாம் சுமார் ரூபா 23 பில்லியன் விற்பனை வருவாயை எளிதாக அடைவதற்கான சாத்தியம் காணப்பட்டது.

2020 ஆம் ஆண்டில் லொத்தர் விற்பனை வருமானத்திலிருந்து திரட்டிய நிதியத்துக்கு வழங்கிய ரூபா 2,205.0 மில்லியன் நேரடிப் பங்களிப்புடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் ரூபா 2,162.0 மில்லியன் தொகையை வழங்குவதற்கு சபைக்கு முடிந்திருந்தது. அத்துடன், 2020 ஆம் ஆண்டில் நேரடி வரி, மறைமுக வரி மற்றும் உரிமை கோராத பரிசுகள் என்ற வகையில் ரூபா 1,134.1 மில்லியன் தொகை மறைமுக பங்களிப்பாக வழங்கப்பட்டிருந்ததுடன், அதனுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் ரூபா 851.3 மில்லியன் வழங்கப்பட்டது. அவ்வாறே, 2021 ஆம் ஆண்டில் திரட்டிய நிதியத்துக்கான விசேட பங்களிப்பாக ரூபா 900 மில்லியன் வழங்கப்பட்டது. ஒட்டுமொத்தமாக நோக்குகையில் 2020 ஆம் ஆண்டில் நேரடி மற்றும் மறைமுக பங்களிப்பாக ரூபா 3,339.2 மில்லியன் பங்களிப்பு வழங்கப்பட்டிருந்ததுடன், அதனுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் ரூபா 3,912.0 மில்லியன் (திரட்டிய நிதியத்துக்கான விசேட பங்களிப்பான ரூபா 900 மில்லியன் உட்பட) தொகையை அரசாங்கத்திற்கு வழங்க முடிந்திருந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 17.1 சதவீத அதிகரிப்பாகும்.

பொது மக்களுடன் நேரடித் தொடர்புகளைக் கொண்டு நாடளாவிய ரீதியில் விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மாவட்ட விற்பனைப் பிரதிநிதிகளையும், விற்பனைப் பிரதிநிதிகளையும் விற்பனை உதவியாளர்களையும் உள்ளடக்கிய ஏறத்தாழ 20,000 நபர்களைக் கொண்ட எமது விற்பனை வலைதளத்திற்கு விற்பனை தரகுப்பணமாக 2020 ஆம் ஆண்டில் செலுத்தியிருந்த ரூபா 3,608.0 மில்லியன் தொகையுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் ரூபா 3,457.5 மில்லியன் தொகையை செலுத்துவதற்கு சபைக்கு முடிந்திருந்தது.

அடிமட்டத்திலுள்ள பெரும்பாலானோரைக் கொண்ட எமது விற்பனை வலைப்பின்னலிற்கு கொவிட் 19 இன் தாக்கம் காரணமாக விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு முடிந்திருக்காமையால் ஆதரவற்ற நிலையில் காணப்பட்டதன் காரணமாக அவர்களிற்கு ரூபா 2,500 வீதம் இவ்வாண்டின் போதும் பகிர்ந்தளிக்கப்பட்டது. அத்துடன் காப்புறுதித் திட்டங்கள், இறுதிச் சடங்கு வசதிகள் மற்றும் புலமைப்பரிசில்கள் என்பன அவர்களின் நலனுக்காக தொடர்ந்து வழங்கப்பட்டன.

2020 ஆம் ஆண்டில் பரிசுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 8,667.5 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் ரூபா 8,352.1 மில்லியன் பரிசுகளிற்காக வழங்கப்படுவதற்கு முடிந்திருந்தது. அது விற்பனைப் புரள்வில் 48.5 சதவீதமாக காணப்பட்டதுடன், பரிசுகள் பகிர்ந்தளிக்கப்பட்ட விதம் கீழுள்ளவாறாகும்.

2020 ஆம் ஆண்டில் கோடிகளை வென்ற சுபர் பரிசுபெற்றோர் எண்ணிக்கை 33 ஆக காணப்பட்டதுடன் அவர்களிடையே ரூபா 1,162.9 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் அதற்கு ஒப்பாக 2021 ஆம் ஆண்டில் கோடிகளை வென்ற சுபர் பரிசுபெற்றோர் 38 பேர் உருவாக்கப்பட்டனர். அவர்களிடையே ரூபா 1,318.9 மில்லியன் தொகையை வழங்குவதற்கு சபைக்கு முடிந்திருந்தது.

இந்த சுபர் பரிசு வென்ற 38 பேர்களில் 15 பேர்கள் மஹஜன சம்பத லொத்தர் சீட்டின் மூலம் உருவாக்கப்பட்டிருந்ததுடன், அவர்களிடையே ரூபா 320.9 மில்லியன் பகிரப்பட்டதுடன், கொவிசத லொத்தர் மற்றும் மெகாபவர் லொத்தர் ஆகியவற்றின் மூலம் 7 வெற்றியாளர்கள் உருவாக்கப்பட்டனர். அவர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை முறையே ரூபா 508.4 மில்லியன் மற்றும் ரூபா 103.8 மில்லியன் ஆகும். அவ்வாறே, சுபிரி வாசனா மற்றும்

தனநிதானய லொத்தர் சீட்டுக்களின் வாயிலாக மூவர் வீதம் வெற்றியாளர்கள் உருவாக்கப்பட்டதுடன் அவர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை முறையே ரூபா 27.8 மில்லியன் மற்றும் ரூபா 320.6 மில்லியன் ஆகும். ஜாதிக சம்பத லொத்தர் சீட்டின் மூலம் ஒரு சுபர் பரிசு வெற்றியாளர் உருவாக்கப்பட்டிருந்ததுடன், அவரால் ரூபா 17.5 மில்லியன் பரிசு வெல்லப்பட்டது. சம்பத லக்ன வரம லொத்தர் சீட்டின் இரண்டு சுபர் பரிசு வெற்றியாளர்கள் உருவாக்கப்பட்டிருந்ததுடன், அவர்களில் ஒருவரால் சொகுசு மோட்டார் வாகனமொன்று வெல்லப்பட்டதுடன் மற்றவருக்கு ரூபா 18.8 மில்லியன் பரிசுப் பணம் உரித்தாகியது.

இந்த சுபர் பரிசு வென்றோர்களிற்கு மேலதிகமாக, 303 வெற்றியாளர்கள் தலா இரண்டு மில்லியன் ரூபாவையும், 297 வெற்றியாளர்கள் தலா ஒரு மில்லியன் ரூபாவையும், 80 வெற்றியாளர்கள் ஐந்து இலட்சம் ரூபாவையும் பரிசுப் பணமாக வென்றனர். பரிசுகளிற்காக ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து ரூபா 1,964.3 மில்லியன் தொகை இந்த சுபர் பரிசு மற்றும் ஏனைய பரிசுகளை வென்றோர்களிற்காக செலுத்தப்பட்டதுடன் எஞ்சிய தொகையான ரூபா 6,387.8 மில்லியன் தொகை சிறிய பரிசுகளிற்கு உரித்தான தொகையாக மக்களிற்கு உரித்தானது. ஒட்டுமொத்தமாக சுபர் பரிசு வென்றோர்கள் உட்பட 163,423,012 வெற்றியாளர்கள் உருவாக்கப்பட்டு மேலே குறிப்பிடப்பட்டவாறு அவர்களிடையே ரூபா 8,352.1 மில்லியன் தொகை பகிரப்பட்டது. எமது பரிசுகளை வழங்குகின்ற பொறிமுறை காணப்பட்ட நிலமை காரணமாக இவ்வாண்டிலும் தடைப்பட்டிருந்ததன் காரணமாக முன்னைய ஆண்டைப் போலவே இவ்வாண்டிலும் அவர்களது வீடுகளிற்குச் சென்று பரிசுகளை கையளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதுடன், இது அவர்களினால் பெரிதும் வரவேற்கப்பட்டது.

2020 ஆம் ஆண்டின் ரூபா 1,675.1 மில்லியன் செயற்பாட்டுச் செலவுகளுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுச் செலவினம் ரூபா 1,898.5 மில்லியனானதுடன், அது 13.3 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தாபனச் செலவினம் குறைவடைந்திருந்த போதிலும், ஏனைய அனைத்து வகைச் செலவினமும் ஓரளவு அதிகரித்திருந்தமையே இதற்கான காரணமாகும்.

விசேடமாக சந்தையில் ஏற்பட்ட விலைத்தளம்பல் நிலை, பொருட்கள் மற்றும் சேவைகளின் தட்டுப்பாடு என்பவற்றின் விளைவாக மூலப்பொருள் செலவு, எரிபொருள் செலவு, தொடர்பாடல், விளம்பரப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் செலவினங்கள் அதிகரித்தமையால் அதிக கிரயத்தை மேற்கொள்ள வேண்டியிருந்தமை, கொவிட் தொற்றுநோய் காரணமாக சுத்திகரிப்புச் செலவினம், மருத்துவச் செலவினம் அதிகரித்தமையே ஏனைய செலவின வகைகளில் அதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்.

2020 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற ரூபா 1,434.8 மில்லியன் வரிக்கு முன்னைய இலாபத்துடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் வரிக்கு முன்னைய இலாபம் ரூபா 1,003.3 மில்லியன் ஆனதுடன், 2020 ஆம் ஆண்டின் ரூபா 1,083.1 மில்லியன் இலாபத்திற்கு ஒப்பாக 2021 ஆம் ஆண்டில் ரூபா 960.3 மில்லியன் இலாபம் ஈட்டப்பட்டது. விற்பனை ஓரளவு குறைவடைந்திருந்தமை மற்றும் செலவினம் ஓரளவு அதிகரித்திருந்தமையே முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இலாபம் 11.3 சதவீதத்தால் குறைவடைந்தமைக்கு காரணமாகியிருந்தது.

எனினும், ஏனைய பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு, விற்பனை மற்றும் செலவினங்களைக் கட்டுக்குள் வைத்து, ஒட்டுமொத்தமாக கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இயக்கச் செலவுகளைக் கட்டுக்குள் வைத்திருக்க எமக்கு முடிந்திருந்தது. இது முன்னைய ஆண்டை விட 13.3 சதவீதத்தினால் மாத்திரமே அதிகரித்துள்ளமை அதற்கான சான்றாக உள்ளது.

லொத்தர் விற்பனை வருவாயை அதிகரிப்பதற்காக நிர்வாகத்துடன் தொடர்ச்சியாக கலந்தாலோசித்து பல்வேறு மூலோபாய திட்டங்கள் வகுக்கப்பட்டன. அவற்றில், லொத்தர் கலவையின் சீட்டிழுப்புத் திகதிகளில் பின்வருமாறு மாற்றங்கள் செய்யப்பட்டதுடன், தற்போதுள்ள சவால்களை எதிர்கொண்டு விற்பனையை அதிகரிக்க பெரும் உதவியாக அது அமைந்திருந்தது.

நாளாந்தம் வழமையாக இடம்பெறுகின்ற சீட்டிழுப்புக்களிற்கு மேலதிகமாக, சிறப்பு பரிசுகளின் கீழ் மாதந்தோறும் 11 விசேட லொத்தர் சீட்டிழுப்புக்கள் நடத்தப்பட்டன. அதன்படி, 2 கொவிசெத லொத்தர் சீட்டிழுப்புக்களும் 4 மஹஜன சம்பத சீட்டிழுப்புக்களும் 5 சம்பத் லக்ன வரம சீட்டிழுப்புக்களும் நடத்தப்பட்டதுடன், இவற்றின் மூலம் ஒட்டுமொத்தமாக 17.2 மில்லியன் லொத்தர் சீட்டுக்கள் விற்பனை செய்யப்பட்டு விற்பனை வருமானமாக ரூபா 431.2 மில்லியன் ஈட்டப்பட்டது.

இந்த விசேட லொத்தர் சீட்டுக்களிற்காக வழக்கமான பரிசுகளிற்கு மேலதிகமாக விசேட பரிசுகள் வழங்கப்பட்டதுடன், 2021 ஆம் ஆண்டில் இதன் கீழ் ஒரு விகோ (Vigo) கார், 3 மகேந்திரா (Mahendra) கார்கள், 5 டொயோட்டா ரஷ் (Toyota Rush) கார்கள், 2 முச்சக்கர வாகனங்கள், ஒரு மோட்டார் சைக்கிள், ஒரு தங்க நெக்லஸ், 21 தங்க நாணயங்கள், ஒரு மொபைல் போன், 16 கணினிகள், 24 மவுன்டன் சைக்கிள்கள், 2 தொலைக்காட்சி பெட்டிகள், 4 பரிசு வவுச்சர்கள் மற்றும் 9 ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன.

2021 பெப்ரவரி முதல் வாசனா சம்பத லொத்தருக்காக புதிய பரிசுத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம், பரிசுகளுக்கான ஒதுக்கீடு 47 சதவீத்திலிருந்து 52 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டதுடன் ரூபா 1 மில்லியன் ஆகக் காணப்பட்ட முதலாவது பரிசு ரூபா 500,000 இலட்சமாக குறைக்கப்பட்டது.

பெப்ரவரி மாதத்திலிருந்து சுபிரி வாசனா லொத்தரின் பரிசளிப்பு முறையை மாற்றியமைத்து, பரிசுகளுக்கான ஒதுக்கீடு 47 சதவீதத்திலிருந்து 52 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டதுடன், ரூபா 1 மில்லியன் ஆகக் காணப்பட்ட முதலாவது பரிசு ரூபா 500,000 இலட்சமாக குறைக்கப்பட்டது. திங்கள் மற்றும் சனிக்கிழமைகளாக இருந்த சீட்டிழுப்பு நாட்கள், யூலை மாதத்திலிருந்து செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளாக மாற்றப்பட்டன.

புதன் மற்றும் சனிக்கிழமைகளில் சீட்டிழுக்கப்பட்ட ஜாதிக சம்பத லொத்தர்சீட்டின் சீட்டிழுப்பை ஆகஸ்ட் மாத தொடக்கத்தில் இருந்து திங்கள் மற்றும் வியாழன் ஆகிய நாட்களில் சீட்டிழுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

மெகா பவர் லொத்தருக்கான புதிய பரிசுக் கட்டமைப்பு 2021 பெப்ரவரி 15 முதல் அறிமுகம் செய்யப்பட்டது. அதன்படி, மெகா சூப்பர் பரிசு ரூபா 50 மில்லியனில் இருந்து ரூபா 100 மில்லியனாக அதிகரிக்கப்பட்டதுடன், அதிகரித்துச் செல்லும் (Snow bowled) பவர் மற்றும் கிரேன்ட் சுபர் பரிசு ரூபா 10 மில்லியன் என உறுதிப்படுத்தப்பட்டது.

தருதிரி சம்பத லொத்தரின் புதிய பரிசுக் கட்டமைப்பு பெப்ரவரி 21 ஆம் தேதி முதல் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அதன்மூலம் பரிசுகளுக்கான ஒதுக்கீடு 47 சதவீதத்திலிருந்து 52 சதவீதம் ஆக உயர்த்தப்பட்டது. ரூபா 1 மில்லியன் ஆகக் காணப்பட்ட முதலாவது பரிசு ரூபா 500,000 இலட்சமாக குறைக்கப்பட்டது.

2020 நவம்பர் மாதம் முதல் நிரோகா லொத்தர்சீட்டு இரத்துச்செய்யப்பட்டு அதற்குப் பதிலாக 2021 பெப்ரவரி முதல் சம்பத் லக்ன வரம லொத்தர்சீட்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

2021 ஆம் ஆண்டின் போது 07 மாவட்ட விற்பனை முகவர்களும் 81 புதிய விற்பனை முகவர்களும் எமது விற்பனை வலைப்பின்னலுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

வீற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்கையில் அதற்கான உயிர் நாடியாக கருதப்படக்கூடிய விற்பனை முகவர் வலைப்பின்னலில் காணப்படுகின்ற பிரச்சினைகள் மற்றும் தேவைப்பாடுகளை இனங்கண்டு நிறுவனத்திற்கும் அவர்களிற்கும் இடையே சிறந்த உறவை பேணிச்செல்லும் நோக்குடன் மாவட்ட விற்பனை முகவர்கள் மற்றும் நாடுதளுவிய ரீதியிலான விற்பனை முகவர்களிற்காக கருத்தரங்குகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2021 ஆம் ஆண்டில் நிலவிய கொவிட் தொற்று காரணமாக 3 மாவட்ட விற்பனை முகவர்கள் கருத்தரங்குகளை மாத்திரமே நடாத்த முடிந்திருந்தது.

2021 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் செயற்பாட்டு நடவடிக்கைளின் போது நாம் பல்வேறு சவால்களை எதிர்கொண்டிருந்தோம். அதில் பிரதானமாக லொத்தர் சீட்டுக்களை அச்சிடுகின்ற நிறுவனங்களிற்கு அவற்றை அச்சிடுவதற்குத் தேவையான பாதுகாப்பு கடதாசியை பெற்றுக் கொள்வதில் காணப்பட்ட சிக்கல் காரணமாக லொத்தர் சீட்டுக்களை அச்சிட முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

இதனை நிவர்த்திப்பதற்குப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் கொள்வனவு நடவடிக்கைகளில் தேவையான திருத்தங்களை மேற்கொண்டு நிகழ்நிலை (Online) முறையின் ஊடாக லொத்தர் சீட்டு விற்பனையை முன்னெடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டமை இதில் பிரதானமாக காணப்பட்டது.

இதன்போது நிகழ்நிலை (Online) முறையின் ஊடாக லொத்தர் சீட்டு விற்பனையை முன்னெடுப்பதற்கு வழியமைத்து, எமது லொத்தர் சீட்டுக்களை சர்வதேச மட்டத்திற்கு எடுத்துச்சென்று விசேடமாக வெளிநாடுகளிலுள்ள இலங்கையர் மத்தியில் எமது லொத்தர் சீட்டுக்களை பிரபலப்படுத்தி அவர்களை அதன்பால் கவர்ந்திழுக்கும் நோக்குடன் தேசிய கிரிக்கட் சபையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஐபிஎல் கிரிக்கட் போட்டிகளின் போது அதற்காக அனுசரணை

வழங்கி பிரச்சாரப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இதன்போது நாட்டில் நிலவுகின்ற டொலர் பிரச்சினைக்கு தீர்வாக லொத்தர் சீட்டுக்களை கிரிக்கட் நிறுவனத்தின் இணையதளத்தின் ஊடாக டொலர் நாணயத்தில் விற்பனை செய்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், 3 வாரங்களாக இடம்பெற்றிருந்த எல்பிஎல் கிரிக்கட் போட்டி முடிவடையும் வரையிலும் அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது போயிருந்தமையால் சர்வதேச மட்டத்தில் எமது லொத்தர் சீட்டை விற்பனை செய்வதற்கான அரிய சந்தர்ப்பம் கைநழுவிப் போயிருந்தது.

மேலும், போக்குவரத்து முறைமை சீர்குலைந்தமை, எரிபொருள் பற்றாக்குறை ஆகியன காரணமாக லொத்தர் சீட்டுக்களை விநியோகிக்கும் நடவடிக்கைகளில் ஏற்பட்டிருந்த தாமதங்களை நிவர்த்திக்கும் நோக்குடன் அந்த நடவடிக்கைகளை கூரியர் முறையின் ஊடாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2020 திசெம்பர் 31 இன் இறுதியில் சபையில் சேவையில் ஈடுபட்டிருந்த ஊழியர்களின் எண்ணிக்கை 390 ஆக காணப்பட்டதுடன் அதனுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் 377 ஊழியர்கள் சேவையில் ஈடுபட்டிருந்தனர். ஊழியர்களை தூண்டுவதற்காக இதுவரை செயற்பாட்டிலிருந்த ஊக்குவிப்புகள் மற்றும் நலனோம்பல் முறைகள், மருத்துவ உதவிகள் என்பன தொடர்ச்சியாக செயற்படுத்தப்பட்டதுடன், சிறிய அளவிலான பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

லொத்தர் சீட்டிழுப்பு மற்றும் அவற்றை தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்தல் என்பன எமது நாளாந்த செயற்பாடுகளாக காணப்படுவதுடன், அவை முன்னுரிமைப் பணிகளாகும். அரசாங்கத்தின் டிஜிடல் மயமாக்கல் கொள்கையுடன் இணைந்து லொத்தர் தொழிற்துறையிலும் புதுமைகளைச் செய்தலுக்கான வழிமுறைகளைக் கண்டறியும் நடவடிக்கைகளில் ஒன்றாக லொத்தர் சீட்டிழுப்புக்களை நவீனமயப்படுத்தி நிரந்தர பின்னணியுடன் படமாக்கப்பட்ட virtual system இனைப் பயன்படுத்தி சீட்டிழுப்புக்களை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன் கீழ், நடப்புப் பெறுபேறுகளை பொதுப் பாவனையாளர்களிற்கும் விற்பனை முகவர் வலைப்பின்னலுக்கும் துரிதமாக தொடர்பாடல் செய்வதற்கு பின்னணி உருவாக்கப்பட்டு அவற்றை அவ்வப்போது துரிதமாக தொடர்பாடல் செய்வதற்கு வழியேற்பட்டதுடன் சீட்டிழுப்பு இடம்பெறுகின்ற வேளையிலேயே தேவையான பிரச்சார நடவடிக்கைகள் அதனுடன் இணைந்ததாக இடம்பெறுகின்றமையால் நிறுவனத்திற்கு பாரிய நலன்களை பெற்றுக் கொள்வதற்கு முடிந்திருந்தது.

**எதிர்கால எதிர்பார்ப்புகள்**

லொத்தர் சீட்டுக்களை அச்சிடுகின்ற நிறுவனங்களிற்கு அவற்றை அச்சிடுவதற்குத் தேவையான பாதுகாப்பு கடதாசியை பெற்றுக் கொள்வதில் காணப்படுகின்ற சிக்கலானது எதிர்காலத்தில் நாட்டின் நிலைமை மேலும் மோசமடையுமாயின் பாரிய பிரச்சினையாக உருமாறும் என்ற கருத்தை தவிர்க்க முடியாதுள்ளது. இதன் காரணமாக அச்சிடுகின்ற லொத்தர் சீட்டுக்களிலிருந்து விடுபட்டு டிஜிடல் லொத்தர் சீட்டுக்களின் பால் கவனம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், மாற்றுவழியாக SMS மற்றும் Web லொத்தர் விற்பனை முகவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், ஐபிஎல் கிரிக்கட் போட்டிகளிற்கு அனுசரணை வழங்குவதன் மூலம் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட தேசிய கிரிக்கட் சபையின் ஊடாக (Digital lottery) பிரச்சாரங்களை மேற்கொண்டு தேசிய கிரிக்கட் சபையின் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நிறுவனத்துடன் (IPG) செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அதனை மேற்கொள்வதற்கும் அதன்மூலம் தேவையான நவீனப்படுத்தல்களை செய்து லொத்தர்சீட்டு விற்பனையை அதிகரிப்பதற்காக நடவடிக்கைகளை எடுத்தலை எதிர்வரும் ஆண்டின் முற்பகுதியில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது

**நன்றியுரை**

உலகலாவிய நோய்த்தொற்றின் தாக்கம் சுகாதாரத் துறைக்கு மாத்திரமன்றி சமூக, பொருளாதார மற்றும் அனைத்து துறைகளிற்கும் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்த நிலைமைக்கு மத்தியிலும் எமது செயற்பாடுகளிற்காக உரிய வழிகாட்டல்கள் மற்றும் அறிவுறுத்தல்களை வழங்கிய கௌரவ பிரதமரும் நிதி அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் நிதி அமைச்சராக கடமையாற்றிய கௌரவ பெசில் ராஜபக்ஷ அவர்களிற்கு எனது இதயபூர்வமான நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆண்டு முழுவதும் எமது செயற்பாடுகளிற்காக பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் நல்கிய வரிசை

அமைச்சான நிதி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பதவியணியினருக்கு விசேடமாக நன்றி தெரிவிப்பதுடன் வர்த்தக நடவடிக்கைகளிற்காக எம்முடன் சம்பந்தப்பட்டுள்ள வழங்குனர்கள், லொத்தர்சீட்டு அச்சிடும் நிறுவனங்கள், வங்கியாளர்களான மக்கள் வங்கி உள்ளிட்ட இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் சம்பத் வங்கி போன்ற நிறுவனங்கள் வழங்கிய ஆதரவை மிகவும் நன்றியுடன் நினைவுகூர்கின்றேன். அதேபோன்று கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு தேவையான வழிகாட்டல்களை வழங்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் அவரது ஊழியர்கள் உள்ளிட்ட அரச கணக்காய்வு கிளைக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த கடினமான நேரத்தில் தமது உயிருக்கு காணப்படுகின்ற ஆபத்தினையும் பொருட்படுத்தாது விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு நேரடியாக பொதுமக்களுடன் தொடர்பை பேணி அர்ப்பணிப்புடன் உழைத்த எமது மாவட்ட விற்பனை விநியோகத்தர்கள், விற்பனை முகவர்கள் மற்றும் விற்பனை உதவியாளர்கள் உள்ளிட்ட முழுமையான விநியோக வலையமைக்கும் நன்றிகளை தெரிவிப்பதுடன் அவர்களது அர்ப்பணிப்பு இல்லாமல் இருந்திருந்தால் இந்த வெற்றி சாத்தியமில்லை. எனவே, முழு நிறுவனம் சார்பாகவும் அவர்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

கொவிட் நிலமைக்கு மத்தியில் ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்துதலுக்கு காணப்பட்ட சட்ட வரையறைகள் மற்றும் ஊழியர்கள் சுகவீனமடைதல் காரணமாக ஊழியர் பற்றாக்குறை என்பவற்றை சிறந்தமுறையில் முகாமைத்துவம் செய்து உயர் அர்ப்பணிப்புடன் செயற்பாடுகளில் ஈடுபட்டு சுறுசுறுப்பாக பணிகளை மேற்கொண்ட மத்திய மற்றும் கனிஷ்ட நிலை முகாமைத்துவத் துறையிலுள்ள உத்தியோகத்தர்களிற்கும் ஒட்டுமொத்தமாக அனைத்து ஊழியர்களிற்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

விற்பனை வலைப்பின்னலிலுள்ள ஊழியர்களின் அர்ப்பணிப்பு இல்லாமல் இருந்திருந்தால் இந்த வெற்றி சாத்தியமற்றதாக இருந்திருக்கும்.

ஏற்பட்டிருந்த சவால்கள் காரணமாக சந்தையில் லொத்தர்சீட்டுக்களின் பற்றாக்குறை காணப்பட்ட போதிலும், எம்முடன் நம்பிக்கையுடன் கரம்கோர்த்து செயற்பட்டிருந்த நுகர்வோர் பெருமக்களிற்கு எனது இதயம்கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலே குறிப்பிடப்பட்டவாறு நோய்த்தொற்றின் தாக்கம் நேரடியாகவும் மறைமுகமாகவும் எதிர்வரும் ஆண்டின் போதும் எமது வாழ்வாதாரத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக அமையும் என்பதனை எதிர்பார்க்க முடிவதுடன் அவ்வாறான சூழ்நிலைக்கு மத்தியிலும் எம்முடன் கரம்கோர்த்து 2022 ஆம் ஆண்டை வெற்றிமிக்க ஆண்டாக மாற்றுவதற்கு ஒன்றினைவீர்கள் என எதிர்பார்ப்பதுடன் அதற்காக எமது அனைத்து வாடிக்கையாளர் தரப்புக்களிற்கும் அழைப்பு விடுக்கின்றேன்.

**சட்டத்தரணி, லலித் பியும் பெரேரா**
தலைவர்,
தேசிய லொத்தர் சபை
கொழும்பு

2022 பெப்ரவரி 25

# பிரதான நிதி உத்தியோகத்தரின் செயலாற்றல் அறிக்கை



2021 ஏப்ரல் முதல் யூன் வரையிலும் 2021 ஆகஸ்ட் முதல் அக்டோபர் வரையிலும் செயற்பாட்டு நடவடிக்கைகளை பாதித்திருந்த கொரோனா வைரஸ் அலை காரணமாக உள்நாட்டிலும் உலக அளவிலும் சிறந்த வணிகச் சூழலுக்கு கொரோனா தொற்றுநோயின் பரவல் உதவியிருக்கவில்லை. 2021 சனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களை உள்ளடக்கிய முதலாவது காலாண்டின் ஒவ்வொரு மாதத்திலும் ரூபா 2,000 மில்லியனுக்கும் அதிகமான விற்பனையை சபை பதிவு செய்திருந்தது. மார்ச் மாத விற்பனை வருமானம் 2016 திசெம்பர் மாதத்தில் பதிவு செய்யப்பட்ட ரூபா 2,220 மில்லியனுக்கு ஒப்பாக இதுவரை ஒரு மாதமொன்றில் பதிவு செய்யப்பட்ட அதிகபட்சமான ரூபா 2,366 மில்லியன் விற்பனையை பதிவு செய்திருந்தது. 2021 ஏப்ரல் 25 அன்று கொரோனா தொற்றுநோயின் இரண்டாவது அலையுடன் பின்னடைவு ஏற்பட்டதுடன் இதன் விளைவாக இரண்டாவது அலையின் போது சுமார் 36 நாட்களுக்கு வணிகம் மூடப்பட்டது. மேலும், கொரோனா தொற்றுநோயின் மூன்றாவது அலை 2021 ஆகஸ்ட் 21 அன்று தோன்றியதுடன் 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் திகதி வரை அது நீடித்தது, இந்த காலகட்டத்தில் லொத்தர் சீட்டிழுப்புக்கள் எதுவும் நடைபெறவில்லை. ஆகையால் லொத்தர் வருமானம் சுமார் 42 நாட்களுக்கு மீண்டும் இழக்கப்பட்டது.

2021 இல் விற்பனை வருமானமானது 2020 ஆம் ஆண்டில் அடையப்பட்ட ரூபா 18,041 மில்லியனுடன் ஒப்பிடும்போது ரூபா 17,292.0 மில்லியன் வரை குறைவடைந்து 4.1% குறைவைக் காண்பித்ததுடன் இது ரூ. 749.1 மில்லியன் குறைவாகும்.

சுரண்டும் லொத்தர் சீட்டுக்கள் அல்லாத ஏனைய நான்கு லொத்தர் சீட்டுக்கள் 2021 ஆம் ஆண்டிலும் கூட ரூபா 1 பில்லியனுக்கும் அதிகமான பங்களிப்பை வழங்கியிருந்தன. மஹஜன சம்பத லொத்தரிலிருந்து அதிகபட்ச பங்களிப்பான ரூபா 6,475 மில்லியன் (2020 இல் ரூபா 5,760.1 மில்லியன்) கிடைத்திருந்ததுடன் கொவிசெத லொத்தரின் பங்களிப்பு ரூபா 4,442 மில்லியன் (2020 இல் ரூபா 5,290.6 மில்லியன்) ஆகும். மெகா பவர் ரூபா 2,233 மில்லியன் (2020 இல் ரூபா 3,182.5 மில்லியன்) தொகையினையும், தன நிதானய ரூபா 2,370 மில்லியன் (2020 இல் ரூபா 1,122.0 மில்லியன்) தொயினையும் விற்பனை வருமானமாக ஈட்டித் தந்திருந்தன. சுரண்டல் லொத்தர்களிடையே 2022 ஆம் ஆண்டில் செவன லொத்தர் விற்பனை ரூபா 221 மில்லியன் (2020 இல் ரூபா 157.5 மில்லியன்) ஆகக் காணப்பட்டது.

முன்னைய ஆண்டில் உருவாக்கப்பட்ட 33 சூப்பர் பரிசு வென்றவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் 38 வெற்றியாளர்கள் உருவாக்கப்பட்டனர். வாசனா சம்பத, தருதிரி சம்பத மற்றும் சுபிரி வாசனா சம்பத ஆகிய லொத்தர்களின் பரிசுக் கட்டமைப்புகள் மாற்றியமைக்கப்பட்டன. மெகாபவர் லொத்தரின் பிரதான பரிசு ரூபா 50 மில்லியன் இலிருந்து ரூபா 100 மில்லியனாக மாற்றப்பட்டதுடன் அந்த லொத்தரின் ஏனைய இரண்டு சுப்பர் பரிசுகளும் மாற்றியமைக்கப்பட்டன. நீரோகா லொத்தரின் பரிசுக் கட்டமைப்பு சம்பத லக்ன வரம என்ற புதிய பெயரில் மாற்றப்பட்டது.

2021 ஆம் ஆண்டின் விற்பனை மீதான சிறப்பு வரியாக சபை அரசாங்கத்திற்கு செலுத்திய நேரடி பங்களிப்பு ரூபா 2,162.0 மில்லியனாக இருந்ததுடன் இது 2020 ஆம் ஆண்டில் இது ரூபா 2,205.0 மில்லியனாக இருந்தமையால் ரூபா 43 மில்லியன் குறைவைக் காண்பித்தது. இது பிரதானமாக இரண்டு மாத காலத்திற்கு கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக லொத்தர் சீட்டிழுப்புக்களை இரத்து செய்தமையால் ஏற்பட்டிருந்தது. நடப்பு ஆண்டில் வரிகளுடன் சேர்த்து அரசாங்கத்திற்கு மேற்கொள்ளப்பட்ட மொத்த பங்களிப்பு ரூபா 2,614.3 மில்லியனாக இருந்ததுடன், இது விற்பனையில் 15.1 சதவீதமாக காணப்பட்டது.

அதேவேளை 2021 ஆம் ஆண்டில் சபை செலுத்திய முகவர் தரகுப்பணம் ரூபா 3,457.5 மில்லியன் ஆகவும் 2021 ஆம் செலுத்திய பரிசுகள் ரூபா 8,352.1 மில்லியன் ஆகவும் காணப்பட்டது. தரகுப் பணம் மற்றும் பரிசுகளில் ஏற்பட்ட குறைவுகளிற்கு பிரதான காரணம் கோவிட் 19 தொற்றுநோயால் விற்பனை வீழ்ச்சியடைந்தமையாகும்.

சபையின் ஏனைய வருமானங்கள் 2020 ஆம் ஆண்டின் ரூபா 422.9 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டில் 416.0 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அது ஓரளவு குறைவைக் காண்பித்தது. பிரதானமாக அரசாங்க வங்கிகளில் மிகை நிதிகளை முதலீடு செய்வதன் மூலம் இந்த வருமானம் பெறப்படுவதுடன் 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 353.3 மில்லியன் வருமானத்திற்கு எதிராக 2021 ஆம் ஆண்டில் அது ரூபா 332.9 மில்லியன் ஆகக் காணப்பட்டது.

சபையின் செயற்பாட்டுச் செலவுகள் 2021 ஆம் ஆண்டில் ரூபா 1,898.4 மில்லியனாக இருந்ததுடன், இது விற்பனையில் 10.9 சதவீதமாக காணப்பட்டது. இது முன்னைய ஆண்டில் ரூபா 1,675.1 மில்லியனாக இருந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் விற்பனையில் அது 9.2 சதவீதமாக காணப்பட்டது. இது விற்பனையின் சதவீதமாக கணிசமான குறைப்பைக் காட்டியது.

2020 இல் விற்பனையில் 7.9 சதவீதமாக பதிவாகியிருந்த ரூபா 1,434.8 மில்லியன் வரிக்கு முந்திய தேறிய மிகைக்கு எதிராக 2021 ஆம் ஆண்டிற்கான வரிக்கு முந்திய மிகை ரூபா 1,003.3 மில்லியனாகக் காணப்பட்டு விற்பனையில் 5.8 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்தது. 2021 ஆம் ஆண்டில் சபையின் தேறிய மிகை ரூபா 960.3 மில்லியனாகக் காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டில் இது ரூபா 1,083.1 மில்லியன் ஆகும். உலகளாவிய நோய்த்தொற்று காரணமாக ஒட்டுமொத்த சர்வதேச பொருளாதாரமும் பாதிக்கப்பட்டிருந்தமையால் லொத்தர் விற்பனை குறைவடைந்திருந்த போதிலும் இலாபத்தை உருவாக்குவதில் மற்றுமோர் வெற்றிகரமாக ஆண்டாக இந்த ஆண்டும் நிறைவடைந்திருந்தது.

**கலாநிதி, ஹர்ஷ பண்டார**
பிரதான நிதி உத்தியோகத்தர்,
தேசிய லொத்தர் சபை.

2022 பெப்ரவரி 25

# கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை



கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு 2005 இல் தாபிக்கப்பட்டதுடன் அன்று முதல் கடந்த பல ஆண்டுகளாக பட்டியலிடப்பட்டபடி அதன் கூட்டங்கள் நடத்தப்பட்டன. 2021 ஆம் ஆண்டில், Covid 19 நிலைமையிலும் நான்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட முக்கியமான விடயங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு குழு எப்போதும் உதவியிருந்ததுடன் தேசிய லொத்தர் சபையின் முகாமைத்துவக் குறைபாடுகளை குறைத்துக் கொள்வதற்கு தேவையான போதெல்லாம் காத்திரமான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

தேசிய லொத்தர் சபையின் கணக்காய்வுக் குழு பின்வரும் உத்தியோகத்தர்களை உள்ளடக்கியிருப்பதுடன், அது உரிய அதிகாரத் தரப்பினரால் அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகளிற்கு அமைவாக அதனது கூட்டங்களை நடாத்துகின்றது.

1. திரு. எச்.சி.டி.எல். சில்வா - தலைவர் (நிறைவேற்று தரமற்ற பணிப்பாளர்)
2. திரு. கே.பி. லியனகே - உறுப்பினர் (பணிப்பாளர்)
3. திரு. டி.டி. ஜயசிறி - உறுப்பினர் (பணிப்பாளர்)
4. திருமதி. தனுஜா சம்மாணி - உள்ளக கணக்காய்வாளர்

**அவதானிப்பாளர்கள்**

1. தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பிரதிநிதி
2. திருமதி. எஸ். பாலசூரிய - செயலாளர் (பிபொமு - சட்டம்/சபை செயலாளர்)

தேவைப்படும் போது தேசிய லொத்தர் சபையின் முகாமைத்துவ அங்கத்தவர்கள் மேலதிக தெளிவுபடுத்தலிற்காகவும் விசாரணைகளிற்காகவும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினது கூட்டங்களிற்கு அழைக்கப்பட்டனர்.
கணக்காய்வுக் குழுவின் மேற்பார்வை பொறுப்புக்களான சபையின் நிதிக் கூற்றுக்களின் நேர்மைத்தன்மை, இடர் முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாடு, சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைப்பாடுகளுடன் இணங்குதல், வெளிப்புற கணக்காய்வாளர்களின் சுதந்திர நிலையினை பலப்படுத்துதல் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகளின் செயலாற்றல், தகைமைகள் மற்றும் சுதந்திரத்தினைக் கண்காணித்தல் போன்றவற்றை நிறைவேற்றுவதற்காக பணிப்பாளர் சபைக்கு உதவுவதே கணக்காய்வுக் குழுவின் வகிபாகமாக காணப்படுகின்றது.

இந்த ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது தேசிய லொத்தர் சபையின் கணக்காய்வாளர் மற்றும் உள்ளகக் கணக்காய்வாளராலும் வழங்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகள் இரண்டிலும் செயல்பாட்டு சிக்கல்கள் மற்றும் கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டியிருந்த முக்கியமான விடயங்களை நெருக்கமாக மீளாய்வு செய்தது.

**எச்.சீ.டி.எல். சில்வா**
தலைவர்,
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு,
தேசிய லொத்தர் சபை
கொழும்பு

2022 பெப்ரவரி 25

# 3

# நிதிக் கூற்றுகள் மற்றும் தகவல்கள்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } எனது இலக்கம்: TPD/F/NLB/1/21/27    ඔබේ අංකය / உமது இல. / Your No. }    දිනය / திகதி / Date } திகதி: 2022 செப்டெம்பர் 09

தலைவர்
தேசிய லொத்தர் சபை

**தேசிய லொத்தர் சபையின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய பிரமாணத் தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய லொத்தர் சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரமான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව   இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.   No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34   +94 11 2 88 72 23   ag@auditorgeneral.gov.lk   www.naosl.gov.lk

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) 2016 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய PE/LO/NLB/Gen/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் படி 2016 ஆம் ஆண்டில் தேசிய லொத்தர் சபையினால் நிறுத்திவைக்கப்பட்டிருந்த உழைப்புக்களிலிருந்து ரூபா 600 மில்லியன் தொகையை திரட்டிய நிதியத்துக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, சபையால் 2016 ஆம் ஆண்டில் இரண்டு சந்தர்ப்பங்களில் மொத்தமாக ரூபா 550 மில்லியன் தொகை திரட்டிய நிதியத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டிற்கான சபையின் நிதிக் கூற்றுக்களில் ரூபா 550 மில்லியன் தொகை சபையின் கட்டிட ஒதுக்க நிதியத்துக்கு பொதுத் திறைசேரியிடமிருந்து பெறவேண்டிய தொகையாக குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் அவ்வாறானதோர் தொகை சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய மீதியாக காட்டப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் வழங்கப்பட்ட 2022 மே 25 ஆந் திகதிய PED/S/NLB/3/3(ii) ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள படி அவ்வாறு பெறப்பட்ட தொகை திரட்டிய நிதியத்துக்கு செலவு வைக்கப்பட்டுள்ளமையால் அந்தத்தொகையை மீளளித்தல் என்பது சாதாரணமாக இடம்பெறுவதில்லை என குறிப்பிடப்பட்டிருந்தது. அதன்படி பெறவேண்டிய கணக்கு அத்தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த காசுப் பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன மாற்றத்தில் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதியும் செலுத்திய பணிக்கொடை படியும் ரூபா 2,184,950 தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2020 ஆம் ஆண்டில் வங்கியிடமிருந்து கடன் தொகையாக பெறப்பட்டு சபையின் ஊழியர்களிற்கு விழா முற்பணமாக வழங்கப்பட்டிருந்த ரூபா 3,675,000 தொகையை மாதாந்தம் வங்கிக்கு திருப்பிச் செலுத்துதல் மற்றும் ஊழியர்களிடமிருந்து அறவிடுதல் தவறாக கணக்குகளில் பதியப்பட்டிருந்தமையால் குறித்த கடன் தவணைக் கட்டணமும் அதற்கான வட்டியும் ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் நிலைமைக் கூற்றில் ஊழியர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 2,915,533 நடைமுறைச் சொத்துக்களின் கீழும், வங்கிக்குச் செலுத்த வேண்டிய ரூபா 2,915,533 நடைமுறைப் பொறுப்புக்களின் கீழும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் கணக்கின் மீதி ரூபா 14,500,033 ஆகும். அந்த மீதியினுள் 2019 ஆம் ஆண்டு முதல் பல்வேறுபட்ட வழங்குனர்கள் மற்றும் கடன்கொடுத்தோர்களிற்கு 56 காசோலைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுப்பனவுகள் உள்ளடங்கியிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இரத்துச் செய்யப்பட்ட கணக்கில் உள்ளடங்கியுள்ள கொடுக்கல் வாங்கல்களை பரிசோதித்து உரிய கணக்குகளில் சீராக்கல்களை மேற்கொண்ட பின்னர் இரத்துச் செய்யப்பட்ட கணக்கிலுள்ள மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சபையால் மக்கள் வங்கியில் பேணிவரப்படுகின்ற மஹஜன சம்பத ஜனதாபிசேகய சுவர்ணஜயந்திய கணக்கின் பொருட்டு தயாரிக்கப்பட்டிருந்த 2021 வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்த மற்றும் செலவு வைக்கப்பட்டிருந்த மீதிகள் முறையே ரூபா 72,260,545 மற்றும் ரூபா 76,970,786 ஆகும். 2010 ஆம் ஆண்டு முதல் நிலவி வருகின்ற அந்த மீதியை இனங்கண்டு அதனை தீர்ப்பதற்கு 2022 யூன் 15 ஆந் திகதி வரையிலும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 கம்பனியின் 2021 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு பின்னர் எனக்குச் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற சபையின் 2021 ஆம் ஆண்டு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள ஆனால், அது தொடர்பில் நிதிக்கூற்றுக்களிலும் எனது கணக்காய்வு அறிக்கையிலும் உள்ளடக்கப்பட்டிருக்காத தகவல்களே ஏனைய தகவல்கள் ஆகும். அவ்வாறான ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்கியிருக்காததுடன் நான் அவை மீது எவ்வகையிலும் சான்றுப்படுத்தும் முடிவுரையினை வெளிப்படுத்தவில்லை.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வு தொடர்பாக, எனது பொறுப்பானது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கையில் வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்களை நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது ஏனைய வகையில் பெற்றுக் கொள்ளப்பட்ட எனது அறிவின் பிரகாரம் பொருண்மையாக பொருத்தமற்றுள்ளதா என்பதனை கவனித்துப் பார்ப்பதாகும்.

சபையின் 2021 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை நான் வாசிக்கையில் அதில் பொருண்மையான பிழையாகக் காட்டுதல் உள்ளது என முடிவுக்கு வந்தால் சரிசெய்வதற்காக நிருவகிக்கின்ற தரப்பினர்கக்கு இவ்விடயங்களைத் நான் தெரியப்படுத்துதல் வேண்டும். இன்னும் சரிசெய்யப்படாத பொருண்மையான பிழையாகக் காட்டுதல்கள் இருக்குமாயிருந்தால் அவற்றை அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க தயாரித்தும் சரியாகவும் நியாயமாவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபை தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் சபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை நிருவகிக்கின்ற தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சபையின் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.5 கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புக்களை மேற்கொண்டு தொழில்சார் ஐயப்பாட்டினை பேணுகிறேன். மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல். தவறாகக் காட்டுவது காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஏற்படும் ஆபத்தின் விளைவானது அதிகமாகும்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக சபையின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீதான அடிப்படையினை பயன்படுத்துதலின் பொருத்ததன் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் முடிவு செய்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையல்லாததாக எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் நிலைமைகள் சபை தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை முடிவுறுத்த நேரிடலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், மற்றும் உள்ளடக்கப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது பலவீனங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

## 2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையிலிருந்து தோன்றும் வகையில் முறையான நிதி அறிக்கைகளை சபை பேணி வந்திருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அடிப்படையில் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகள் பொருண்மையான விடயங்களுக்கான மட்டுப்பாடுகளுக்குள் காணப்பட்டன. எனினும், வேறு எதுவும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

2.2.1. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க சபையின் அங்கத்தவர்கள் எவருக்கும் சபை சம்பந்தப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழமையான வணிக செயற்பாடுகளுக்குப் புறம்பாக தொடர்புகள் காணப்படுகின்றமையை குறிப்பிடுதல்.

2.2.2. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து, ஏதாவது தொடர்புபட்ட எழுத்திலான சட்டங்களுக்கு அல்லது சபையின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாதமையை குறிப்பிடல்.

| சட்டங்கள், விதிகள் / பிரமாணங்களுக்கான தொடர்பு | அவதானிப்பு |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 10(5) ஆம் பந்தி மற்றும் 1997 இன் 35 ஆம் இலக்க நிதி (திருத்திய) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1963 இன் 11 ஆம் இலக்க நிதி சட்டத்தின் 17(2) ஆம் பிரிவு | லொத்தர் வருமானத்தில் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய செலவினங்கள் கழிக்கப்பட்டதன் பின்னர் எஞ்சிய தொகை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் அவ்வாறான ரூபா 1,529,921 கூட்டுத்தொகையான இலாபம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படாது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் 11 ஆம் பிரிவு | அரசாங்க கூட்டுத்தாபனமொன்றின் எந்தவொரு தொகையும் நிதி அமைச்சரின் அங்கீகாரமின்றி முதலீடு செய்யப்பட முடியாத போதிலும், சபையால் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 5,071,443,227 மற்றும் ரூபா 1,353,220,014 என்பன முறையே நிலையான வைப்புக்கள் மற்றும் கால வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. |
| (இ) 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 15(2) மற்றும் (3) ஆம் பந்திகள் | 1998 ஆம் ஆண்டின் போது சபையினால் அசரன சரண நிதியம் எனும் பெயரில் நிதியமொன்று ஆரம்பிக்கப்பட்டு அந்த நிதியத்துக்கு லொத்தர் பரிசு வென்றோர்களின் அன்பளிப்பு மற்றும் லொத்தர் சீட்டுக்கள் விற்பனை வருமானம் ஆகியவற்றிலிருந்து 0.005 சதவீதம் செலவு வைக்கப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த நிதியத்தில் ரூபா 24,030,981 மீதியொன்று நிலவியது. இவ்வாறு விசேட நிதியமொன்றை பேணிச் செல்வதற்காக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வில்லை. அதற்கமைய, திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய நிதிகள் சட்டரீதியற்ற விதத்தில் சபையில் பிடித்து வைக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாது பதவியணியினருக்காக ஊக்கு விப்புத் திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்கமைய ஒவ்வொரு லொத்தர் சீட்டின் விற்பனை வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டில் ரூபா 110,344,291 ஊக்குவிப்புப் படியாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) 1993 சனவரி 21 ஆந் திகதிய PE1/70/7/Vol1 ஆம் இலக்க பிரதி திறைசேரி செயலாளரின் சுற்றுநிருபம் | அரசிற்காக நடாத்தப்படும் அனைத்து லொத்தர்களிலிருந்தும் கிடைக்கும் வருமானத்தில் 16.5 சதவீதமானது திரட்டிய நிதியத்திற்கு தாக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டிருந்த 11 வகையான லொத்தர்களின் வருமானத்தில் இருந்து 10 சதவீத பெறுமதி மாத்திரமே திரட்டிய நிதியத்துக்கு தாக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் இதுவரை திறை சேரிக்கு தாக்கீடு செய்யப்பட்டிருக்காத பெறுமதி ரூபா 681,851,572 ஆகும். |

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க சபையின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளிற்கு இணங்காத வகையில் செயற்பட்டுள்ளமை தொடர்பில் குறிப்பிடுதல்,

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க சபையின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் பயனுறுதியாக காலஎல்லைக்குள் சட்டங்களுக்கு இணக்கமாக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என குறிப்பிடுதல்.

## 2.3 ஏனைய அவதானிப்புக்கள்

(01) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு லொத்தர் சீட்டு விற்பனை முகவர்களிடமிருந்து ரூபா 103,190,357 அறவிடப்பட வேண்டியிருந்தது. லொத்தர் சீட்டு விற்பனை முகவர்கள் அதற்காக பிணை வைக்க வேண்டியிருந்த போதிலும், மொத்தம் ரூபா 20,400,906 தொகைக்காக மாத்திரம் அவ்வாறு பிணைகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. லொத்தர் சீட்டு விற்பனை முகவர் கடன்பட்டோர் மீதியில் 80 சதவீதம் அல்லது ரூபா 82,789,451 தொகைக்கு அவ்வாறு பிணைகள் பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

(02) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 365 நாட்களைக் கடந்த கடன்பட்டோர் மீதி ரூபா 29,271,401 ஆனதுடன், அந்த அறவிடப்பட வேண்டிய தொகையினை அறவிடுவதற்கு அல்லது அதில் வங்கி உத்திரவாதத்துடன் கூடிய ரூபா 2,299,197 கடன்பட்டோர் பெறுமதிக்கான வங்கி உத்தரவாதத்தை காசாக்குவதற்கு சபை தவறியிருந்தது.

(03) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் பதிவுசெய்யப்பட்டிருந்த விற்பனை முகவர்களில், 64 விற்பனை முகவர்களிற்கு சுரண்டல் லொத்தர் சீட்டுக்களும் 79 விற்பனை முகவர்களிற்கு சீட்டிழுக்கப்படும் லொத்தர் சீட்டுக்களும் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் சுரண்டல் லொத்தர் சீட்டுக்களுக்குரிய 10 விற்பனை முகவர்களும் சீட்டிழுக்கப்படும் லொத்தர் சீட்டுக்களுக்குரிய 25 விற்பனை முகவர்களும் மாத்திரம் வங்கி பிணைமுறிகளை வழங்கியிருந்தனர். அதற்கமைய சுரண்டல் லொத்தர் சீட்டுக்களுக்குரிய 54 விற்பனை முகவர்களிடமிருந்தும் சீட்டிழுக்கப்படும் லொத்தர் சீட்டுக்களுக்குரிய 54 விற்பனை முகவர்களிடமிருந்தும் வங்கி பிணைமுறிகள் பெறப்பட்டிருக்கவில்லை.

(04) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு Colombo Airport Super Draw லொத்தர் சீட்டு விற்பனை மீதான கடன்பட்டோர் மீதி ரூபா 5,151,652 ஆகும். இந்த லொத்தரின் சீட்டிழுப்பு இறுதியாக 2018 சனவரி 21 ஆந் திகதி இடம்பெற்றிருந்தது. இந்தக் கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கு 2022 ஏப்ரல் 30 வரை சபை தவறியிருந்ததுடன், அந்த முழுத் தொகைக்கும் 2021 இன் நிதிக்கூற்றுக்களில் ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(05) பல்வேறு சீட்டிழுப்புக்களிற்காக கட்டளையிடப்படுகின்ற லொத்தர் சீட்டுக்களை உரிய திகதியில் வழங்குவதற்கு வழங்குனர் தவறும் பட்சத்தில், உடன்படிக்கைகளின் பிரகாரம் குறித்த அச்சகத்திடமிருந்து தண்டப் பணம் அறவிடப்படுதல் வேண்டும். அந்தத் தண்டப் பணத்தை குறித்த அச்சத்திற்கான எதிர்வரும் கொடுப்பனவிலிருந்து கழித்துக் கொள்ளப்படுதல் வேண்டும். 2020 சனவரி 20 முதல் 2020 செப்தெம்பர் 2020 வரை இடம்பெற்ற 13 சீட்டிழுப்புக்களிற்குரிய லொத்தர் சீட்டுக்களை அச்சிட்டுக் கையளிப்பதற்கு தாமதிக்கப்பட்டமை காரணமாக அச்சகங்களிற்கு மொத்தம் ரூபா 1,031,759 தண்டப்பணம் விதிக்கப்பட்டிருந்த போதிலும், அந்தத் தண்டப்பணத்தை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(06) நிதிக்கூற்றுக்களில் ஊழியர் கடன்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள மரணித்த, பதவிநீக்கம் செய்யப்பட்ட மற்றும் பதவி வறிதாக்கப்பட்ட ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,187,952 விழா முற்பணத்தை அறவிடுவதற்கு 2021 திசெம்பர் 31 வரை சபை தவறியிருந்தது.

(07) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பரிசு ஒதுக்க நிதியக் கணக்கின் மீதி ரூபா 2,411,724,762 ஆகக் காணப்பட்டதுடன் அதில் ஜனாபிசேகய, மனுசத் மெஹவர, ரன்கிருள மற்றும் ரஜ தினும எனும் லொத்தர்களின் சீட்டிழுப்புக்கள் நடாத்தப்பட்டு ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலம் கடந்திருந்தது. ஜனாபிசேகய லொத்தர் சீட்டு ஒதுக்க நிதியத்தில் காணப்பட்ட பாதக மீதியான ரூபா 6,759,950 தொகையினையும் மனுசத் மெஹவர, ரன்கிருள மற்றும் ரஜ தினும எனும் லொத்தர்களின் ஒதுக்க நிதியத்தில் காணப்பட்ட சாதக மீதிகளான ரூபா 15,166,256 மொத்தத் தொகையினையும் தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(08) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய பரிசுகளின் மீதியாக ரூபா 1,070,847,638 தொகை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், அதில் காணப்படுகின்ற பவர் லொட்டோ, ரஜ தினும, ரன் கிருள மற்றும் மஹஜன சம்பத ஜனாபிசேகய லொத்தர் சீட்டுக்களிற்குரிய பரிசுகளின் மொத்தப் பெறுமதி ரூபா 15,799,882 ஆகும். குறித்த லொத்தர்களின் சீட்டிழுப்புக்கள் நடாத்தப்பட்டு 06 மாதங்கள் கடந்திருந்த போதிலும், இந்தப் பரிசுப் பெறுமதிகளை குறித்த பரிசு வென்றோர்களிற்கு செலுத்துவதற்கு அல்லது உரித்துக் கோராத பரிசுகள் என இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்காது செலுத்த வேண்டிய பரிசுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(09) மாவட்ட விற்பனை முகவர்களிற்கு விற்பனைக் கூடாரங்களை வழங்குவதற்காக 2018 முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ரூபா 1,380,400 தொகை அறவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரை அவர்களிற்கு விற்பனைக் கூடாரங்களை வழங்குவதற்கு அல்லது பெறப்பட்ட தொகைகளை செலுத்தித் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காது குறித்த தொகை தொடர்ந்தும் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது.

(10) விற்பனை முகவர்களால் வெற்றியீட்டிய லொத்தர் சீட்டுக்களை ஸ்கேன் செய்வதற்காக ரூபா 0.075 குறித்த முகவர்களிற்கு சபையால் செலுத்தப்படுகின்றது. இவ்வாறு வெற்றியீட்டிய லொத்தர் சீட்டுக்களை ஸ்கேன் செய்தமைக்காக 2020 ஆம் ஆண்டு முதல் விற்பனை முகவர்களிற்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 5,380,221 மொத்தத்தொகை 2021 திசெம்பர் 31 வரையிலும் செலுத்தித் தீர்க்கப்படாது வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவற்றின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(11) 2017 யூலை 18 ஆந் திகதி அமைச்சரவையால் சபை தற்போது இயங்குகின்ற வர்த்தக தளத்தை 2020 செப்தெம்பர் மாத இறுதியில் முடிவுறுத்தப்படும் வகையில் 02 ஆண்டு காலத்திற்கு வாடகைக்கு எடுப்பதற்கு அங்கீகாரம் வழங்கியிருந்தது. அந்த வாடகைக் காலம் முடிவடைந்த பின்னர் அமைச்சரவையின் அங்கீகாரமின்றி பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் மீது 2022 மார்ச் மாதம் வரையிலும் அந்த கட்டிடத்தை வாடகை அடிப்படையில் பெற்று இதுவரை ரூபா 117,782,484 வாடகை செலுத்தப்பட்டிருந்தது.

(12) சபையால் தற்போது வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வர்த்தக தளத்திற்கு அருகாமையில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள 2,880 சதுர அடிகள் விஸ்தீரணமுடைய கட்டிடத்தை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு 2018 யூலை 24 ஆந் திகதி அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுகையில் உத்தேச கட்டிடத்தின் நிர்மாண பின்னணி குறித்து அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. இந்தக் கட்டிடம் முறைப்படி அங்கீகாரம் வழங்கப்படாத அத்துமீறிய நிர்மாணமாக காணப்பட்டதுடன், சபையானது அரசாங்க நிறுவனம் என்ற வகையில் அவ்வாறான சட்டவிரோதமான கட்டிடமொன்றை வாடகைக்கு பெற்று 2020 மே முதல் 2022 ஏப்ரல் வரை மொத்தம் ரூபா 19,784,250 தொகையை வாடகையாக செலுத்தியிருந்தது.

(13) 2016 நவம்பர் 29 ஆந் திகதிய 16/2468/719/150 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, சபைக்குச் சொந்தமாக கட்டிடமொன்றை நிர்மாணித்துக் கொள்வதற்கும் அதற்காக ரூபா 41 மில்லியன் பெறுமதிக்கு மதியுரைச் சேவையை பெற்றுக் கொள்வதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டு மீளாய்வாண்டு வரை 05 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. 1963 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த தேசிய லொத்தர் சபை

வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடங்களில் நடாத்தி வரப்பட்டிருந்ததுடன், கடந்த 07 ஆண்டுகளில் மாத்திரம் கட்டிட வாடகைக்காக ரூபா 399,471,200 செலவிடப்பட்டிருந்தது.

(14) சபையினால் 2003 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்டிருந்த Sage ACCPAC என்ற மத்தியமயப்படுத்திய கணனி மென்பொருள் மூலம் சபையின் கணக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டின் போது இந்த முறைமை பன்முகப்படுத்தப்பட்டிருந்தமையின் காரணமாக அந்த மென்பொருளிலிருந்து பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. முன்னர் காணப்பட்ட மத்தியமயப்படுத்திய முறைமையின் கீழ் நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் காணப்பட்ட நம்பகத்தன்மை இதன் மூலம் கேள்விக்குரியாகியிருந்தது. அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட இந்த மாற்றங்கள் மாற்றங்கள் காரணமாக ஏற்படுகின்ற அச்சுறுத்தல்களை பொறுப்பேற்பதற்கு இந்த மென்பொருளினை அறிமுகப்படுத்திய கம்பனியும் கூட இணங்கியிருக்கவில்லை.

(15) முன்னைய ஆண்டுகளில் மேலதிகமாகச் செலுத்தியிருந்த ரூபா 7,392,287 தொகையான ஊழியர் பணிக்கொடையினை சபைக்கு மீளப் பெற்றுக்கொள்ளுமாறு பொது முயற்சிகள் மீதான பாராளுமன்றக் குழுவால் 2013 மார்ச் 21 ஆந் திகதி பணிப்புரை வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்தத் தொகையினை அறவிடுவதற்கு அல்லது பெறப்பட வேண்டிய தொகையாக நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலதிகமாகச் செலுத்தப்பட்டுள்ள ஊழியர் பணிக்கொடையினை சபைக்கு மீளளிக்குமாறு உரிய ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டமை மாத்திரமே சபையால் மேற்கொள்ளப்பட்டிருந்த நடவடிக்கையாகும்.

(16) ஆரம்ப கணக்காய்வு நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டு விரிவான விற்பனை அறிக்கை (Sales Details Report) சான்றுறுதிப்படுத்திய பின்னர், மீண்டும் விற்பனை முகவர்களிற்கு 500 லொத்தர்கள் வீதம் இரண்டு சந்தர்ப்பங்களில் 1000 லொத்தர் சீட்டுக்கள் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, ஒரு லொத்தர் சீட்டிழுப்பின் ஆரம்ப கணக்காய்வு நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டு விரிவான விற்பனை அறிக்கை (Sales Details Report) சான்றுறுதிப்படுத்திய பின்னர் இவ்வாறு கணனி முறைமையின் ஊடாக அந்த சீட்டிழுப்பிற்காக மீண்டும் விற்பனை பட்டியல்களை உள்வாங்கிய சந்தர்ப்பங்கள் காணப்பட்டமையால் சபையின் லொத்தர் சீட்டிழுப்பு நடவடிக்கைகளிற்காக குறித்த கணனி முறையிமையின் ஊடாக வழங்கப்படுகின்ற அறிக்கைகளின் சரியான தன்மை தொடர்பில் கணக்காய்வில் திருத்திப்பட முடிந்திருக்கவில்லை.

(17) மீளாய்வாண்டிற்கான மொத்தச் செலவினத்தின் ஏறத்தாழ 57 சதவீதமான அளவு விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகச் செலவுகளாக காணப்பட்டதுடன் ரூபா 1,074,102,918 தொகையான அச்செலவினத்தில் 84 சதவீதத்திற்கு கிட்டிய தொகை சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை மேம்படுத்தல் செலவாகக் காணப்பட்டது. அவ்வாறே சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை மேம்படுத்தல் செலவானது ஒட்டுமொத்தச் செலவினத்தில் 48 சதவீதமாகக் காணப்பட்டது. இருப்பினும், இருவருக்கு உரிமையான சந்தையில் செயற்படுகின்ற இவ்வாறான நிறுவனத்திற்கு இந்தளவுக்கு சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை மேம்படுத்தல் செலவு பொருந்துமா என்பது கணக்காய்வில் கேள்விக்குரியாக காணப்பட்டது.

(18) சபைக்குச் சொந்தமான வொக்ஷோல் வீதியில் அமைந்துள்ள காணியில் வர்த்தக கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கான நடைபெற்றுவரும் வேலை (Works-in-Progress) என சபையால் 2016 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை மதியுரைச் சேவையினைப் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 27,009,822 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(19) தேசிய லொத்தர் சபையினால் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த கட்டிடத்திற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையின் 08(6) ஆம் பந்தியின் படி தொலைபேசி, நீர், மின்சாரம் ஆகிய கட்டணங்களிற்காக மூன்று மாதத்திற்கான பாதுகாப்பு வைப்புப் பணமாக ரூபா 24,357,375 செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் 08(9) ஆம் பந்தியின் படி இரண்டு ஆண்டுகளின் இறுதியில் இவ்வாறு செலுத்திய ஆரம்ப வைப்புத் தொகையில் ரூபா 63,329,175 எஞ்சியிருக்கும் என்ற எதிர்வுகூறலுடன், சிக்கனமற்ற முறையில் கட்டிடத்தின் உரிமையாளருக்கு ரூபா 24,357,375 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(20) வருடாந்த விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மேம்படுத்தல் திட்டமொன்று இன்றி சபையால் விற்பனை மேம்படுத்தல் மற்றும் பிரச்சார நடவடிக்கைகளிற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 6,354,620 பெறுமதியான பொருட்கள் களஞ்சியத்தில் விளைவற்று வைக்கப்பட்டுள்ளன.

(21) லொத்தர் சீட்டிழுப்புக்களின் போது பரிசுகளாக வழங்குவதற்கு 2015 ஆம் ஆண்டின் இறுதியளவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,787,668 பெறுமதியான தங்கக் காசுகள் மற்றும் தங்க மாலைகள் உள்ளிட்ட 53 தங்கப் பொருட்கள் அந்த தேவைக்குப் பயன்படுத்தப்படாது வங்கி காப்பகத்தில் விளைவற்றதாக வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் தற்போதைய சந்தைப் பெறுமதி ரூபா 3.86 மில்லியன் ஆகும்.

(22) சபையால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி, ஒரு லொத்தர் சீட்டை அமெரிக்க டொலர் 10 இற்கு விற்பனை செய்வதற்காக 2016 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டிருந்த 30,000 டொலர் போர்ச்சூன் லொத்தர் சீட்டுக்களில் 569 சீட்டுக்கள் காணாமல் போயிருந்தன. இந்த காணாமல் போன லொத்தர் சீட்டுக்களின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறுமதி ரூபா 1,594,906 ஆகும். இந்த இழப்பு தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொண்டு அதற்குப் பொறுப்பான நபர்களை இனங்கண்டு ஏற்பட்ட இழப்பை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2016 ஆம் ஆண்டில் இந்த லொத்தர் சீட்டிழுப்பை நடாத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும், 2022 ஏப்ரல் 30 வரையிலும் அதனை நடாத்துவதற்கு லொத்தர் சபை தவறியிருந்தது.

(23) 2021 திசெம்பர் 31 இற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி சபையின் பல்வேறு 03 பிரிவுகளிற்குரிய கூட்டுமொத்தம் ரூபா 3,418,665 பெறுமதியான பொருட்கள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்டிருக்கவில்லை. 11 பிரிவுகளிற்குச் சொந்தமான ரூபா 1,473,327 பெறுமதியான பொருட்கள் சேதமடைந்திருந்தன.

(24) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த 2016/2017 மற்றும் 2017/2018 வரி மதிப்பீட்டு ஆண்டுகளிற்கான வருமான வரி மதிப்பீட்டுப் பெறுமதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,785,860,482 ஆனதுடன் அதற்காக விதிக்கப்பட்ட தண்டப்பணத்தின் பெறுமதி 819,379,995 ஆகும். 2015/2016 மற்றும் 2016/2017 ஆண்டுகளிற்கான பெறுமதிசேர் வரி மதிப்பீட்டுப் பெறுமதிகளின் கூட்டுத்தொகை ரூபா 53,073,024 ஆனதுடன் அதற்காக விதிக்கப்பட்ட தண்டப்பணத்தின் பெறுமதி 39,474,184 ஆகும். 2016 யூன் மாதத்திற்குரிய உழைக்கும் போதே செலுத்தும் வரிக்கான மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 419,483 ஆனதுடன் அதற்காக விதிக்கப்பட்ட தண்டப்பணத்தின் பெறுமதி 255,483 ஆகும். அதற்கமைய, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் விதிக்கப்பட்டிருந்த வரிகள் மற்றும் அவற்றின் மீதான தண்டப்பணத்தின் கூட்டுத்தொகை ரூபா 2,698,462,455 ஆகக் காணப்பட்டது. இந்தத் தொகையில் 2016/2017 வரி மதிப்பீட்டு ஆண்டுக்கான வருமான வரி தொடர்பில் வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவிற்கும் எஞ்சிய தொகைகள் தொடர்பில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கும் மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், 2021 திசெம்பர் 31 வரையிலும் அந்த மேன்முறையீடுகள் தொடர்பில் தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

ஒப்பம்:

**டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# வருமானக் கூற்று

டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கு

| | குறிப்பு | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|---|
| **மொத்தப்புரள்வு** | 03 | 17,292,066,080 | 18,041,145,000 |
| **கழி: மறைமுக வரிகள்** | | | |
| பெ.சே.வரி | | 409,319,517 | 430,383,218 |
| **தேறிய புரள்வு** | | 16,882,746,563 | 17,610,761,782 |
| | | | |
| கழி: விற்பனைக் கிரயம் | 04 | 14,396,877,247 | 14,923,669,223 |
| மொத்த இலாபம் | | 2,485,869,316 | 2,687,092,559 |
| | | | |
| கூட்டு: ஏனைய வருமானம் | 05 | 416,022,651 | 422,918,093 |
| | | 2,901,891,967 | 3,110,010,652 |
| **கழி: செலவுகள்** | | | |
| விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகச் செலவுகள் | 06 | 1,074,102,918 | 893,002,443 |
| நிர்வாகச் செலவுகள் | 07 | 811,945,418 | 772,500,258 |
| நிதிச் செலவுகள் | 08 | 12,488,494 | 9,683,721 |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | | 1,003,355,136 | 1,434,824,231 |
| | | | |
| கழி: வருமான வரிச் செலவு | 09 | 43,005,519 | 351,648,230 |
| **ஆண்டுக்கான இலாபம்** | | 960,349,617 | 1,083,176,000 |

# விரிவான வருமானக் கூற்று

31 டிசம்பரில் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|
| ஆண்டுக்கான இலாபம் | 960,349,617 | 1,083,176,000 |
| | | |
| **உரிய காலப்பகுதியில் இலாபம் அல்லது நட்டமாக மீள்வகுப்பாக்கம்** | | |
| **செய்யப்படாத ஏனைய விரிவான வருமானம் (தேறிய வரி)** | | |
| | | |
| வரையறுத்துரைத்த நலத் திட்டங்கள் மீதான உண்மையான நயம்/(நட்டம்) | 10,340,015 | (7,342,944) |
| உண்மையான நயம்/ (நட்டம்) மீதான பிற்போட்ட வரி | (2,481,604) | 1,762,307 |
| | | |
| வரிக்குப் பின்னர் ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம் | 968,208,028 | 1,077,595,362 |

# நிதி நிலைமைக்கூற்று

டிசம்பர் மாதம் 31ஆம் திகதியில் உள்ளவாறு

| | குறிப்பு | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 10 | 551,667,896 | 576,449,609 |
| கட்டிடம் - முடிவுறா வேலை - தலைமை அலுவலகக் கட்டிடம் | | 27,009,822 | 27,003,862 |
| முதலீட்டு ஆதனம் | 11 | 24,999,802 | 26,186,048 |
| புலப்படாத சொத்துக்கள் | 12 | - | 198,125 |
| ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்துகள் | 13 | 8,879,808 | 8,951,500 |
| பதவியணியினர் கடன் | 14 | 119,605,313 | 116,961,086 |
| **மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | 732,162,640 | 755,750,230 |
| | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| பதிவேட்டுப் பொருட்கள் | 15 | 39,277,504 | 65,402,277 |
| வர்த்தக வருமதிகள் | 16 | 89,936,751 | 120,484,443 |
| பிற நடைமுறைச் சொத்துக்கள் | 17 | 975,592,024 | 694,229,319 |
| குறுகிய கால முதலீடுகள் | 8 | 1,078,350,718 | 681,022,942 |
| காசும் காசுக்குச் சமமானவைகளும் | 19 | 5,735,981,945 | 6,398,582,225 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | 7,919,138,942 | 7,959,721,205 |
| | | | |
| **மொத்த சொத்துக்கள்** | | 8,651,301,582 | 8,715,471,435 |
| | | | |
| **உரிமைத்துவம் மற்றும் பொறுப்புக்கள்** | | | |
| **தாய்க் கம்பனியின் பங்குதாரர்களுக்கு பகிரத்தக்க உரிமைத்துவம்** | | | |
| நிறுத்திவைத்த உழைப்புகள் | 20 | 1,529,921,219 | 2,486,581,712 |
| உரிமைத்துவத்தின் ஏனைய கூறுகள் | 21 | 4,501,320,640 | 3,476,452,117 |
| **மொத்த உரிமைத்துவம்** | | 6,031,241,859 | 5,963,033,829 |
| | | | |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | |
| இளைப்பாறல் நலன் கடப்பாடு | 22 | 66,106,692 | 76,033,198 |
| **மொத்த நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | 66,106,692 | 76,033,198 |
| | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை | 23 | 2,518,627,924 | 2,642,465,627 |
| **செலுத்த வேண்டிய நடைமுறை வரி** | 24 | 35,325,106 | 33,938,782 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்பு** | | 2,553,953,030 | 2,676,404,409 |
| | | | |
| **மொத்த பொறுப்புக்கள்** | | 2,620,059,722 | 2,752,437,606 |
| | | | |
| **மொத்த உரிமைத்துவமும் பொறுப்புகளும்** | | 8,651,301,582 | 8,715,471,435 |

இந்த நிதிநிலை அறிக்கைகள் இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கியல் தரநிலைகள் (LKS மற்றும் SLFRS) மற்றும் 1997 இன் 35 மற்றும் 1998 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க நிதி (திருத்தச்) சட்டம் மற்றும் நிதி (திருத்தம்) 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் எண் சட்டம் மற்றும் நாணயச் சட்டத்தின் திருத்தங்களுக்கு ஏற்ப நிதி (திருத்தம்) சட்டம் எண் 1971 இன் 38 இன் படி.

**கலாநிதி ஹர்ஷ பண்டார**
பிரதம நிதி உத்தியோகத்தர்

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரித்துச் சமர்ப்பிப்பதற்கு பணிப்பாளர் சபைக்கு பொறுப்புள்ளதுடன், பணிப்பாளர் சபையின் சார்பாக ஒப்பமிடப்பட்டுள்ளது.

**லஸித் பியும் பெரேரா**
தலைவர்

**ஆர்.டி.ஏ. பயனாத் ஜயரத்ன**
பணிப்பாளர்

கொழும்பு
25.02.2022

# காசுப்பாய்ச்சல் கூற்று

31 டிசம்பரில் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|
| **செயற்படு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| வரிக்கு முந்திய இலாபம் | 1,003,355,136 | 1,434,824,231 |
| | | |
| சீராக்கம் | | |
| பெறுமானத்தேய்வு | 34,031,253 | 47,027,070 |
| பண மதிப்பிழப்பு | 1,384,372 | 1,896,332 |
| வரையறுத்துரைத்த நலத் திட்டக் கிரயம் | 11,079,502 | 12,393,730 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தை அகற்றல் இலாபம் | (13,697,142) | - |
| பரிசுகள் ஒதுக்கம் | - | 261,676,181 |
| பரிமாற்ற சீராக்கல்கள் இலாபம் | (740,072) | (3,022,112) |
| நிறுத்திவைத்த உழைப்புக்களுக்கான முன்னைய ஆண்டுச் சீராக்கம் | - | (2,175,491) |
| மோசமான கடன்கள் - ஒதுக்கீடுகள் | (4,373,977) | (6,020,101) |
| இதர வருமானம் - கைவிடப்பட்ட மீதி | (33,882,134) | (34,186,211) |
| பழைய நிலுவைகள் சரிசெய்தல் மற்றும் எழுதுதல் | 7,314,579 | - |
| இலங்கை சேமிப்பு வங்கியின் எழுதப்பட்ட முதலீடு | - | 5,336,575 |
| சுற்றுலா விடுதிகள் மூலம் வருமானம் மற்றும் சபையின் வாகனங்களை வாடகைக்கு விட்டதன் வருமானம் | (365,590) | (914,809) |
| வட்டி வருமானம் | (332,969,241) | (353,365,849) |
| தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் | 671,136,686 | 1,363,469,547 |
| | | |
| **செயற்படும் மூலதனத்தின் மாற்றங்கள்** | | |
| இருப்புகளின் (அதிகரிப்பு) குறைவு | 26,124,773 | 730,591 |
| வியாபார வருமதிகளின் (அதிகரிப்பு) குறைவு | 34,921,669 | 135,855,072 |
| ஏனைய நடப்புச் சொத்துக்களின் (அதிகரிப்பு) குறைவு | (38,650,132) | 307,486,059 |
| பெசேவ மற்றும் தேகவ கொடுப்பனவுகள் அதிகரிப்பு (குறைவு) | 1,386,324 | 22,341,821 |
| பரிசுக் கடப்பாடு அதிகரிப்பு (குறைவு) | (82,737,580) | (299,059,550) |
| அரசாங்கத்திற்கான பங்களிப்பு (விசேட வரி) செய்த கொடுப்பனவுகளில் | | |
| அதிகரிப்பு/(குறைவு) | 19,234,041 | 12,248,415 |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகளின் அதிகரிப்பு (குறைவு) | (26,452,030) | 87,619,870 |
| | 604,963,751 | 1,630,691,825 |
| | | |
| செலுத்தப்பட்ட வருமான வரி | (295,378,417) | (777,758,009) |
| செலுத்தப்பட்ட வரையறைத்துரைத்த நலத் திட்டம் | (10,665,993) | (5,546,078) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | 298,919,341 | 847,387,738 |

31 டிசம்பரில் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | **2021** ரூபா | 2020 ரூபா |
|---|---:|---:|
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள், முதலீட்டுச் சொத்து, அருவச் | | |
| சொத்துகள் மற்றும் நடைபெற்றுவரும் வேலை சேர்ப்பனவுகள் | (9,331,720) | (7,543,547) |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அகற்றல் | 13,773,362 | 473,564 |
| குறுகியகால முதலீடுகள் | (389,227,335) | (598,076,430) |
| சுற்றுலா விடுதிகள் மூலம் வருமானம் மற்றும் சபையின் வாகனங்களை | | |
| வாடகைக்கு விட்டதன் வருமானம் | 301,428 | 1,037,690 |
| வழங்கப்பட்ட ஊழியர் கடன்கள் | (40,179,720) | (14,951,175) |
| மீளப்பெறப்பட்ட ஊழியர் கடன்கள் | 37,535,493 | 16,491,185 |
| பெறப்பட்ட வட்டி வருமானம் | 324,868,800 | 344,929,983 |
| **நிதிசார் நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல்** | (62,259,693) | (257,638,730) |
| | | |
| **நிதியீட்டல் நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| SITST நிதியத்தினால் பொதுத் திறைசேரிக்கு மாற்றப்பட்ட விசேட தீர்வை | - | (21,526,641) |
| தக்க வைத்த வருமானத்தை சிறப்பு வரியாக திறைசேரிக்கு மாற்றியமை | (900,000,000) | - |
| CASD/NAL மூலம் பொதுத் திறைசேரிக்கு மாற்றப்பட்ட விசேட தீர்வை | - | (32,735,561) |
| **நிதியீட்டல் நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல்** | (900,000,000) | (54,262,202) |
| | | |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவற்றில் தேறிய அதிகரிப்பு / (குறைவு) | (663,340,352) | 535,486,806 |
| ஆண்டின் தொடக்கத்தில் காசும் காசுக்குச் சமமானவைகளும் (குறிப்பு) | 6,399,322,297 | 5,863,095,419 |
| **ஆண்டு முடிவில் காசும் காசுக்குச் சமமானவைகளும்** | 5,735,981,945 | 6,398,582,225 |
| | | |
| **காசுப்பாய்ச்சல் கூற்றுக்கான குறிப்பு** | | |
| **காசும் காசுக்குச் சமமானவைகளும்** | | |
| குறுங்கால முதலீடுகள் | 5,346,312,522 | 5,970,398,189 |
| கையிலிருக்கும் காசும் வங்கி மீதியும் | 389,669,422 | 428,184,036 |
| ஆண்டு முடிவில் தேறிய காசும் காசுக்குச் சமமானவைகளும் | 5,735,981,945 | 6,398,582,225 |
| | | |
| குறிப்பு: ஆண்டின் தொடக்கத்தில் உள்ளவாறு காசும் காசுக்கு சமமானவைகளும் | 6,398,582,225 | 5,860,049,121 |
| கூட்டுக: நாணயப்பரிமாற்ற ஆதாயங்கள் | 740,072 | 3,022,112 |
| கழிக்க: ஆண்டில் பரிமாற்ற ஆதாயங்கள் / (நட்டங்கள்) சீராக்கம் | - | 24,186 |
| ஆண்டின் தொடக்கத்தில் உள்ளவாறு காசும் காசுக்கு சமமானவைகளும் | 6,399,322,297 | 5,863,095,419 |

# உரிமைத்துவ மாற்றங்களின் கூற்று

31 டிசம்பரில் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | திரட்டிய திறைசேரி நிதியம் ரூ. | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ரூ. | கட்டட ஒதுக்கம் ரூ. | பரிசுகள் ஒதுக்கம் ரூ. | வருமான ஒதுக்கம் ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|---|
| **01.01.2020 இல் மீதி** | 21,263,101 | 321,118,964 | 730,000,000 | 2,151,343,872 | 1,456,474,040 | 4,680,199,978 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனை மீதான மறுமதிப்பீட்டு ஆதாயங்களுக்கான சரிசெய்தல் | - | (8,950,000) | - | - | 8,950,000 | - |
| பரிசுகளின் ஒதுக்கத்தில் தேறிய மாற்றம் | - | - | - | 261,676,181 | - | 261,676,181 |
| SITST நிதியத்தினால் திறைசேரிக்கு மாற்றப்பட்ட (விசேட தீர்வை) | - | - | - | - | (21,526,641) | (21,526,641) |
| CASD/NAL NAL மூலம் திறைசேரிக்கு மாற்றப்பட்ட விசேட தீர்வை. | - | - | - | - | (32,735,561) | (32,735,561) |
| 2019 ஆம் ஆண்டிற்கான சரிசெய்தல் | - | - | - | - | (2,175,491) | (2,175,491) |
| வரையறுத்துரைத்த நலத் திட்டங்கள் மீதான நட்டம் | - | - | - | - | (7,342,944) | (7,342,944) |
| வரையறுக்கப்பட்ட நன்மை திட்டங்களில் ஏற்படும் மூலதன இழப்புகளுக்குக் காரணமான ஒத்திவைக்கப்பட்ட வரிகள் | - | - | - | - | 1,762,307 | 1,762,307 |
| ஆண்டிற்கான இலாபம் | - | - | - | - | 1,083,176,001 | 1,083,176,001 |
| **2020.12.31 இல் மீதி** | 21,263,101 | 312,168,964 | 730,000,000 | 2,413,020,053 | 2,486,581,712 | 5,963,033,829 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனை மீதான. மறுமதிப்பீட்டு ஆதாயங்களுக்கான சரிசெய்தல் | - | (13,907,498) | - | - | 13,907,498 | - |
| பரிசுகளின் ஒதுக்கத்தில் தேறிய மாற்றம் | - | - | - | (1,295,290) | 1,295,290 | - |
| திறைசேரிக்கு மாற்றப்பட்ட விசேட தீர்வை | - | - | - | - | (900,000,000) | (900,000,000) |
| இலாபத்தை கட்டிட இருப்புக்கு மாற்றுதல் | - | - | 1,000,000,000 | - | (1,000,000,000) | - |
| நிலையான வைப்புத்தொகை வட்டியை கட்டிட இருப்புக்கு மாற்றுதல் | - | - | 40,071,311 | - | (40,071,311) | - |
| வரையறுக்கப்பட்ட நன்மை திட்டத்தில் வாழ்நாள் நன்மைகள் | - | - | - | - | 10,340,015 | 10,340,015 |
| மீண்டும் கணக்கிடப்பட்ட நன்மை திட்ட ஒதுக்கீடுகள் தொடர்பான ஒத்திவைக்கப்பட்ட வரிகள் | - | - | - | - | (2,481,604) | (2,481,604) |
| ஆண்டிற்கான இலாபம் | - | - | - | - | 960,349,617 | 960,349,617 |
| **2021.12.31 இல் மீதி** | 21,263,101 | 298,261,466 | 1,770,071,311 | 2,411,724,763 | 1,529,921,219 | 6,031,241,857 |

# நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

**குறிப்பு 01**

**1. கூட்டாண்மைத் தகவல்கள்**

**1.1 அறிக்கையிடல் நிறுவனம்**

தேசிய லொத்தர் சபை, 1963 இன் 11 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் கீழ் வைத்தியசாலைகள் லொத்தர் சீட்டிழுப்பை ஒழித்த பின்னர் தாபிக்கப்பட்டது. மேலே சொல்லப்பட்ட சட்டத்தின் சில பிரிவுகள் நீக்கப்பட்டு 1997 இன் 35 ஆம் இலக்க நிதி (திருத்தச்) சட்டம் மற்றும் 1998 இன் 22 ஆம் இலக்க நிதி (திருத்தச்) சட்டம் ஆகியவற்றின் கீழ் திருத்தப்பட்டது.

இது நிதி, திட்டமிடல் அமைச்சின் கண்காணிப்பின் கீழ் வருகின்ற அரை அரசு சார் (Semi-governmental) நிறுவனமாகும். சபையின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமும் பிரதான வணிக நிலையமும் இல 32, தேசமான்ய என்.டபிள்யூ.ஜே. முதலிகே மாவத்தை, கொழும்பு 01 இல் அமைந்துள்ளது.

**1.2 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்**

தேசிய லொத்தர் சபையைத் தாபிப்பதற்கான காரணம் அரசாங்கத்துக்கு நிதி திரட்டுவதற்காக தேசிய லொத்தர் சீட்டிழுப்பை நடத்துவதாகும்.

**1.3 நிதியியல் காலப்பகுதி**

சபையின் நிதியியல் காலப்பகுதி 2021 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து 2021 டிசம்பர் 31ஆம் திகதி வரையான பன்னிரண்டு மாத காலப்பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது

**1.4 நிதிக்கூற்றுகளுக்கான பொறுப்பு**

பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட புதிய இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRS/ LKAS) இணங்க சபையின் நிதிக்கூற்றுகளைத் தயாரித்து சமர்ப்பிப்பது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.

இந்த நிதிக்கூற்றுகள் பின்வரும் கூறுகளை உள்ளடக்குகின்றன:

- மீளாய்வுக்குட்பட்ட ஆண்டுக்கான நிதிச் செயலாற்றல் பற்றிய தகவலை வழங்கும் விரிவான வருமானக்கூற்று.
- ஆண்டின் இறுதியில் உள்ளவாறு சபையின் நிதி நிலைமை பற்றிய தகவலை வழங்கும் நிதி நிலைமைக் கூற்று.
- மீளாய்வுக்குட்பட்ட ஆண்டு காலப்பகுதியில் சபையின் நிதிகளில் ஏற்பட்ட எல்லா மாற்றங்களையும் காட்டும் உரிமைத்துவ மாற்றல்கள் கூற்று.
- காசையும் காசுக்குச் சமமானவற்றையும் திரட்டுவதற்கான சபையின் இயலுமை மற்றும் காசுப்பாய்ச்சலைப் பயன்படுத்துவதற்கான தேவை ஆகியவற்றைப் பற்றி பயன்படுத்துனர்களுக்கு தகவல்களை வழங்கும் காசுப்பாய்ச்சல் கூற்று.
- கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்.

.

குறிப்பு 02

## 2. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

### 2.1 பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

#### 2.1.1 தயார்படுத்தலுக்கான அடிப்படை

இலங்கை ரூபாக்களில் சமர்ப்பிக்கப்படும் இந்த நிதிக்கூற்றுகள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRS & LKAS) இணங்கவும் பிரயோகிக்கத்தக்கவிடத்து வரலாற்றுக் கிரய அடிப்படையின் கீழும் அட்டுறு அடிப்படையிலும் நியாயப் பெறுமதி அடிப்படையிலும் தயாரிக்கப்பட்டுள்ளன. 2021 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டு 2021 மார்ச் மாதம் 19 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

#### 2.1.2 இசைவுக் கூற்று

2021 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறான மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானதுமான சபையின் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகளுடன் ("நிதிக் கூற்றுக்கள்") இணைந்த நிதி நிலைமை கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமைத்துவ மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவை இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (LKAS & SLFRS), 1963 இன் 11 ஆம் இலக்க நிதிச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டம் ஆகியவற்றிலுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

#### 2.1.3 தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு

தொடர்ந்து இயங்கும் அமைப்பாக மேலும் செயலாற்றுவதற்கான சபையின் இயலுமை பற்றி பணிப்பாளர்கள் மதிப்பீடொன்றை மேற்கொண்டதுடன் வியாபாரத்தைக் கலைப்பதற்கான அல்லது நிறுத்துவதற்கான நோக்கம் அவர்களிடம் இல்லை. எதிர்பார்க்கக்கூடிய எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் வணிகத்தைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கான வளங்கள் தம்மிடம் இருப்பதாக முகாமைத்துவம் திருப்தியடைகின்றது. மேலும், தொடர்ந்து இயங்கும் அமைப்பாக செயலாற்றுவதற்கான சபையின் இயலுமையில் கணிசமான அளவில் சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய ஏதேனும் சாதன ரீதியாக நிச்சயமற்ற தன்மை பற்றி முகாமைத்துவத்திற்குத் தெரியாது. எனவே நிதிக்கூற்றுகள் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன.

#### 2.1.4 ஒப்பீட்டுத் தகவல்கள்

கணக்கீட்டுக் கொள்கைகள் சபையினால் தொடர்ந்தும் பிரயோகிக்கப்பட்டு வருவதுடன் அவை முன்னைய ஆண்டுக்கான கொள்கைகளுடன் ஏற்புடையனவும் ஆகும். நடப்பு ஆண்டுக்கான சமர்ப்பிப்புடன் இசைவுறும் நோக்குடன் அவசியமானவிடத்து முன்னைய ஆண்டின் தொகைகளும் வாசகங்களும் மீள் ஒழுங்கமைத்து மீண்டும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. நிதிக்கூற்றுகளைச் சமர்ப்பித்தல் LKAS – 01 என்னும் விடயத்துக்கு அமைவாக கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டுக்கான கொள்கைகளுடன் இடையறாது பிரயோகிக்கப்பட்டுள்ளன.

#### 2.1.5 வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்

எல்லா வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களும் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்படும் நேரத்தில் நிலவும் செலாவணி வீதத்தில் (ஐந்தொகைத் திகதியில் நிலவும் வீதத்தில்) அறிக்கையிடும் நாணயமாகிய இலங்கை ரூபாக்களுக்கு மாற்றப்படுகின்றன. ஆண்டிறுதி செலாவணி வீதத்தில் அத்தகைய கொடுக்கல் வாங்கலைத் தீர்ப்பதன் விளைவாகவும் பணம் சார் உருப்படிகளின் மீள் அளவீட்டிலிருந்தும் ஏற்படும் வெளிநாட்டுச் செலாவணி ஆதாயங்களும் நட்டங்களும் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்படும் நிதிசார் சொத்துகளும் பொறுப்புகளும் ஆண்டிறுதி ஐந்தொகைத் திகதியில் உள்ள வெளிநாட்டுச் செலாவணி வீதத்தைப் பயன்படுத்தி சமமான இலங்கை ரூபாவுக்கு மாற்றப்படுவதுடன் அதன் விளைவான ஆதாயங்களும் நட்டங்களும் விரிவான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

### 2.1.6 அளவீட்டின் அடிப்படை

நிதிக் கூற்றுக்களிலுள்ள பின்வரும் பொருண்மையான உருப்படிகள் நீங்கலாக, நிதிக்கூற்றுகள் வரலாற்றுக் கிரய எண்ணக்கருவுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

- நியாயப் பெறுமதியிலுள்ள நிதிக் கருவிகள் நியாயப் பெறுமதியின் கீழ் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக அளவிடப்படுகின்றன.
- வரையறுத்துரைத்த நலக் கடப்பாட்டுக்கான பொறுப்புகள் வரையறுத்துரைத்த நலக் கடப்பாட்டின் தற்போதையப் பெறுமதியுடன் ஏற்பிசைவு செய்யப்படாத ஆயுட்கணிப்பு ஆதாயங்களைக் கூட்டி அதிலிருந்து எற்பிசைவு செய்யப்படாத கடந்த கால சேவைக் கிரயத்தையும் ஏற்பிசைவு செய்யப்படாத ஆயுட்கணிப்பு நட்டங்களையும் கழித்து ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.
- விற்பனைக்காகக் கிடைக்கப்பெறும் நிதிச் சொத்துகள் நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

நிதிக் கூற்றுக்களை பாதிக்கும் பணவீக்கக் காரணிகளுக்கான எவ்வித சீராக்கல்களும் மேற்கொள்ளப்படுவதில்லை.

### 2.1.7 அறிக்கையிடல் மற்றும் சமர்ப்பித்தல் நாணயம்

இந்த நிதிக்கூற்றுகள் சபையின் தொழிற்பாட்டு நாணயமாகிய இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்படுகின்றன. ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்ட எல்லா நிதித் தகவல்களும் வேறுவிதமாகக் கூறப்பட்டாலன்றி, அண்ணளவான ரூபாக்களில் தரப்பட்டுள்ளன

### 2.1.8 பொருண்மையும் சேர்க்கையும்

ஒத்த உருப்படிகளின் ஒவ்வொரு சாதன வகுப்பும் நிதிக் கூற்றுகளில் சேர்க்கையாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஒத்த தன்மையை அல்லது தொழிற்பாட்டைக் கொண்டிராத உருப்படிகள் "நிதிக்கூற்றுகளைச் சமர்ப்பித்தல்" பற்றிய இலங்கைக் கணக்கீட்டு நியமம் – LKAS 1 இல் அனுமதிக்கப்பட்டவாறு அவை புறக்கணிக்கத்தக்கவை அல்லாதவிடத்து, தனித்தனியாகச் சமர்ப்பிக்கப்படுகின்றன.

ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகைகளை ஈடு செய்வதற்கு சட்டப்படி அமுல்படுத்தக்கூடிய உரிமையும் தேறிய அடிப்படையில் தீர்ப்பதற்கான அல்லது சமகாலத்தில் சொத்துகளை ஏற்பிசைவு செய்து பொறுப்புகளைத் தீர்ப்பதற்கான நோக்கமும் இருந்தால் மட்டுமே நிதிச்சொத்துகளும் நிதிப்பொறுப்புகளும் ஈடுசெய்யப்படுவதுடன் நிதி நிலைமை பற்றிய கூற்றில் தேறிய தொகை அறிக்கை செய்யப்படுகின்றது. ஏதேனும் கணக்கீட்டு நியமத்தினால் அல்லது பொருட்கோடலினால் தேவைப்படுத்தப்பட்டால் அல்லது அனுமதிக்கப்பட்டாலன்றி, அத்துடன் கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டவாறு வருமானம் மற்றும் செலவுகள் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுவதில்லை.

### 2.1.9 முக்கியமான கணக்கீட்டுத் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள்

**அ) தீர்ப்புகள்**

கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிக்கும் செயற்பாட்டில், நிதிக்கூற்றுகளில் ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகைகள் மீது மிக முக்கியமான தாக்கத்தைக் கொண்டுள்ள மதிப்பீடுகள் தொடர்பானவை நீங்கலாக, முகாமைத்துவம் பின்வரும் தீர்மானங்களை மேற்கொண்டது.

**ஆ) மதிப்பீடுகளும் எடுகோள்களும்**

அறிக்கையிடும் திகதியில் அறிக்கை செய்யப்பட்ட வருமானம், செலவினங்கள், சொத்துகள் மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றையும் நிகழ்தகு பொறுப்புகளையும் பாதிக்கின்ற தீர்ப்புகளையும், மதிப்பீடுகளையும் எடுகோள்களையும் மேற்கொள்வதற்கு கம்பனிகளின் நிதிக்கூற்றுகளைத் தயாரித்தல் முகாமைத்துவத்தை தேவைப்படுத்துகின்றது. அடுத்த நிதியாண்டில் கொண்டு செல்லப்படும் சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் அளவில் சாதன திருத்தங்களை ஏற்படுத்தும் கணிசமான இடர்களைக்கொண்ட எதிர்காலம் தொடர்பான பிரதான எடுகோள்கள் மற்றும் நிதி நிலைமைத் திகதியில் நிச்சயமற்ற தன்மையை மதிப்பிடும் பிரதான மூலங்கள் பரிசீலிக்கப்பட்டுள்ளன.

## 2.2 சொத்துக்கள்

**சொத்துகள் மற்றும் அவற்றின் மதிப்பீட்டின் அடிப்படை**

வேறுவிதமாகக் குறிப்பிடப்பட்டாலன்றி, கீழே காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் இந்த திரட்டிய நிதிக்கூற்றுகளில் சமர்ப்பிக்கப்பட்ட எல்லாக் காலப்பகுதியிலும் இடையறாது பிரயோகிக்கப்பட்டுள்ளன.

### 2.2.1. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

**ஏற்பிசைவுக்கான அடிப்படை**

சொத்துடன் தொடர்பான எதிர்கால பொருளாதாரப் பயன்கள் சபைக்குப் பாயும் என்பதும் சொத்தின் கிரயம் நம்பத்தகுந்தவாறு அளவிட முடியும் என்பது சாத்தியமாயின், ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஆகியவை ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

**அளவீட்டின் அடிப்படை**

**அ) கிரயம்**

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஆகியவை திரட்டிய தேய்மானம் மற்றும் ஏதேனும் திரண்ட சேத இழப்பு நட்டம் ஆகியவற்றைக் கழித்த கிரயத்தில் கூறப்பட்டுள்ளன. சொத்துகளின் கொள்வனவுடன் நேரடியாகத் தொடர்புபட்ட செலவினத்தை கிரயம் உள்ளடக்குகின்றது. சுயமாக நிர்மாணிக்கப்பட்ட சொத்துகளின் கிரயம் சாதனங்களின் கிரயம் மற்றும் நேரடி ஊழியம், சொத்துகளை கருதப்பட்ட பயன்பாட்டின் செயற்படுநிலைக்குக் கொண்டுவருவதுடன் நேரடியாகத் தொடர்புபட்ட ஏதேனும் வேறு கிரயங்கள், உருப்படிகளை அழித்து அகற்றுவதற்கான மற்றும் அவை அமையப்பெற்றுள்ள இடத்தை பழைய நிலைமைக்குக் கொண்டுவருவதற்கான கிரயங்கள் ஏற்பிசைவுக்கான தகவுதிறன்கள் ஈடுசெய்யப்பட்டிருப்பின், நீண்ட கால நிர்மாணக் கருத்திட்டங்களுக்கான மூலதனமாக்கப்பட்ட கடன் கிரயங்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் முக்கியமான பகுதிகளை காலத்துக்குக் காலம் பதிலீடு செய்ய வேண்டிய தேவை ஏற்படும்போது, சபை பதிலீடு செய்யப்பட்ட பாகம் ஏற்றுக்கொள்ளப்படுதலை நீக்கி புதிய பாகத்தை அதன் சொந்தப் பயனுள்ள ஆயுட்காலத்துடனும் தேய்மானத்துடனும் ஏற்றுக்கொள்கின்றது. அதேபோன்று பெரும் கண்காணிப்பொன்று நடத்தப்படும்போது, ஏற்பிசைவு செய்யப்படும் தகவுதிறன்கள் திருப்திசெய்யப்படுமாயின், அதன் கிரயம் ஒரு பதிலீடாகப் பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் கொண்டுசெல்லப்படும் தொகையில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. ஏனைய எல்லா திருத்த மற்றும் பராமரிப்புக் கிரயங்களும் விபரமான வருமானக்கூற்றில் உறப்பட்டவையாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. ஒரு சொத்தைப் பயன்படுத்தியதன் பின்னர் அதனை அகற்றுவதற்கான எதிர்பார்க்கப்பட்ட தற்போதையப் பெறுமதி ஏற்பாட்டுக்கான மூலப்பிரமாணங்கள் திருப்திசெய்யப்படுமாயின், சம்பந்தப்பட்ட சொத்தின் கிரயத்தில் உள்ளடக்கப்படுகின்றது.

**ஆ) மீள்மதிப்பீடு**

சொத்துகள் மீதான திரண்ட தேய்மானம் மற்றும் மீள்மதிப்பீட்டுத் திகதிக்குப் பின்னர் ஏற்பிசைவு செய்யப்பட்ட சேத இழப்பு நட்டங்கள் ஆகியவற்றைக் கழித்து நடுநிலை மதிப்பீட்டில் அளவிடப்படுகின்றன. மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்தின் நடுநிலை மதிப்பீடு அதன் கொண்டு செல்லும் தொகையிலிருந்து வேறுபடாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்காக மதிப்பீடுகள் போதிய கால இடைவேளையில் மேற்கொள்ளப்படுகின்றன.

ஏதேனும் மீள் மதிப்பீட்டு மிகை, ஏனைய விரிவான வருமானத்தில் அதிகரிப்பு ஏற்பிசைவு செய்யப்படும் ஏனைய விரிவான வருமானத்தில் முன்னரே ஏற்பிசைவு செய்யப்பட்ட, அதே சொத்தின் மீள்மதிப்பீட்டுக் குறைவு மறுதலையாக இருக்கும் நிலைக்கு வருமளவுக்கு அல்லாது ஏனைய விரிவான வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்டு சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தின் திரண்ட உரிமைப்பங்கில் திரட்டப்படுகின்றது.

ஒரு மீள்மதிப்பீட்டுப் பற்றாக்குறை சொத்துகள் மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட அதே சொத்துகளில் தற்போதுள்ள மிகையை ஈடுசெய்யும் நிலை நீங்கலாக, ஏனைய விரிவான வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

சொத்துகளின் மூல கிரயத்தின் அடிப்படையில், மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துகளின் கொண்டு செல்லும் தொகைக்கும் தேய்மானத்துக்கும் இடையிலான வேறுபாட்டுக்கு சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திலிருந்து தற்போது வைத்திருக்கும் வருவாய்க்கு வருடாந்த மாற்றல் ஒன்று மேற்கொள்ளப்படுகின்றது. மேலதிகமாக, மீள்மதிப்பீட்டுத் திகதியில் உள்ளவாறு திரண்ட தேய்மானம் சொத்தின் மொத்த கொண்டு செல்லும் தொகைக்கு எதிராக நீக்கப்படுவதுடன் தேறிய தொகை சொத்தின் மீள்மதிப்பிடப்பட்ட தொகையில் மீள்கூறப்படுகின்றது. விற்பனையின் மீதமைவாக, விற்பனை செய்யப்படும் குறிப்பிட்ட சொத்து தொடர்பான ஏதேனும் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் வைத்திருக்கும் வருவாய்களுக்கு மாற்றப்படுகின்றது.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் எல்லா உருப்படிகளும் முதலில் கிரயத்தில் பதிவு செய்யப்படுகின்றன. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் எல்லா உருப்படிகளும் மீள்மதிப்பீடு செய்யப்படுமிடத்து, சாத்தியமானபோதெல்லாம் அத்தகைய சொத்துகளின் முழு வகுப்பும் மீள்மதிப்பீடு செய்யப்படுகின்றது.

தேசிய லொத்தர் சபையின் (NLB) மோட்டார் வாகனங்கள், கணனிகள் மற்றும் துணைப்பொருட்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் பொருத்திகள் அரசாங்க விலைமதிப்புத் திணைக்கள அரசாங்க விலைமதிப்பாளரினால் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டின் அடிப்படையில் நடுநிலைப் பெறுமதியில் கொண்டு செல்லப்படுகின்றது. 2015 ஆம் ஆண்டு விலைமதிப்பு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அடுத்த மீள்மதிப்பீடு 2021 இல் மேற்கொள்ளப்படும;.

**இ) பெறுமானத்தேய்வு**

பெறுமானத்தேய்வு ஒரு சொத்தின் ஈற்றுப் பெறுமதி கழித்த கிரயத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். தனிப்பட்ட சொத்துகளின் முக்கியமான கூறுகள் மதிப்பீடு செய்யப்பட்டு, அந்தச் சொத்தின் எஞ்சிய சொத்தை விட ஒரு கூறு பயன்மிக்க வேறுபட்ட ஆயுட்காலத்தைக் கொண்டிருப்பின், அந்தக்கூறின் தேய்மானம் பிறிதாக மதிப்பிடப்படுகின்றது.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் உத்தேச பயன்மிக்க ஆயுட்காலத்தின் அத்தகைய தொகையை பதிவழிப்பதற்காக தேய்மானத்துக்கான ஏற்பாடு இறையிலி காணி நீங்கலாக எல்லா ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் கிரயம் அல்லது மதிப்பீடு நேர்கோட்டு முறைமையைப் பயன்படுத்தி கணிக்கப்படுகின்றது.

குத்தகைக் காலத்தின் இறுதியில் சபைக்கு சொத்து சொந்தமாவது நியாயமான அளவில் நிச்சயமாக இல்லாதவிடத்து, நிதிக்குத்தகையின் கீழ் வைத்திருக்கும் சொத்துகளுக்கு குத்தகைக் காலத்தின் குறுகிய காலப்பகுதி மற்றும் அவற்றின் பயன்மிக்க ஆயுட்காலம் ஆகியவற்றுக்கு தேய்மானம் கணிக்கப்படுகின்றது.

ஒரு சொத்து பயன்பாட்டுக்குக் கிடைக்கக்கூடியதாக இருந்து அந்தச் சொத்து விற்பனைக்காக வைத்திருப்பதாக வகைப்படுத்தப்படும் திகதி மற்றும் அந்தச் சொத்து ஏற்பிசைவு செய்யப்படாது நீக்கப்படும் திகதி ஆகியவற்றில் முந்திய திகதியில் அதன் தேய்மானம் ஆரம்பிக்கின்றது. சொத்துகளின் ஈற்றுப் பெறுமதிகள், பயன்மிக்க ஆயுட்காலம் மற்றும் தேய்மான முறைமை ஆகியவை ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு, அவசியமெனின் மாத்திரம் சீராக்கம் செய்யப்படுகின்றது.

இந்நோக்கத்துக்குப் பயன்படுத்தப்படும் முன்னைய ஆண்டுகளுக்கு இணக்கமான பிரதானமான வருடாந்த வீதங்கள் பின்வருமாறு;

| | ஆண்டொன்றுக்கான % |
|---|---|
| இறையிலி கட்டிடங்கள் | 05 |
| சீட்டிழுப்புப் பீப்பாய், லொத்தர் உகரணம் | 20 |
| மோட்டார் வாகனங்கள் | 25 |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 10 |
| கணனிகள் | 25 |
| வளிச்சீராக்கிகள், பொதுவான மற்றும் அலுவலக உபகரணங்கள் | 20 |
| மேம்படுத்தல் உபகரணம் | 33.33 |

**ஈ) பின்தொடரும் கிரயம்**

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகிய ஓர் உருப்படியின் பாகத்தை பதிலீடு செய்வதற்கான கிரயம், அந்தப் பாகத்துடன் தொடர்பான எதிர்கால பொருளாதாரப் பயன்கள் சபைக்குப் பாய்வதற்கான சாத்தியம் காணப்படுவதுடன் அதன் கிரயம் நம்பத்தகுந்தவாறு அளவிட முடியுமாயின், அந்த உருப்படியின் கொண்டுசெல்லும் தொகையில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. பதிலீடு செய்யப்பட்ட அந்தப் பாகங்களின் கொண்டு செல்லும் தொகை கீழே தரப்பட்டுள்ள ஏற்பிசைவிலிருந்து நீக்கம் செய்யும் கொள்கைக்கு இணங்க பதிலீடு செய்யப்பட்ட அந்தப் பாகங்களின் கொண்டு செல்லும் தொகை ஏற்பிசைவிலிருந்து நீக்கப்படுகிறது. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் நாளாந்த பழுதுகளைச் செப்பனிடுவதற்கான கிரயங்கள் உறப்பட்டவாறாக விரிவான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது

**உ) ஏற்பிசைவிலிருந்து நீக்குதல்**

ஏதேனும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண உருப்படி மற்றும் ஆரம்பத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட ஏதேனும் முக்கியமான பாகம் அதன் விற்பனையின் மீதமைவாக அல்லது அதன் பயன்பாட்டிலிருந்து அல்லது விற்பனையிலிருந்து எவ்வித எதிர்கால பொருளாதாரப் பயன்கள் எதிர்பார்க்கப்படாதபோது, ஏற்பிசைவிலிருந்து நீக்கப்படுகின்றது. சொத்து ஏற்பிசைவிலிருந்து நீக்கப்படுவதிலிருந்து எழும் ஏதேனும் ஆதாயம் அல்லது நட்டம், தேறிய விற்பனை வருமானத்துக்கும் சொத்தின் கொண்டு செல்லும் தொகைக்கும் இடையிலான வேறுபாடாகக் கணிக்கப்படுகின்றது. அந்த சொத்து ஏற்பிசைவிலிருந்து நீக்கப்படும்போது, விரிவான வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது.

சொத்துகளின் ஈற்றுப் பெறுமதிகள், பயன்மிக்க ஆயுட்காலம் மற்றும் தேய்மான முறைமை ஆகியவை சாத்தியமாயின், தீர்மானம் மேற்கொள்வதற்காக நிதிக்கூற்றில் வழங்கப்பட்ட தகவல்களின் இயைபு மற்றும் நம்பகத் தன்மையை அதிகரிப்பதற்காக ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் நிதிக்கூற்றில் சீராக்கம் செய்யப்படுகின்றது

**ஊ) மீள்நிலைப்படுத்தல் கிரயங்கள்**

ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட செயலாற்றத்தின் நியமத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதாரப் பயன்களை மீள்நிலைப்படுத்துவதற்காக அல்லது பேணுவதற்காக ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் திருத்தங்கள் அல்லது பேணுகைக்காக உறப்பட்ட செலவினம் உறப்படுகின்றபோது செலவாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**2.2.2 முடிவுறா மூலதன வேலை**

முடிவுறா மூலதன வேலை சொத்தின் முதலாவது பயன்பாட்டு நேரத்திலிருந்து சம்பந்தப்பட்ட சொத்துக் கணக்கிற்கு மாற்றப்படுகின்றது. முடிவுறா வேலையின் கிரயம் அது தொடர்பான வேறு ஏதேனும் செலவினங்களுடன் கொள்வனவு மற்றும் நிர்மாணக் கிரயமாகும்.

முடிவுறா மூலதன வேலையில் உறப்பட்ட செலவினம் மூலதனச் செலவினமாகக் கொள்ளப்பட்டுள்ளது.

முடிவுறா மூலதன வேலை, முதலாவது பயன்பாட்டு நேரத்தில் அல்லது அந்தச் சொத்து செயற்படுத்தப்பட்ட நேரத்தில் சம்பந்தப்பட்ட சொத்துக் கணக்கிற்கு மாற்றப்படுகின்றது.

## 2.2.3 அருவச் சொத்துகள்

**கணனி மென்பொருள்**
தனியாகக் கொள்வனவு செய்யப்பட்ட அருவச் சொத்துகள் ஆரம்ப ஏற்பிசைவுக் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. ஆரம்ப ஏற்பிசைவைத் தொடர்ந்து, அருவச் சொத்துகள் திரண்ட காலத்தேய்மானம் மற்றும் திரண்ட சேத இழப்பு நட்டம் ஆகியவற்றைக் கழித்த கிரயத்தில் கொண்டுசெல்லப்படுகின்றது. அருவச் சொத்து என்பது வாடகை அல்லது நிர்வாக நோக்கத்துக்காக பொருள்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தி மற்றும் வழங்கலில் பயன்படுத்துவதற்காக வைத்திருக்கும் பௌதிக உருவமற்ற இனங்காண்தகு நாணயச் சார்பில்லாத சொத்தாகும்.

அருவச் சொத்துகளின் பயன்பாட்டு ஆயுட்காலம் வரையறைக்குட்பட்டவையாகவோ வரையறையற்றனவையாகவோ மதிப்பிடப்படுகின்றன.

வரையறைக்குட்பட்ட ஆயுட்காலத்தைக் கொண்ட அருவச் சொத்துகள், சேதத்துக்குள்ளாகலாம் என்பதற்கான அடையாளம் தென்படும் போதெல்லாம் அவற்றின் பயனுள்ள பொருளாதார ஆயுட்காலத்தில் காலத்தேய்மானப்படுத்தப்பட்டு சேதத்திற்காக மதிப்பிடப்படுகின்றது. வரையறைக்குட்பட்ட பயன்பாட்டு ஆயுட்காலத்தைக் கொண்ட அருவச் சொத்துக்கான காலத்தேய்மானக் காலப்பகுதி மற்றும் காலத்தேய்மான முறைமை ஆகியன ஆகக்குறைந்தது ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றது. அருவச் சொத்துக்கள் வருடத்துக்கு 25% வீதத்தில் மெதுவாக நிலைமாற்றமடைகின்றன. சொத்துடன் தொடர்பான எதிர்கால பொருளாதாரப் பயன்களின் எதிர்பார்க்கப்பட்ட பயன்மிக்க ஆயுட்காலத்தில் அல்லது எதிர்பார்க்கப்பட்ட நுகர்வுப் பாங்கில் ஏற்படும் மாற்றங்கள் பொருத்தமானவாறு காலத்தேய்மானக் காலப்பகுதியை அல்லது முறைமையை மாற்றுவதன் மூலம் கணக்கில் கொள்ளப்படுவதுடன் கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்களாகக் கொள்ளப்படுகின்றன. வரையறைக்குட்பட்ட ஆயுட்காலத்தைக் கொண்ட அருவச் சொத்துகளின் காலத்தேய்மானச் செலவு அருவச் சொத்துகளின் செயற்பாட்டுக்கு அமைவாக செலவின வகுதியில் வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

சொத்துகளுடன் தொடர்பான எதிர்கால பொருளாதாரப் பயன்கள் தொழில் முயற்சிக்குப் பாயும் என்பது சாத்தியமாயின், அத்துடன் LKAS 38 – “அருவச் சொத்துகளுக்கு” இணங்க சொத்துகளின் கிரயம் நம்பத்தகுந்தவாறு அளவிடக்கூடியதாயின் ஓர் அருவச் சொத்து ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

அருவச் சொத்தொன்றின் ஏற்பிசைவு நீக்கத்திலிருந்து எழும் ஆதாயங்கள் அல்லது நட்டங்கள் சொத்தின் தேறிய விற்பனை வருமானங்களுக்கும் கொண்டுசெல்லப்படும் தொகைக்கும் இடையிலான வேறுபாடாக அளவிடப்படுவதுடன் அந்தச் சொத்து ஏற்பிசைவிலிருந்து நீக்கப்படும்போது விரிவான வருமானக் கூற்றிலிருந்தும் ஏற்பிசைவிலிருந்து நீக்கம் செய்யப்படுகின்றது

## 2.2.4 குத்தகைச் சொத்துகள்

**குத்தகைகள்**
நிதிக்குத்தகை மூலம் பெறப்பட்ட சொத்துகள் திரண்ட தேய்மானம் மற்றும் திரண்ட சேத இழப்பு நட்டங்கள் கழித்து ஆரம்பத்தில் அவற்றின் நடுநிலைப் பெறுமதிக்கு அல்லது ஆகக்குறைந்த குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதையப் பெறுமதி ஆகியவற்றில் குறைவானதற்குச் சமமான தொகையில் அளவிடப்படுகின்றது.

குத்தகைக்குக் கொடுப்பவருக்கு செலுத்த வேண்டிய பொருத்தமான பிரதானமான தொகை பொறுப்பாகக் காட்டப்படுகின்றது. எதிர்காலத்துக்காக ஒதுக்கப்படும் நிதிச் செலவுகள் குறிப்புகளில் வேறாக வெளிப்படுத்தப்படுகின்றன.

ஒவ்வொரு நிதியாண்டுக்கும் பிரயோகிக்கத்தக்க வாடகைக் கடப்பாட்டின் வட்டிக்கூறு ஒவ்வொரு ஆண்டுக்குமான பொறுப்பின் எஞ்சியுள்ள மீதிக்கான, காலத்துக்குக் காலம் தொடர்ச்சியான வட்டி வீதத்தை வழங்கக்கூடியவாறு குத்தகைக் காலத்தில் விரிவான வருமானக் கூற்றில் விதிக்கப்படுகின்றது.

குத்தகை ஆதனத்திற்கான அல்லது அதன் மீதான மேம்பாட்டுக் கிரயங்கள் மூலதனமாக்கப்பட்டு, குத்தகையின் முடிவுறாத காலப்பகுதி அல்லது மேம்பாடுகளின் உத்தேச பயன்பாட்டு ஆயுட்காலம் ஆகியவற்றில் குறைவான காலப்பகுதியில் தேய்மானம் கணிக்கப்படுகின்றது.

விற்பனை மற்றும் குத்தகை பரிவர்த்தனை ஒன்றுடன் தொடர்புடைய சொத்துக்களின் முன்கொண்டு தொகைக்கு மேலதிகமாக ஏதேனும் விற்பனை வருமானம் காணப்படின், அது பிற்போடப்பட்டு குத்தகை காலம் முழுவதற்கும் காலத்தேய்மானம் செய்யப்படுகின்றது.

**குறுகிய கால குத்தகைகள் மற்றும் குறைந்த மதிப்புள்ள சொத்துக்களின் குத்தகைகள்**

குறைந்த மதிப்புள்ள சொத்துக்கள் மற்றும் குறுகிய கால குத்தகைகளுக்கான உரிமைக்கான சொத்துக்கள் மற்றும் குத்தகை பொறுப்புக்களை அங்கீகரிக்க வேண்டாம் என சபை தேர்வு செய்துள்ளது. சபை இந்த குத்தகைகளுடன் தொடர்புடைய குத்தகைக் கொடுப்பனவுகளை குத்தகை காலத்தின் மீது நேர்கோட்டு அடிப்படையில் ஒரு செலாவக அங்கீகரிக்கிறது.

### 2.2.5 முதலீட்டு ஆதனம்

அனுராதபுரம் சுற்றுலா விடுதி மற்றும் மன்னார் சுற்றுலா விடுதி ஆகியவை சபையின் குத்தகை சொத்துகளில் உள்ளடங்குகின்றன.

**அ) ஏற்பிசைவுக்கான அடிப்படை**

முதலீட்டு ஆதனம் என்பது சாதாரண வணிக நடவடிக்கையின் போது விற்பதற்காக, உற்பத்தி அல்லது பொருள்களின் அல்லது சேவைகளின் வழங்கல் அல்லது நிர்வாக நோக்கங்களுக்காக அல்லாது வாடகை வருமானத்தைப் பெறுவதற்காக அல்லது மூலதன ஏற்றத்துக்காக அல்லது அவை இரண்டுக்காகவும் வைத்திருக்கும் ஆதனமாகும்.

**ஆ) அளவீட்டு அடிப்படை**

உருப்படியுடன் தொடர்பான எதிர்கால பொருளாதாரப் பயன்கள் குழுவுக்குப் பாய்வதற்கான வாய்ப்பு காணப்படுவதுடன் முதலீட்டு ஆதனத்தின் கிரயம் நம்பந்தகுந்தவாறு அளக்கக்கூடியதாக இருக்கும்போது மாத்திரமே முதலீட்டு ஆதனம் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. இறையிலி நிலம் மற்றும் கட்டிடங்களை உள்ளிட்ட முதலீட்டு ஆதனம் பொருள்கள் அல்லது சேவைகளை வழங்குவதற்காக கணிசமான அளவில் வைத்திருக்காத, அத்துடன் சாதாரண வணிக நடவடிக்கைகளின்போது விற்பனைக்காகக் கருதாத நீண்டகால வாடகைக்கு அல்லது மூலதன ஏற்றத்திற்கு அல்லது அவை இரண்டுக்காகவும் வைத்திருக்கும் ஆதனமாகும்.

முதலீட்டு ஆதனம் ஆரம்பத்திலும் அதனைத் தொடர்ந்தும் தொடர்பான கொடுக்கல் வாங்கல் கிரயங்களை உள்ளிட்ட அதன் கிரயத்தில் அளக்கப்படுவதுடன் அதன் காரணமாக, திரண்ட தேய்மானத்தையும் ஏதேனும் திரண்ட சேத இழப்பு நட்டங்களையும் கழித்த கிரயத்தில் கொண்டுசெல்லப்படுகின்றது.

சபையின் முதலீட்டு ஆதனம், விரிவான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்ட கொண்டு செல்லும் பெறுமதியில் மாற்றங்களுடன் வருடாந்தம் திறந்த சந்தைப் பெறுமதிக்கு மீள்மதிப்பீடு செய்யப்படுகின்றது.

**இ) ஏற்பிசைவு நீக்கம்**

முதலீட்டு ஆதனங்கள் எதிர்கால பொருளாதாரப் பயன்கள் எதுவும் எதிர்பார்க்கப்படாத காரணத்தினால் விற்கப்படும்போது அல்லது பயன்பாட்டிலிருந்து நிரந்தரமாக திரும்பப் பெறப்படும்போது ஏற்பிசைவிலிருந்து நீக்கப்படுகின்றது. ஓய்வுபெறல் அல்லது விற்பனையின் மீதான ஏதேனும் வருவாய்கள் அல்லது நட்டங்கள் ஓய்வுபெறும் அல்லது விற்பனை செய்யும் ஆண்டில் விரிவான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது

**ஈ) முதலீட்டு ஆதனத்திலிருந்தும் / அதற்கும் மேற்கொள்கின்ற பிந்திய மாற்றல்கள்**

உரிமையாளர் வைத்திருப்பதை முடிவுறுத்தி சான்றுப்படுத்தப்பட்டவாறு பயன்பாட்டில் ஒரு மாற்றம் நிகழ்கின்றபோது, மற்றுமொரு திறத்தவருக்கு தொழிற்பாட்டுக் குத்தகை ஒன்று ஆரம்பிக்கும்போது அல்லது விற்பனை செய்யும் நோக்கத்துடன் நிர்மாணம் அல்லது அபிவிருத்தி பூர்த்தியடைகின்றபோது மட்டுமே முதலீட்டு ஆதனத்தில் கைமாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.2.6 நிதிசாராத சொத்துகளின் சேத இழப்பு

ஒரு சொத்து சேதத்துக்கு உட்படக்கூடும் என்பது பற்றிய அடையாளம் ஏதும் உள்ளதா என சபை ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மதிப்பீடு செய்கின்றது. அத்தகைய அடையாளம் ஏதும் காணப்படின், அல்லது ஒரு சொத்துக்கான சேத இழப்பு தேவைப்படின், சொத்தின் மீளப் பெறக்கூடிய தொகை பற்றி சபை மதிப்பீடொன்றை மேற்கொள்கின்றது. ஒரு சொத்தின் மீளப் பெறக்கூடிய தொகை, ஏனைய சொத்துகள் அல்லது சொத்துகளின் குழுமத்திலிருந்து பெரும்பாலும் புறம்பாக அந்த சொத்து காசு உட்பாய்ச்சலை உருவாக்காதவிடத்து, விற்பனைக்கிரயம் மற்றும் பயன்பாட்டில் உள்ள மற்றும் தனிப்பட்ட சொத்துக்கு நிர்ணயிக்கப்படும் அதன் பெறுமதி கழித்து சொத்தின் அல்லது காசு உருவாக்கும் அலகின் நடுநிலைப் பெறுமதியின் கூடிய தொகையாகும். ஒரு சொத்தின் கொண்டு செல்லும் பெறுமதி அதன் மீளப்பெறக்கூய தொகையை விஞ்சுமாயின், அந்தச் சொத்து சேதமடைந்ததாகக் கருதப்பட்டு, அதன் மீளப்பெறக்கூடிய தொகைக்கு குறைத்து எழுதப்படுகின்றது. பயன்பாட்டிலுள்ள பெறுமதியை மதிப்பிடுகையில், பணத்தின் காலப்பெறுமதியின் நடைமுறைச் சந்தை மதிப்பீடு மற்றும் சொத்தின் குறித்த இடர் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் வரிக்கு முந்திய கழிவு வீதத்தைப் பயன்படுத்தி உத்தேச எதிர்கால காசுப்பாய்ச்சலில் தற்போதைய பெறுமதியில் கழிவு வழங்கப்படுகின்றது. இந்தக் கணிப்பீடுகளுக்கு மதிப்பீட்டு மடங்குகள், நிரல்படுத்தப்பட்ட பங்குவிலைகள் அல்லது ஏனைய கிடைக்கக்கூடியதாக உள்ள நடுநிலை மதிப்பீட்டுக் காட்டிகள் ஆகியவை உடந்தையாக உள்ளன.

மீள்மதிப்பீடு உரிமைப்பங்குகளுக்கு கொண்டுசெல்லப்படும் முன்னர் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட ஆதனம் நீங்கலாக, தொடரும் தொழிற்பாடுகளின் சேத நட்டங்கள் சேதமடைந்த சொத்துகளின் தொழிற்பாட்டுக்கு இயைபாக அந்த செலவின வகுதிகளில் விரிவான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில், சேத இழப்பு ஏதேனும் முன்னைய மீள்மதிப்பீட்டுத் தொகை வரையிலும் சேத இழப்பு உரிமைப்பங்கிலும் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

நல்லெண்ணத்தை உள்ளடக்கிய சொத்துகளுக்கு, முன்னர் ஏற்பிசைவு செய்யப்பட்ட சேத நட்டங்கள் மேலும் இல்லாதிருப்பதற்கான அல்லது குறைந்திருப்பதற்கான குறிகாட்டி ஏதேனும் உள்ளதா என ஒவ்வொரு அறிக்கைத் திகதியிலும் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படுகின்றது. அத்தகைய குறிகாட்டி இருப்பின், மீளப்பெறக்கூடிய தொகை பற்றிய மதிப்பீடொன்றை சபை மேற்கொள்கின்றது. இறுதியாக சேத நட்டம் ஏற்பிசைவு செய்யப்பட்டதிலிருந்து சொத்துகளின் மீளப் பெறக்கூடிய தொகையை நிர்ணயிப்பதற்குப் பயன்படுத்திய மதிப்பீடுகளில் மாற்றம் ஒன்று காணப்பட்டால் மட்டுமே முன்னர் ஏற்பிசைவு செய்யப்பட்ட சேத நட்டம் திருப்பப்படுகின்றது. அவ்வாறாயின், சொத்தின் கொண்டு செல்லப்படும் தொகை அதன் மீளப்பெறக்கூடிய தொகைக்கு அதிகரிக்கப்படுகின்றது.

முன்னைய ஆண்டுகளில் சொத்துக்கான சேத இழப்பு நட்டம் ஏற்பிசைவு செய்யப்படாதிருப்பின், தேறிய தேய்மானம் கொண்டிருந்த நிர்ணயிக்கப்பட்டிருக்கக்கூடிய கொண்டு செல்லும் தொகையை அதிகரித்த தொகை விஞ்சுதல் ஆகாது. திருப்பம் மீள்மதிப்பீட்டு அதிகரிப்பாகக் கொள்ளப்படும் சொத்து மீள்மதிப்பீட்டுத் தொகையில் கொண்டுசெல்லப்படாதவிடத்து, அத்தகைய திருப்பம் விரிவான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

### 2.2.7 விற்பனைக்காக வைத்திருக்கும் நடைமுறையல்லாத சொத்து

நடைமுறையல்லாத சொத்துகளின் கொண்டு செல்லும் தொகை பிரதானமாக ஒரு விற்பனைக் கொடுக்கல் வாங்கல் ஊடாக மீளப்பெறப்படவேண்டியுள்ளபோதும் விற்பனை பெருமளவில் சாத்தியமானது என கருதப்படும்போதும் நடைமுறையல்லாத சொத்துகள் விற்பனைக்காக வைத்திருக்கும் சொத்துகளாக வகைப்படுத்தப்படுகின்றன. அவை விற்பனைக்கான கிரயத்தைக் கழித்து கொண்டு செல்லும் தொகை மற்றும் நடுநிலைப் பெறுமதியில் குறைவானதாகக் கூறப்படுகின்றன.

விற்பனை பெருமளவில் சாத்தியமாகக் காணப்படுவதுடன் சொத்து அல்லது விற்பனைத் தொகுதி அதன் தற்போதைய நிலைமையில் உடனடி விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாக உள்ளபோது மட்டுமே நடைமுறையல்லாத சொத்தும் விற்பனைத் தொகுதியும் விற்பனைக்காக வைத்திருப்பதாக வகைப்படுத்தப்படுகின்றது.ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களும் அருவச் சொத்துகளும் விற்பனைக்காக வைத்திருப்பதாக வகைப்படுத்தப்பட்டதும் அவற்றுக்கு தேய்மானம் அல்லது காலத்தேய்மானம் கணிக்கப்படுவதில்லை.

## 2.2.8 நிதிச் சொத்துகள்

**எஸ்எல்எ.ஃப்ஆர்எஸ் 9 – நிதி கருவி: வகைப்படுத்தல் மற்றும் அளவிடல்**

2014 இல் வெளியிடப்பட்ட எஸ்எல்எ.ஃப்ஆர்எஸ் - 9ஆனது எல்கேஏஎஸ் 39 நிதிக் கருவிகள்: அங்கீகாரம் மற்றும் அளவிடுதல் என்ற நியமத்திலுள்ள வழிகாட்டலை பதிலீடு செய்கின்றது. எஸ்எல்எ.ஃப்ஆர்எஸ் 9 நிதிக் கருவிகளின் வகைப்பாடு மற்றும் அளவீடு ஆனது நிதிக் கருவிகளின் வகைப்பாடு மற்றும் அளவீட்டிற்கான திருத்தப்பட்ட வழிகாட்டுதலை உள்ளடக்கியுள்ளது. இதில் நிதிச் சொத்துகளின் குறைபாட்டு நட்டத்தைக் கணக்கிடுவதற்கான புதிய எதிர்பார்ப்பு கடன் இழப்பு மாதிரியும் பொதுவான புதிய நட்டச்சாத்திய (ஹெட்ஜ்) கணக்கீட்டுத் தேவைப்பாடுகளும் உள்ளடங்கியுள்ளது. மேலும், இது எல்கேஏஎஸ் 39 இலிருந்து வருகின்ற நிதிக் கருவிகளை அங்கீகரித்தல் மற்றும் அங்கீகரிக்காதிருத்தல் தொடர்பான வழிகாட்டுதலையும் முன்னோக்கி கொண்டு செல்கின்றது..

சொத்து பெறப்பட்ட நோக்கத்தைப் பொறுத்து, சபை அதன் நிதிச்சொத்துகளை கீழே கூறப்படும் வகுதிகளுள் ஒன்றாக வகைப்படுத்துகின்றது. ஒவ்வொரு வகுதிக்குமான சபையின் கணக்கீட்டுக் கொள்கை பின்வருமாறு:

**(அ) வியாபார பெறவேண்டியவை**

இந்த சொத்துகள் செயற்பாட்டிலுள்ள சந்தையில் விலைகூறப்படாத நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுகளுடன் கூடிய கைமாற்றலற்ற நிதி சொத்துக்களாகும். அவை பிரதானமாக மாவட்ட விநியோகஸ்தர்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதன் மூலம் எழுகின்றன (உதாரணமாக. வியாபார பெறவேண்டியவை), ஆனால் ஏனைய வகையான ஒப்பந்த நாணயச் சொத்துகளையும் அவை உள்ளடக்குகின்றன. அவை ஆரம்பத்தில் அவற்றின் கையகப்படுத்தல் அல்லது வெளியீட்டிற்கு நேரடியாகக் காரணமாகின்ற பரிமாற்ற கிரயங்களுடன் சேர்த்து நியாயமான பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன

**(ஆ) ஏனைய நடைமுறை சொத்துக்கள்**

வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவை ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுகின்றன.

**(இ) அறவிடமுடியாக் கடன் ஒதுக்கம்**

பிணையற்ற வியாபார கடன்பட்டோர் மீதான ஐயக் கடன்களுக்கான ஏற்பாடானது பின்வரும் வயது பகுப்பாய்வின் அடிப்படையில் தனிநபர் கட்ன்பட்டோர் மீதிகளுக்கு எதிராக பெறப்பட்ட வங்கி உத்தரவாதங்களின் பெறுமதியை நீக்கிய பின்னர் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| கடன் வெளிநிற்கும் காலம் | சதவீதம் (%) |
|---|---|
| **செயலில் கடனாளிகள்** | |
| 0 - 3 மாதங்கள் | - ஏற்பாடு இல்லை |
| 4 - 6 மாதங்கள் | - 2.5 % |
| 7 - 12 மாதங்கள் | - 5% |
| மாதங்களுக்கு மேல் | - 10% |
| **செயலற்ற கடனாளிகள்** | |
| சட்ட வழக்கின் கீழ் கடனாளிகள் மற்றும் சர்ச்சைகள் | - 100% |

### 2.2.9 இருப்புகள்

வழக்கொழிந்த மற்றும் மெதுவாக விற்பனையாகும் உருப்படிகளுக்கு உரிய படிகளை ஏற்பாடு செய்த பின்னர், உற்பத்தியின் குறுகிய வாழ்க்கை வட்டம் காரணமாக தேறிய கைதேறக்கூடிய பெறுமதி (NRV) இல்லாத காரணத்தினால், இருப்புகள் கிரயத்தில் மட்டுமே அளவிடப்படுகின்றன. லொத்தர் சீட்டு இருப்புகள் விரைவாக விற்பனையாவதால், NRV இனை அடையாளம் காண வேண்டிய தேவை இல்லை. தேறிய கைவரக்கூடிய பெறுமதி என்பது, பூர்த்திசெய்வதற்கான உத்தேசக் கிரயம் மற்றும் விற்பனையை மேற்கொள்வதற்கு அவசியமான உத்தேசக் கிரயம் ஆகியவற்றைக் கழித்து சாதாரண வணிக நடவடிக்கைகளின் மூலம் இருப்புகளை விற்கக்கூடிய விலைகள் ஆகும்.

தங்கத்தினாலான பொருட்கள், மோட்டார் வாகனங்கள் மற்றும் ஏனைய பரிசுகளை உள்ளடக்கிய பரிசுகளின் இருப்புகளுக்கு விற்பனைப் பெறுமதி இல்லாமல் - உறப்பட்ட செலவினம் மட்டுமே காணப்படுவதனால், அவை கிரயத்தில் மதிப்பிடப்படுகின்றன. அத்தகைய எல்லா இருப்புகளும் எதிர்காலத்தில் எவ்வேளையிலும் பரிசுகளாக வழங்கப்படவுள்ளனவே தவிர கைக்கெட்டிய துாரத்தில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்காக அல்ல.

இருப்புகளை தற்போதுள்ள இடத்துக்கும் நிலைமைக்கும் கொண்டுவருவதற்கு உறப்பட்ட கிரயம் இருப்புக் கிரயமாக கணக்கிலிடப்படுகின்றது.

### 2.2.10 காசும் காசுக்குச் சமமானவையும்

கையிலுள்ள காசு மற்றும் கேள்வி வைப்புகள் ஆகியவை காசும் காசுக்குச் சமமானவையும் என வரையறுக்கப்படுகின்றன. இது கையிலுள்ள காசு, வங்கியில் உள்ள அழைப்புப் பணம், மூன்று மாத அல்லது அதற்குக் குறைவான மூல முதிர்ச்சியைக் கொண்ட ஏனைய குறுகிய கால உயர் திரவ முதலீடுகள் - காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்துக்காக – ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

காசுப்பாய்ச்சல் கூற்றுகள் நேரில் முறையின் அடிப்படையில் அறிக்கை செய்யப்படுகின்றன.

### 2.2.11 எஸ்எல்எஃப்ஆர்எஸ் 13 நியாயப் பெறுமதி அளவீடு

சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மதிப்பீட்டு நுட்பங்கள் சேர்க்கப்பட்டு நடைமுறை மற்றும் நடைமுறையற்ற அடிப்படையில் நியாயப் பெறுமதியில் அளவிடப்பட வேண்டுமென எஸ்.எல்.எ.ஃப்.ஆர்.எஸ் 13 தேவைப்படுத்தப்படுகின்றது. அதற்கமைய, தேசிய லொத்தர் சபை அதன் கொழும்பு விமான நிலைய சூப்பர் சீட்டிழுப்பு, டொலர் போர்ச்சூன், புதிய விமான நிலைய லொத்தர் ஆகியவற்றை குறிப்பு 16-1 இலுள்ள நாணய ஏற்ற இறக்கத்தைக் கருத்தில் கொண்டு நியாயப் பெறுமதியில் காண்பித்துள்ளதுடன் ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளைகிரயத்தில் காண்பித்துள்ளது.

## 2.3 உரிமைத்துவம், பொறுப்புக்கள் மற்றும் நிதி ஏற்பாடுகள்

### 2.3.1 உரிமைத்துவம்

**திரட்டிய திறைசேரி நிதியம்**

பொதுத் திறைசேரியினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆரம்ப மூலதனத்தினை இது பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

**மீள்மதிப்பீட்டு ஒதுக்கு**

பிரதம அரசாங்க விலை மதிப்பீட்டாளரினால் முன்னெடுக்கப்பட்ட ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் தேறிய மீள் மீள்மதிப்பீட்டுப் பெறுகையினை மீள்மதிப்பீட்டு ஒதுக்கு பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

**கட்டிட ஒதுக்கு நிதியம்**

உத்தேச தலைமையகக் கட்டிட நிர்மாண நோக்கத்திற்குத் தேவையான நிதியினைத் திரட்டுவதற்கும் பயன்படுத்துவதற்கும் கட்டிட ஒதுக்கு நிதியமொன்று தாபிக்கப்பட்டது.

**பரிசுகள் ஒதுக்கு நிதியம்**

சபையினால் நடத்தப்படும் லொத்தர் சீட்டிழுப்புகளுக்கான சுப்பர் பரிசுகள் மற்றும் விசேட பரிசுகளை வழங்குவதற்காக பரிசுகள் ஒதுக்கு நிதியமானது பேணப்படுகின்றது.

**நிறுத்திவைத்த உழைப்புகள்**

தொழிற்பாடுகளிலிருந்து வரிவிதிப்பனவுக்குப் பின்னரான திரட்டிய தேறிய மிகையினை இது பிரதி நிதித்துவப்படுத்துகின்றது.

### 2.3.2 பொறுப்புகள்

நிதிநிலைமையின் கூற்றில் நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் வகைப்படுத்தப்படுத்தப்பட்ட பொறுப்புகள் ஐந்தொகைத் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் தீர்க்க வேண்டி ஏற்படுபவையாகும். தெரிந்த எல்லா பொறுப்புகளும் நிதிக்கூற்றைத் தயாரிக்கையில் கணக்கிலிடப்படுகின்றன.

வணிகக் கடன் கொடுத்தோர் மற்றும் ஏனைய சென்மதிகள் ஆகியவை அவற்றின் புத்தகப் பெறுமதியில் கூறப்பட்டுள்ளன.

### 2.3.3 ஏற்பாடுகள், நிகழத்தக்க சொத்துக்கள் மற்றும் நிகழத்தக்க பொறுப்புக்கள்

**வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள்**

பொருளாதாரப் பயன்களுடன் இணைந்த வளங்களின் வெளிப்பாய்ச்சல் கடப்பாட்டைத் தீர்ப்பதற்கு தேவைப்படு மிடத்தும் கடப்பாட்டுத் தொகையின் நம்பத்தகுந்த மதிப்பீட்டை மேற்கொள்வதற்கான வாய்ப்பு காணப்படுமிடத்தும் கடந்த கால நிகழ்வின் விளைவாக ஒரு தொகுதி கடப்பாடொன்று தற்போது காணப்படுமிடத்தும் (சட்ட மற்றும் நிர்மாண) ஏற்பாடுகள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

### 2.3.4 வருமான வரிச் செலவினம்

நடப்பு மற்றும் பிற்போட்ட வரிகளை வருமான வரிச் செலவினம் பிரதிநிதித்துவம் செய்கின்றது. உரிமைத்துவத்தில் அங்கீகரிக்கப்படும் அளவுக்கு வருமான வரிச் செலவானது உரிமைத்துவத்தில் நேரடியாக அங்கிகரிக்கப்பட்ட விடயங்களுடன் தொடர்புடையதாக இருந்தால், அது நேரடியாக இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**நடப்பு வரி**

வருமான வரிக்கான அடிப்படை நிதிக்கூற்றில் அறிக்கை செய்யப்பட்டவாறு வருமான மற்றும் செலவினக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன் 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்களுக்கு இணங்க கணிக்கப்படுகின்றன. திரட்டிய நிதியத்துக்கு வழங்கப்பட்ட பங்களிப்பின் மீது செலுத்தப்பட்ட / செலுத்தப்பட வேண்டிய வருமான வரி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனான இணக்கப்பாட்டிற்கு அமைய, குறித்த நிதியத்திற்கான எதிர்கால பண அனுப்புதல்களிலிருந்து தவணை அடிப்படையில் பெறப்பட்டது/ பெறப்படவுள்ளது

**பிற்போடப்பட்ட வரிவிதிப்பனவு**

ஐந்தொகைத் திகதியில் சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் வரித்தளங்களுக்கும் நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்காக அவற்றின் கொண்டு செல்லும் தொகைக்கும் இடையிலான தற்காலிக வேறுபாடுகள் மீது பொறுப்பு முறைமையைப் பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரி ஏற்பாடு செய்யப்படுகின்றது.

எல்லா தற்காலிக வேறுபாடுகளுக்கும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துகளும் பொறுப்புகளும் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. கழிக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகளும் முன்கொண்டு செல்லப்படும் பயன்படுத்தப்படாத வரி வரவுகளும் பயன்படுத்தப்படாத நட்டங்களும் பயன்படுத்தக்கூடிய வரி விதிக்கக்கூடிய இலாபம் கிடைப்பதற்கான வாய்ப்புள்ள அளவுக்கு எல்லா கழிக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகளுக்கும் முன்கொண்டு செல்லப்படும் பயன்படுத்தப்படாத வரி வரவுகளுக்கும் பயன்படுத்தப்படாத வரி நட்டங்களுக்கும் பிற்போடப்பட்ட வரிச்சொத்துகள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துகளின் கொண்டு செல்லும் தொகை ஒவ்வொரு ஐந்தொகைத் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் பயன்படுத்தப்படவுள்ள பிற்போடப்பட்ட வரிச் சொத்துகள் முழுவதும் அல்லது அதன் பகுதி அனுமதிப்பதற்கு போதியளவு வரி விதிக்கக்கூடிய இலாபம் கிடைப்பது இனிமேலும் சாத்தியமற்றது என்னும் அளவிற்குக் குறைக்கப்படுகின்றது.

ஒவ்வொரு நிதி நிலைமைக் கூற்றுத் திகதியிலும் ஏற்பிசைவு செய்யப்படாத பிற்போடப்பட்ட வரிச்சொத்துகள் மீள் மதிப்பீடு செய்யப்படுவதுடன் எதிர்கால வரிவிதிக்கக்கூடிய இலாபம் பிற்போடப்பட்ட வரிச்சொத்தை மீளப்பெறுவதற்கு அனுமதிக்காது என்பது சாத்தியமாகும் அளவுக்கு ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

நிதி நிலைமைக் கூற்றுத் திகதியில் சட்டவாக்கம் செய்யப்பட்ட அல்லது பொருண்மையாகச் சட்டவாக்கம் செய்யப்பட்ட வரி வீதங்கள் மற்றும் வரிச் சட்டங்களின் அடிப்படையில் சொத்து கைவரப்பெறும்போது அல்லது பொறுப்பு தீர்க்கப்படும்போது அவ்வாண்டுக்குப் பிரயோகிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட வரி வீதத்தில் பிற்போடப்பட்ட வரிச்சொத்துகளும் பொறுப்புகளும் அளவிடப்படுகின்றன.

## 2.4 ஊழியர் நலன்கள்

### 2.4.1. குறுங்கால கால ஊழியர் நலன்கள்

சம்பளம், ஊக்குவிப்பு, பிரயாணக் கொடுப்பனவு, வருடாந்த மிகையூதியம், மருத்துவம், சீருடை கொடுப்பனவு, சீட்டிழுப்புக் கொடுப்பனவு, இடர் படி, மேலதிக நேரம் மற்றும் உணவுக் கொடுப்பனவு என்பன.

### 2.4.2. நீண்டகால ஊழியர் நலன்கள்

இடர் கடன் மற்றும் வீட்டுக் கடன்

### 2.4.3. ஓய்வூதிய நலக் கடப்பாடுகள்

**(அ வரையறுத்த பங்களிப்புத் திட்டங்கள் EPF மற்றும் ETF**

ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய பங்களிப்பு ஆகியவற்றுக்குத் தகைமை பெறும் எல்லா ஊழியர்களும் சம்பந்தப்பட்ட நியதிச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க சம்பந்தப்பட்ட பங்களிப்பு நிதிகளால் காக்கப்படுகின்றனர். வரையறுத்த பங்களிப்புத் திட்டங்களுக்கான பங்களிப்புகள் வருமானக் கூற்றில் செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. ஊழியர் சேமலாப நிதியத்திற்கான சபையினதும் ஊழியரினதும் பங்களிப்புகள் முறையே 15% மற்றும் 10% ஆகும். ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான சபையின் பங்களிப்பு 3% ஆகும்.

**ஆ) வரையறுத்துரைத்த நலத் திட்டம் - ஓய்வூதிய பணிக்கொடை**

ஓய்வூதிய பணிக்கொடையே வரையறுத்துரைத்த நலத் திட்டமாகும். இந்த பொறுப்பை எதிர்கொள்வதற்காக நிதி நிலைமைக் கூற்றில் ஏற்பாடொன்று பேணப்படுகின்றது. Project Unit Credit (PUC) முறைக்கமைய எதிர்வுகூறப்படும் அலகு கிரய பதிவு முறையைப் பயன்படுத்தி பணிக்கொடைக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படுவதுடன் இதற்கான கிரயம் வருமானக் கூற்றில் செலவினமொன்றாக சாட்டப்படுகின்றது. இது இத்துறையில் துறைசார் தகுதிபெற்றவர்களான மெஸர்ஸ் எக்சூரியல் என்ட் மெனேஜ்மன்ட் கன்ஸல்டன்ஸ் பிரைவட் லிமிடட் இனால் மேற்கொள்ளப்பட்டது. வருடாந்தம் இதனை மேற்கொள்ள சபை எதிர்பார்க்கின்றது.

இந்த நிதியமானது வெளியிலிருந்து நிதியளிக்கப்படவில்லை

எவ்வாறாயினும், 1983 இன் 12 ஆம் இலக்க ஊழியர் பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் படி, ஐந்தாண்டுகள் தொடர்ச்சியான சேவையை பூரணப்படுத்தியோருக்கு மாத்திரமே இந்த பொறுப்பு எழுகின்றது

## 2.5 வருமானக் கூற்று

### 2.5.1 வருமான ஏற்பிசைவு

தேசிய லொத்தர் சபையின் வணிகம் பொதுவான விற்பனையாக இருப்பதால் வாடிக்கையாளர்களுடன் ஒப்பந்தங்கள் தேவைப்படுவதில்லை

அ) எஸ்எல்எ.ஃப்ஆர்எஸ் 15 - வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து வருவாய்

எவ்வளவு வருமானம் எப்போது அங்கீகரிக்கப்படும் என்பதனை நிச்சயிப்பதற்கான ஒரு விரிவான கட்டமைப்பை எஸ்எல்எ.ஃப்ஆர்எஸ் 15 தாபிக்கின்றது. இது ஏற்கனவே உள்ள எல் கேஏஎஸ் 18 வருமானம், எல்கேஏஎஸ் 11 நிர்மாண ஒப்பந்தங்கள் மற்றும் ஐஎ.ஃப்ஆர்ஐசி 13 வாடிக்கையாளர் இறை நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகிய வருமான அங்கீகார வழிகாட்டல்களை பதிலீடுசெய்கின்றது.

ஆ) வட்டி .

நேர அடிப்படையில் அட்டுறும் விளைவு வட்டி முறைமையைப் பயன்படுத்தி வட்டி வருமானம் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

இ) ஏனையவை

ஏனைய வருமானம் அட்டுறும் அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

### 2.5.2 செலவின ஏற்பிசைவு

உறப்பட்ட கிரயத்துக்கும் குறித்த உருப்படி வருமானத்தின் வருவாய்க்கும் இடையிலான நேரடியான தொடர்பின் அடிப்படையில் வருமானக் கூற்றில் செலவினங்கள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. வினைத்திறன் நிலையில், வணிகத்தை நடத்துவதிலும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தைப் பேணுவதிலும் உறப்பட்ட எல்லாச் செலவினமும் ஆண்டுக்கான இலாபத்தைக் கணிப்பதில் வருமானத்தில் விதிக்கப்படுகின்றது.

### 2.5.3 அரசாங்க பங்களிப்புக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் (விசேட வரி)

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 9(2)(உ) இன் படி, நிதி அமைச்சரால் அவ்வப்போது தீர்மானிக்கப்படுகின்ற அரசாங்கத்திற்கான பங்களிப்புகள் (விசேட வரி) அல்லது அரசுக்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் சபையின் தேறிய மிகையினை நிர்ணயிப்பதற்காக வருமானத்தின் மீது சாட்டப்பட்டுள்ளது.

## 2.6 பொதுவானவை

### 2.6.1 ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் நடைபெறும் நிகழ்வுகள்

ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் நடைபெறும் எல்லா நிகழ்வுகளும் கவனத்தில் கொள்ளப்பட்டு, அவசியமானவிடத்து நிதிக்கூற்றுகளில் உரிய குறிப்புகளில் திருத்தங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

### 2.6.2 ஒப்பீட்டுத் தொகைகள்

அவசியமானவிடத்து, நடைமுறை ஆண்டின் சமர்ப்பிப்புக்கு அமைவாக இருப்பதற்காக ஒப்பீட்டு இலக்கங்கள் மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.6.3 கடன்கள் மற்றும் பெறவேண்டியவை

- வீட்டுக் கடன் - 7 வருட அடிப்படை சம்பளம் (அதிகபட்சம் ரூபா 3,000,000 வரை). வட்டி விகிதம் 4%. 55 வயதுக்கு முன் திரும்பப் பெறப்பட வேண்டும்.
- இடர் கடன் - 10 மாத அடிப்படை சம்பளம் (அதிகபட்சம் ரூபா 250,000 வரை). வட்டி விகிதம் 4.2%. 60 மாத தவணைகளில் திரும்பப் பெறப்பட வேண்டும்.

### 2.6.4 கடப்பாடுகள் மற்றும் நிகழத்தக்கவை

நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் அல்லது தற்போதைய கடப்பாடுகளால் மட்டுமே உறுதிசெய்யப்படும் பொருளாதார நன்மைகளை மாற்றுவது சாத்தியமில்லாத அல்லது நம்பகத்தன்மையுடன் அளவிட முடியாதுள்ள நிகழத்தக்க பொறுப்புகள் சாத்தியமான கடப்பாடுகளாகும். சபையின் மூலதன கடப்பாடு மற்றும் நிகழத்தக்க பொறுப்புகள் நிதிக் கூற்றுக்களுக்குரிய அந்தந்த குறிப்புகளில் வெளிப்படுத்தப்படுகின்றன.

### 2.6.5 உரித்துக்கோராத பரிசுகள்

அந்தந்த குலுக்கல் தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பிந்திய உரித்துக்கோராதவையாக மாற்றப்படுவதுடன் இது காலாண்டு அடிப்படையில் திரட்டிய நிதியத்துக்கு அனுப்பப்படும்.

### 2.6.6 நிதிகளின் பகிர்வு

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் ஒப்புதலுடன், 2008 செப்தெம்பர் 02 முதல் நடைமுறைக்கு வரும் விதத்தில் சபை ஒரு டிக்கெட்டின் விலையை ரூபா 10.00 இலிருந்து ரூபா 20.00 இற்கு அதிகரித்தது. அதற்கமைய முகவர் தரகும் 15% இலிருந்து 17.5% ஆக அதிகரித்தது. மேலும், 2019 யூலை 01 முதல் முகவர் தரகு மீண்டும் 17.5% இலிருந்து 18.75% ஆக அதிகரிக்கப்பட்டது.

**(அ) சீட்டிழுக்கப்படும் லொத்தர்களுக்கான வருமானப் பகிர்வுகள் பின்வருமாறு**

| | மஹஜன சம்பத | வாசனா சம்பத | கொவி செத | சுபிரி வாச னா | ஜாதிக சம்பத | தன நிதானய | சம்பத லக்ன வரம் | | மெகா பவர் | செவன சுரண் டல் | தருதிரி சம்பத |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | 20/- | 30/- | | | |
| பரிசுகள் | 49% | 52% | 47% | 52% | 52% | 47% | 49% | 52% | 48% | 49% | 52% |
| விநியோகத்தர் தரகு | 18.75% | 18.75% | 18.75% | 18.75% | 18.75% | 18.75% | 18.75% | 18.75% | 18.75% | 18.75% | 18.75% |
| அரச பங்களிப்பு | 16.50% | 16.50% | 10% | 10% | 10% | 10% | 10% | 10% | 10% | 10% | 10% |
| சபை | 15.75% | 12.75% | 24.25% | 19.25% | 19.25% | 24.25% | 22.25% | 19.25% | 23.25% | 22.25% | 19.25% |
| மொத்தம் | 100% | 100% | 100% | 100% | 100% | 100% | 100% | 100% | 100% | 100% | 100% |

விமான நிலைய மற்றும் விமானச் சேவைகள் (இலங்கை) லிமிடெட் சார்பாக டொலர் பர்ச்சூன் லொத்தர் சீட்டை சபை நடத்துகிறது. தேறிய மிகையானது (திரட்டிய நிதிய) விசேட வரியின் ஊடாக விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் இற்கு செலுத்தப்படுகிறது.

**(ஆ) சுரண்டல் லொத்தர்களுக்கான வருமானப் பகிர்வுகள் வருமாறு**

| | செவன ரூபா 20/- | செவன ரூபா 50/- | சமுர்த்தி ரூபா 20/- |
|---|---|---|---|
| பரிசுகள் | 53% | 53% | 49% |
| விநியோகத்தர் தரகு | 18.75% | 18.75% | 18.75% |
| அரச பங்களிப்பு | 10% | 10% | 10% |
| சபை | 18.25% | 18.25% | 22.25% |
| மொத்தம் | 100% | 100% | 100% |

**(இ)** திரட்டிய நிதியம், தேசிய சிறுநீரக நிதியம் மற்றும் திரட்டிய நிதியத்தின் ஊடாக தொடர்புடைய அமைச்சுக்களிற்கான சபையின் அரசாங்க பங்களிப்புகள் கீழே தரப்படுகின்றன.

| சீட்டிழுப்பு லொத்தர்கள் | சதவீதம் | திரட்டிய நிதியம் / அமைச்சு |
|---|---|---|
| மஹஜன சம்பத | 16.5% | திரட்டிய நிதியம் |
| வாசனா சம்பத | 16.5% | திரட்டிய நிதியம் |
| கொவிசெத | 10% | திரட்டிய நிதியம் - விவசாய அமைச்சு |
| சுபிரி வாசனா (செவ்வாய்) | 10% | திரட்டிய நிதியம் - ரணவிரு சேவா அதிகாரசபை |
| சுபிரி வாசனா (வெள்ளி மற்றும் ஞாயிறு) | 10% | திரட்டிய நிதியம் - விளையாட்டுக்கள் அமைச்சு மற்றும் சமூக சேவைகள் அமைச்சு |
| ஜாதிக சம்பத (திங்கள் மற்றும் புதன்) | 10% | திரட்டிய நிதியம் - சுகாதார மற்றும் சுதேசிய மருத்துவ சேவைகள் அமைச்சு |
| ஜாதிக சம்பத (வியாழன் மற்றும் சனி) | 10% | திரட்டிய நிதியம் - தொழில் அமைச்சு |
| சம்பத லக்ன வரம | 10% | தேசிய சிறுநீரக நிதியம் |
| மெகா பவர் | 10% | திரட்டிய நிதியம் |
| செவன சீட்டிழுப்பு | 10% | திரட்டிய நிதியம் - செவன நிதியம் |
| தன நிதானய | 10% | திரட்டிய நிதியம் |
| தருதிரி சம்பத | 10% | திரட்டிய நிதியம் - சிறுவர் பாதுகாப்பு - தேசிய நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் |
| **சீட்டிழுப்பு லொத்தர்கள்** | **சதவீதம்** | **திரட்டிய நிதியம் / அமைச்சு** |
| செவன | 10% | திரட்டிய நிதியம் - வீடமைப்பு அமைச்சு |
| சமுர்த்தி | 10% | திரட்டிய நிதியம் - சமுர்த்தி மற்றும் இளைஞர் விவகாரம் |

### 2.6.7 பரிசுகளிற்கான கணக்கீடு

ஒரு குறிப்பிட்ட சீட்டிழுப்பில் வெல்லப்படாத பரிசுப் பணத்தை செலவுப் பதிவாக வைப்பதற்காக சபை ஒரு பரிசு ஒதுக்க நிதியக் கணக்கைப் பராமரிப்பதுடன், 1997 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதி (திருத்திய) சட்டத்தின் பிரிவு 5(1) மற்றும் 1998 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க நிதி (திருத்திய) சட்டத்தின் பிரிவு 7(2) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அடுத்தடுத்த சீட்டிழுப்புக்களில் பரிசுகளை வழங்குவதற்காக அத்தகைய பரிசுத் தொகை திரட்டி வைக்கப்படுகின்றது.

**2.6.8 டொலர் பர்ச்சூன் லொத்தர்**

டொலர் பர்ச்சூன் லொத்தர் ஆன்லைனில் சம்பத் வங்கியின் ஊடாக விற்பனை செய்யப்படுகின்றது.

**2.6.9 இலத்திரனியல் - லொத்தர்**

சீட்டிழுக்கப்படும் லொத்தர் சீட்டுக்கள் சாதாரண விநியோக மார்க்கங்களிற்கு மேலதிகமாக குறுஞ்செய்திச் சேவை (SMS) மூலமும் விற்கப்படுகின்றன.

**2.6.10 கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்**

பின்வரும் திருத்திய நியமங்கள் சபையின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படவில்லை.

எஸ்எல்எ∴ப்ஆர்எஸ் 03 – வணிகச் சேர்க்கைகள் (வணிகமொன்றின் வரைவிலக்கணம்)

எஸ்எல்எ∴ப்ஆர்எஸ் 17 – காப்புறுதி ஒப்பந்தங்கள்

| குறிப்பு 03 - புரள்வு - பெ.சே.வ (VAT) உள்ளடங்கலாக | 2021 ரூபா | 2020 ரூபா |
|---|---|---|
| மஹஜன சம்பத | 6,475,960,400 | 5,760,190,600 |
| வாசனா சம்பத | 182,867,800 | 408,506,000 |
| கொவிசெத | 4,441,618,920 | 5,290,655,920 |
| சுபிரி வாசனா | 451,990,600 | 410,341,720 |
| ஜாதிக சம்பத | 562,273,960 | 629,895,000 |
| நீரோகா | - | 424,575,200 |
| மெகா பவர் | 2,233,985,800 | 3,182,546,200 |
| செவன சீட்டிழுக்கப்படும் லொத்தர் | 123,994,300 | 357,043,680 |
| தன நிதானய | 2,370,481,000 | 1,122,022,320 |
| தரு திரி சம்பத | 54,539,200 | 186,557,160 |
| சம்பத லக்ன வரம | 143,216,100 | - |
| மஹஜன சம்பத ஜனாபிஷேக | - | 91,249,200 |
| சமுர்தி | 30,000,000 | - |
| செவன - உடனடி | 221,138,000 | 157,562,000 |
| விசேட - உடனடி | - | 20,000,000 |
| | 17,292,066,080 | 18,041,145,000 |

| குறிப்பு 04-விற்பனைக் கிரயம் | 2021 ரூபா | 2020 ரூபா |
|---|---|---|
| சீட்டு அச்சிடும் செலவு | 425,035,522 | 443,032,509 |
| விற்பனை முகவர் தரகு | 3,242,262,390 | 3,382,714,688 |
| மாவட்ட விற்பனை முகவர் தரகு | 215,375,258 | 225,292,990 |
| பரிசுகள் | 8,352,173,636 | 8,667,549,257 |
| அரச பங்களிப்பு (விசேட வரி) | 2,162,030,441 | 2,205,079,779 |
| | 14,396,877,247 | 14,923,669,223 |

| குறிப்பு 04-01-சீட்டு அச்சீட்டுக் கட்டணம் | 2021 ரூபா | 2020 ரூபா |
|---|---|---|
| ஜனவரி 01ஆம் திகதி அன்று ஆரம்ப இருப்பு | | |
| சீட்டிழுப்பு லொத்தர் | 5,720,695 | 1,181,368 |
| செவன லொத்தர் | 1,400,473 | 3,666,784 |
| விசேட சுரண்டல் | 1,168,265 | 1,168,265 |
| | 8,289,433 | 6,016,417 |
| கூட்டு: குறித்த ஆண்டுக் காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட சீட்டுக்கள் | 420,408,641 | 445,305,525 |
| | 428,698,074 | 451,321,942 |
| கழி: டிசம்பர் 31அன்று இறுதி இருப்பு | | |
| சீட்டிழுப்பு லொத்தர் | 2,996,666 | 5,720,695 |
| செவன லொத்தர் | 665,886 | 1,400,473 |
| விசேட சுரண்டல் | - | 1,168,265 |
| | 3,662,552 | 8,289,433 |
| | 425,035,522 | 443,032,509 |

| குறிப்பு 04.02 - முகவர் தரகு | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|
| மஹஜன சம்பத | 1,214,242,575 | 1,080,035,738 |
| வாசனா சம்பத | 34,287,713 | 76,594,875 |
| கொவிசெத | 832,803,548 | 991,997,985 |
| சுபிரி வாசனா | 84,748,238 | 76,939,073 |
| ஜாதிக சம்பத | 105,426,368 | 118,105,313 |
| நீரோகா | - | 79,607,850 |
| மெகா பவர் | 418,872,338 | 596,727,413 |
| செவன சீட்டிழுக்கப்படும் லொத்தர் | 23,248,931 | 66,945,690 |
| தன நிதானய | 444,465,188 | 210,379,185 |
| தரு திரி சம்பத | 10,226,100 | 34,979,468 |
| சம்பத லக்ன வரம | 26,853,019 | - |
| மஹஜன சம்பத ஜனாபிஷேக | - | 17,109,225 |
| சமுர்தி | 5,625,000 | - |
| செவன - உடனடி | 41,463,375 | 29,542,875 |
| விசேட - உடனடி | - | 3,750,000 |
| | 3,242,262,390 | 3,382,714,688 |

| குறிப்பு 04.03-மாவட்ட முகவர் தரகு | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|
| மஹஜன சம்பத | 80,911,835 | 72,088,011 |
| வாசனா சம்பத | 2,285,783 | 5,106,553 |
| கொவிசெத | 55,460,228 | 66,180,261 |
| சுபிரி வாசனா | 5,649,641 | 5,146,834 |
| ஜாதிக சம்பத | 7,027,947 | 7,894,587 |
| நீரோகா | - | 5,320,647 |
| மெகா பவர் | 27,913,719 | 39,810,660 |
| செவன சீட்டிழுக்கப்படும் லொத்தர் | 1,549,895 | 4,475,951 |
| தன நிதானய | 29,623,509 | 14,045,923 |
| தரு திரி சம்பத | 681,743 | 2,329,713 |
| சம்பத லக்ன வரம | 1,759,580 | - |
| மஹஜன சம்பத ஜனாபிஷேக | - | 1,118,232 |
| சமுர்தி | 300,000 | - |
| செவன - உடனடி | 2,211,380 | 1,575,620 |
| விசேட - உடனடி | - | 200,000 |
| | 215,375,258 | 225,292,990 |

| குறிப்பு 04.04 – பரிசுகள் | **2021** **ரூபா** | 2020 ரூபா |
|---|---|---|
| மஹஜன சம்பத | 3,142,710,614 | 2,822,550,384 |
| வாசனா சம்பத | 90,518,482 | 191,997,900 |
| கொவிசெத | 2,181,733,226 | 2,486,664,462 |
| சுபிரி வாசனா | 227,523,780 | 197,350,059 |
| ஜாதிக சம்பத | 268,924,496 | 296,051,110 |
| நீரோகா | - | 208,042,128 |
| மெகா பவர் | 966,214,913 | 1,527,872,740 |
| செவன சீட்டிழுக்கப்படும் லொத்தர் | 58,360,510 | 174,953,023 |
| தன நிதானய | 1,181,685,270 | 527,350,950 |
| தரு திரி சம்பத | 28,881,503 | 87,684,655 |
| மஹஜன சம்பத ஜனாபிஷேக | - | 52,924,236 |
| மஹஜன சம்பத ஜனாபிஷேக - விசேட பரிசுகள் செலுத்தப்பட்டது | 2,234,600 | - |
| சம்பத லக்ன வரம | 71,483,102 | - |
| சமுர்தி | 14,700,000 | - |
| செவன - உடனடி | 117,203,140 | 83,507,610 |
| விசேட - உடனடி | - | 10,600,000 |
| | 8,352,173,636 | 8,667,549,257 |

| குறிப்பு 04-05 – அரச பங்களிப்பு (விசேட வரி) | **2021** **ரூபா** | 2020 ரூபா |
|---|---|---|
| **திரட்டிய நிதியத்துக்கான பங்களிப்பு** | | |
| மஹஜன சம்பத | 1,068,533,466 | 950,431,449 |
| வாசனா சம்பத | 30,173,187 | 67,403,490 |
| கொவிசெத | 444,161,892 | 529,065,592 |
| சுபிரி வாசனா | 45,199,060 | 41,034,172 |
| ஜாதிக சம்பத | 56,227,396 | 62,989,500 |
| மெகா பவர் | 223,398,580 | 318,254,620 |
| செவன சீட்டிழுக்கப்படும் லொத்தர் | 12,399,430 | 35,704,368 |
| தன நிதானய | 237,048,100 | 112,202,232 |
| தரு திரி சம்பத | 5,453,920 | 18,655,716 |
| மஹஜன சம்பத ஜனாபிஷேக | - | 9,124,920 |
| சமுர்த்தி | 3,000,000 | - |
| செவன - உடனடி | 22,113,800 | 15,756,200 |
| விசேட - உடனடி | - | 2,000,000 |
| | 2,147,708,831 | 2,162,622,259 |
| **தேசிய சிறுநீரக நிதியத்திற்கு பங்களிப்பு** | | |
| நீரோகா | - | 42,457,520 |
| சம்பத லக்ன வரம | 14,321,610 | - |
| | 14,321,610 | 42,457,520 |
| | 2,162,030,441 | 2,205,079,779 |

| குறிப்பு 05-ஏனைய வருமானம் | **2021** **ரூபா** | 2020 ரூபா |
|---|---|---|
| வட்டி வருமானம் | 332,969,241 | 353,365,849 |
| ஏனைய வருமானம் | 83,053,410 | 69,552,244 |
| | 416,022,651 | 422,918,093 |

| குறிப்பு 06 - விற்பனை சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகச் செலவுகள் | **2021** **ரூபா** | 2020 ரூபா |
|---|---|---|
| விநியோகச் செலவு | 146,651,612 | 145,937,122 |
| விற்பனை சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகச் செலவுகள் | 900,376,746 | 724,055,511 |
| தொடர்பாடற் செலவுகள் | 27,074,560 | 23,009,810 |
| மொத்தம் | 1,074,102,918 | 893,002,443 |

| குறிப்பு 06-01-விநியோகச் செலவு | **2021** **ரூபா** | 2020 ரூபா |
|---|---|---|
| மோட்டார் வாகனம் - எரிபொருள் | 10,957,970 | 8,853,598 |
| மோட்டார் வாகனம் - திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு | 6,221,074 | 3,684,330 |
| மோட்டார் வாகனம் - காப்புறுதி | 791,008 | 1,315,098 |
| மோட்டார் வாகனம் - வருமான உத்தரவுப் பத்திரம் | 248,221 | 270,313 |
| மோட்டார் வாகனம் - டயர்கள் மற்றும் ரியூப்கள் | 2,042,892 | 1,030,640 |
| மோட்டார் வாகனம் - பராமரிப்பு மற்றும் ஏனைய | 4,353,213 | 3,121,509 |
| மோட்டார் வாகனம் - தேய்மானம் | 7,981,885 | 10,767,230 |
| சீட்டுக்களுக்கான போக்குவரத்துச் செலவு | 15,251,018 | 10,194,098 |
| முகவர் நிவாரணம் - திருப்பப்பட்ட சீட்டுக்களுக்கான செலவு | 209,326 | 43,963 |
| மாவட்ட விற்பனை முகவர்கள் மற்றும் முகவர்களுக்கான பயிற்சிகள் மற்றும் கூட்டங்களுக்கான செலவுகள் | 2,197,855 | 772,100 |
| முகவர்களின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில் | 670,500 | 19,500 |
| முகவர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கான மருத்துவ மற்றும் காப்புறுதிச் செலவுகள் | 5,913,000 | 4,932,000 |
| முகவர்களுக்கான மேலதிக விற்பனை ஊக்குவிப்புக் கொடுப்பனவு | 35,618,109 | 53,761,862 |
| வெற்றியாளர்களை உருவாக்கும் விற்பனை முகவர்களுக்கான ஊக்குவிப்பு | 1,970,000 | 2,288,000 |
| முகவர் மற்றும் விற்பனையாளர் நிவாரணம் - கொவிட் 19 | 51,867,500 | 42,760,006 |
| அசரன சரண நிதியத்துக்கான கொடுப்பனவு (சம்பத லக்ன வரம / நீரோகா ஊக்குவிப்புக் கொடுப்பனவு) | 358,040 | 2,122,876 |
| | 146,651,612 | 145,937,122 |

| குறிப்பு 06-02 - சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை ஊக்குவிப்புச் செலவுகள் | **2021** **ரூபா** | 2020 ரூபா |
|---|---|---|
| தயாரிப்பு மற்றும் ஒளிபரப்பு | 366,642,160 | 385,411,583 |
| லொத்தர் முடிவுகளுக்கான விளம்பரப்படுத்தல் | 84,678,899 | 92,796,523 |
| வியாபாரக் குறியீட்டுக்கான ஊக்குவிப்பு விளம்பரப்படுத்தல் | 345,359,984 | 134,279,982 |
| கூட்டாண்மைப் பிரதிமை விளம்பரப்படுத்தல் | 73,049,703 | 49,847,273 |
| CSR - கூட்டாண்மைச் சமூகப் பொறுப்பு | 15,689,000 | 24,888,075 |
| BTL விளம்பரச் செலவுகள் | - | 27,264,975 |
| பொதுத் தொடர்பாடல் செலவுகள் | 3,157,000 | 4,531,100 |
| முகவர்களுக்கான விற்பனைக் கூடு மற்றும் ஏனைய செலவுகள் | 11,800,000 | 5,036,000 |
| | 900,376,746 | 724,055,511 |

| குறிப்பு 06-03 - தொடர்பாடல் செலவுகள் | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|
| தபால் மற்றும் தந்தி | 74,277 | 62,085 |
| தொலைபேசி, தொலைநகல் மற்றும் இணையம் | 12,699,197 | 12,194,098 |
| அச்சு மற்றும் காகிதாகிகள் | 13,533,276 | 10,124,684 |
| பத்திரிகை அறிவித்தல்கள் | 767,811 | 628,943 |
| | 27,074,560 | 23,009,810 |

| குறிப்பு 07 - நிர்வாகச் செலவுகள் | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|
| பணியாளர் ஊதியங்கள் | 471,893,975 | 449,599,524 |
| நிறுவுதற் செலவுகள் | 129,347,665 | 145,683,933 |
| ஏனைய நிர்வாகச் செலவுகள் | 210,703,778 | 177,216,800 |
| | 811,945,418 | 772,500,258 |

| குறிப்பு 08 - நிதி மற்றும் ஏனைய செலவு | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|
| வங்கிக் கட்டணங்கள் | 5,173,915 | 4,347,146 |
| பழைய நிலுவைகளை சரி செய்தல் மற்றும் தள்ளுபடி செய்தல் | 7,314,579 | - |
| இலங்கை சேமிப்பு வங்கியின் முதலீட்டை பதிவழித்தல் | - | 5,336,575 |
| மொத்தம் | 12,488,494 | 9,683,721 |

| குறிப்பு 09 - வருமான வரி | 2021<br>ரூபா | 2020<br>ரூபா |
|---|---|---|
| நடப்பாண்டு வருமான வரி | 8,211,883 | 354,853,580 |
| கடந்த ஆண்டு வருமான வரி - சரி செய்தல் மற்றும் சீராக்கல் | 37,203,548 | - |
| பிற்போடப்பட்ட வரி மாற்றம் | (2,409,911) | (3,205,350) |
